பக்கங்கள்: இருபது

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.utayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 29 ஞாயிற்றுக்கிழமை (14.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:018

# மாகாண சபைகளுக்கு திட்டவட்டமான அதிகாரப் பரவல் முறை யோசனைகள்

## அ.க.பிரதிநிதிகள் குழுவினர் இணக்கம் என்கிறார் விதாரண



கொழும்பு, டிசெம்பர்14

மத்திய அரசாங்கத்துக்கும் மாகாண சபைகளுக்கும் இடையில் அதிகாரங்களைப் பகிர் வதற்கான - திட்டவட்டமாகப் பங்கிடுவதற்கான - முறை ஒன்று குறித்து அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு புதிய திட்டம் - யோசனை- ஒன்றை முன்வைக்கும். இது சம்பந்தமான கருத் தொற்றுமை மேற்படி குழுவில் எட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

பெரும்பான்மையின மக்களுக்குப் பாதகமில்லாத விதத்தில் சிறுபான்மை மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் புதியயோசனை வடிவமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## அடம்பனிலும் கடும் மோதல்

கொழும்பு, டிசெ. 14

கிளிநொச்சியை நோக்கி முன்னேறும் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன என்று படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

அடம்பன் மற்றும் நவ்விப் பகுதிகளி (20 ஆம் பக்கம் பார்க்க)

## தகவல் தொழில்நுட்பவியலாளர் தமிழகத்தில் நேற்று உண்ணாவிரதம்

சென்னை, டிசெ. 14

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தங்கள்து உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் தமிழகத்தில் தகவல் தொழில் நுட்பத் துறையில் பணியாற்றும் இளை ஞர்கள் நேற்று உண்ணாவிரதம் மேற் கொண்டனர்.

பழ.நெடுமாறன், சுப.வீரபாண்டியன், சீமான் உட்பட பலர் அங்கு உரையாற்றினர்.(அ-1)

## முல்லைத்தீவு நகரத்தை படையினர் நேற்று அண்மித்துவிட்டதாக அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 14

அரசாங்கப் படையினர் முல்லைத்தீவு நகரத்தை அண்மித்துவிட்டனர் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித் தது.

59ஆவது படையணி நேற்று முன்தினம் நாகச்சோலை காட்டை நோக்கி நடத்திய தொடர் இராணுவ நடவடிக்கையின் விளைவாக முல்லைத்தீவு நகரை அண்மித்துவிட்டனர் என்று படைத்தரப்பு மேலும் அறிவித்திருக்கிறது.

தண்ணீரூற்று, அலம்பில், நெடுங்கேணி, மாங்குளம் ஆகிய பகுதிகள் ஊடாக படையினர் வெவ்வேறாகப் பிரிந்து சென்று மேற் கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளின் (20 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற அமர்வில் பிரசன்னமாக வேண்டியதால் பிரணாப் முகர்ஜியின் இலங்கை விஜயம் உடனடியாக நடைபெறும் சாத்தியமில்லை

புதுடில்லி, டிசெ.14

வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் இலங்கை விஜயம் இப்போதைக்கு - ஒரு சில நாள்களில் - இடம் பெறமாட்டாது என்று ராஜதந்திர வட்டாரங்கள் இங்கு தெரிவித்தன.

அமைச்சர் பிரணாப் முகர்ஜி இந்த வாரத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு யுத்த நிறுத்தம் தொடர்பாக இலங்கை (20 ஆம் பக்கம் பார்க்க)

## வட்டக்கச்சி, கனகபுரம் பகுதிகள் மீது ஷெல் வீச்சு 5 மாதக் குழந்தை உட்பட மூன்று பேர் பலி

கிளிநொச்சி, டிசெ.14

கிளிநொச்சி வட்டக்கச்சி, கனகபுரம் பகுதிகளை நோக்கி நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் ஐந்து மாதக் குழந்தை உட்பட மூவர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை முதல் கிளிநொச்சியையும் அதனை அண்டிய பகுதிகளையும் நோக்கி சரமாரியான ஷெல் தாக்குதலை படையினர் மேற்கொண்டனர்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி-பரந்தனில் நேற்று 9 தடவைகள் விமானக் குண்டுவீச்சு

கொழும்பு, டிசெ.14

கிளிநொச்சி மற்றும் பரந்தன் பகுதிகளில் நேற்றுக் காலை 6.30 மணி முதல் விட்டுவிட்டு 9 தடவைகள் விமானத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார இத் தகவலை தெரிவித்தார்.

கிளிநொச்சிக்கு தெற்கேயும் மேற்கேயும் படை நடவடிக் கைகளில் ஈடுபட்டுள்ள படையினருக்கு உதவியாக விடுதலைப்புலிகளின் இலக்குகள் மீது இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் தொலைத் தொடர்புகளை வழி மறித்து கேட்டபோது சிரேஷ்ட தலைவர் ஒருவர் உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.

தரையில் முன்னேறிக்கொண்டிருக்கும் (20 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் அவலங்களை நேரில் கேட்டறிந்தார் யாழ். ஆயர்

யாழ்ப்பாணம், டிசெ.14

வன்னியில் போரினால் அவலப்படும் மக்களை நேரில் சந்தித்து யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தர நாயகம் ஆறுதல் கூறியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை (20 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னேஸ்வரம் தீபத் திருவிழாவுக்கு சென்றவர்கள் தீவிர சோதனைக்குள்

கொழும்பு, டிசெ.14

சிலாபம் முன்னேஸ்வரம் ஆலயத்தில் இடம்பெற்ற கார்த்திகைத் தீபத் திருவிழாவுக்கு சென்றவர்கள் பொலீஸாரால் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஆலயப் பகுதியையும் அதனைச் சூழவுள்ள பகுதியையும் சுற்றிவளைத்த (20 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியை கைப்பற்றும் படையினரின் இரண்டு முன்நகர்வுகளை முறியடித்து விட்டோம்

### அதனால் போர் நிலையில் மாற்றம் என்கிறார் தளபதி வேலவன்

கிளிநொச்சி, டிசெ.14

கிளிநொச்சியைக் கைப்பற்ற இராணுவத்தினர் மேற்கொண்ட இரண்டு பெரிய முன்நகர்வுகளை நாம் முறியடித்து விட்டோம்.

குஞ்சுப்பரந்தன் ஊடாக எடுக்கப்பட்ட முன்நகர்வும், புதுமுறிப்புக்குளம் ஊடாக எடுக்கப்பட்ட படையினரின் முன்நகர்வும் முற்றாக வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன.

இதன் மூலம் போர்க்களத்தில் சண்டையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் இம்ரான்-பாண்டியன் படையணியின் (20 ஆம் பக்கம் பார்க்க)

வயிற்றோட்டம் வந்தால்.....

- உடலிலிருந்து அதிகளவு நீர் வெளியேறி உடலில் நீர்த்தன்மை வற்றிப்போகலாம். நீரிழப்பை ஈடுசெய்ய போதியளவு நீராகாரங்கள் (கொதித்தாறிய நீர், இளநீர், பழச்சாறுகள், தேனீர்) அருந்துங்கள்.
- வயிற்றோட்ம் கடுமையாக இருப்பின் உடலிலிருந்து நீர், கனியுப்புகளின் இழப்பை ஈடுசெய்ய ஜீவனி வழங்கப்பட வேண்டும்.
- ஒரு பக்கற் ஜீவனி ஒரு லீற்றர் கொதித்தாறிய நீரில் கரைக்கப்பட வேண்டும். ஒரு முறை கரைக்கப்பட்ட ஜீவனி 24 மணித்தியாலங்களினுள் பாவிக்கப்படவேண்டும்.
- வயிற்றோட்டத்தின் போதும் உணவு வழங்குவதை நிறுத்தாது இலகுவில் சமிபாடடையக்கூடிய உணவுகள் வழங்கப்பட வேண்டும்.
- வயிற்றோட்டம் கடுமையாக இருப்பின் அல்லது காய்ச்சல், மலத்துடன் இரத்தம், சீதம் வெளியேறுதல் போன்ற அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாகத் தகுந்த வைத்திய ஆலோசனை பெறப்படவேண்டும்.

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

அனுசரணை: Care International

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# வெளிநாடுகளில் உயர்கல்வி

பெலாரூஸ் (Belarus), போலந்து (Poland), ரஷ்யா (Russia), உக்ரைன் (Ukraine), மலேஷியா (Malaysia), சிங்கப்பூர் (Singapore)

- MBBS/ MD ஆங்கிலம் (6 வருடங்கள்)
- சகல துறை கற்கை நெறிகள் (மாணவரின் விருப்பு, நிதி நிலைமைக்கேற்ப கற்கை நெறி தெரிவுகள்)
- O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் அதிபரின் கடிதத்துடன் விண்ணப்பிக்கலாம்.
- 100% விசா உத்தரவாதம், வங்கிநிலுவைகள், ஸ்பொன்சர் தேவையில்லை.
- விடுமுறை Seminar போன்றவற்றிற்கு Germany, Poland போன்ற நாடுகளுக்கு சென்று வர ஏற்பாடுகள்.

**OVERSEAS STUDENT PROGRAMME**
இல.02, திருவள்ளுவர் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே. 0777250555, 021 222 9042


## கொக்குவில் முன்பள்ளியின் கலைவிழா இன்று

கொக்குவில் மத்திய சனசமூகநிலைய இந்து முன்பள்ளியின் வருடாந்த கலை விழாவும் பாடசாலைக்கு வழியனுப்பும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்பபாடசாலையில் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ்.இந்துக் கல்லூரி சிரேஷ்ட கணித ஆசிரியர் செ.தவராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (1)


**ICT GIT**

புதியபிரிவுகள் :-
A/L 2010,2011 & Gr 10,Gr11
*General Information Technology -GIT*
*Information and Communication Technology -ICT*
உங்கள் வீடுகளுக்கு வந்து அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும. **A/L 2009** துரித மீட்டல் வகுப்புகள்.
**Medium:- English / Tamil**
*By:- V.Balaruban (MCP,Pro.Dip.in.IT)*
*T.p :- 0776341499*

**GIT ICT**


# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் சின்னத்தம்பி



அராலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், சிவன்பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சின்னத்தம்பி நேற்றுமுன்தினம் (12.12.2008) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - முத்துப்பிள்ளை தம்பதியினரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - செல்லம் தம்பதியினரின் மருமகனும் தங்கமுத்துவின் அன்புக் கணவரும் செல்லத்துரை, காலஞ்சென்றவர்களான கதிராசிப்பிள்ளை, வேலுப்பிள்ளை, சுந்தரம், சிவகுரு ஆகியோரின் மூத்த சகோதரனும் மற்றும் யோகரெத்தினம், பத்மநாதன், நடராசா, துரைசிங்கம், சந்திரசேகரம், புஸ்பராணி ஆகியோரின் அருமைத் தந்தையும் சிவராசா, தனலக்ஷ்மி, பத்மராணி, பத்மாவதி, தேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2008) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*144, சிவன்பண்ணை வீதி,* தகவல்:
*யாழ்ப்பாணம். T.P. 021 222 5129* சி.யோகரெத்தினம் (மகன்).

## மனுவேற்பிள்ளை வேதநாயகம்

(இளைப்பாறிய உத்தியோகத்தர், கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் பதுளையை வதிவிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை வேதநாயகம் 13.12.2008 அன்று பதுளையில் காலமானார்.

அன்னார் திரு.திருமதி மனுவேற்பிள்ளையின் அன்பு மகனும் திருமதி செல்வம் வேதநாயகத்தின்(இளைப்பாறிய ஆசிரியர், புனித சாள்ஸ் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்) கணவரும், திரு.திருமதி மாக்கிரட் பஸ்ரியாம்பிள்ளையின் அன்பு மருமகனும், தம்பிஐயா, பவளம், காலஞ்சென்ற ஜோசப், மேரிலூயிஸ், நேசம்மா, பொண்றோஸ் ஆகியோரின்அன்புச் சகோதரனும், Dr.கிறேஷியன்(USA), எறிக்(UK), பிறயன் (Canada), றொஷான் (Canada), Dr.கிறிஷான் (மாகாண பொது வைத்தியசாலை, பதுளை) ஆகியோரின் அன்புத் தந்தையும், மஜலா, மேசி, ஷெறின், ஷாமினி, சுபோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், மாக்கிரட், நிக்கலஸ், டாறியோ, லூக்சிகா, தர்ஷிகா, பிறண்டன், மறினோ, மாக்கோ, மத்தேயு, டிவினோ, அட்றியன், ஆர்த்தி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.12.2008) சனிக்கிழமை பி.ப 4 மணியளவில் மரியாள் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பதுளை பொதுமயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
Dr.கிறிஷான் வேதநாயகம்
(மகன்).

## திருமதி இராசரத்தினம் செல்லம்மா



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் செல்லம்மா 12.12.2008 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் (ஓய்வுபெற்ற சுகாதாரப் பரிசோதகர் [P.H.I]) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இலங்கையர்- முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-குஞ்சுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் சரவணமுத்து(ஓய்வுபெற்ற நீர்பாசனத்திணைக்கள உத்தியோகத்தர்), செல்வராஜேஸ்வரி, சரவணபவானந்தன், ஸ்ரீஸ்கந்தராஜா (Asst, Eng, SLT. OPMC, Narhanpitta) ஆகியோரின் அன்புத் தாயாரும் சித்திரலேகா, ஸ்ரீகாந்தன் (ஓய்வுபெற்ற எழுது வினைஞர் உள்ளூராட்சித் திணைக்களம்), சாந்தநாயகி, சந்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சசிகுமார், பிரசன்னா, கேதாரகௌரி, சுமதி, பாலமுரளி, பாலநந்தினி, செல்வவிநாயகம், கவிதா, நித்தியலக்ஷ்மி, ஸ்ரீரங்கனி, கந்தசாமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபலாஷ், தேனுகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2008) திங்கட்கிழமை மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி ஊத்தல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி வடக்கு,* தகவல் :
*கைதடி.* இ.சரவணமுத்து(மகன்).

# வடலியடைப்பில் விபத்து; குடும்பஸ்தர் மரணம்

சித்தங்கேணி, டிசெ.14

வடலியடைப்பில் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற விபத்து ஒன்றில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மரணமானார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து கொண்டிருந்த மினிபஸ்ஸும் ஹண்டர் வாகனமும் மோதிக்கொண்டன. அப்போது மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தவர் அந்த விபத்தில் சிக்கி காயமடைந்தார். வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்ட வழியில் அவர் உயிரிழந்தார்.

பண்ணாகத்தைச் சேர்ந்த துரைராசா கணேசலிங்கம் (வயது 48) என்பவரே மரணமானவர் ஆவார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. மரண விசாரணைகள் இன்று நடைபெறும்.

சம்பவ இடத்துக்குச் சென்ற இளவாலைப் பொலிஸார், சம்பவத்தில் சம்பந்தப்பட்ட மினிபஸ், ஹண்டர், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றைத் தமது பாதுகாப்பில் வைத்துள்ளனர். (அ-1-112-25)

# புதன்கிழமை தொடக்கம் தகவல் தொழில்நுட்ப பூங்கா வகுப்புகள்

யாழ்ப்பாணம் தகவல் தொழில் நுட்பப் பூங்கா செயற்பாடுகள் எதிர்வரும் புதன்கிழமை மீண்டும் ஆரம்பமாகும்.

நவம்பர் மாத இறுதியில் இயற்கை அனர்த்தம் காரணமாக தகவல் தொழில் நுட்ப பூங்காவிற்கு ஏற்பட்ட கடுமையான சேதத்தினால் 14.12.2008 வரை வகுப்புகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. 14 பிரிவுகளுக்குமுரிய (PC,DTP,HW) விரிவுரைகள் யாவும் இம்மாதம் 17 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் வழமை போல இடம்பெறும் என்று பூங்காவின் நிறைவேற்று அதிகாரி தெரிவித்தார்.

# வெள்ள அகதிகளுக்கு நிவாரணப் பொருள்கள்

சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பு பகுதியில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு உணவுப்பண்டம் அல்லாத பொருள்கள் நேற்று விநியோகிக்கப்பட்டன.

இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவன அனுசரணையுடன் சாந்தீகம் நிறுவனத்தினர் இந்தப் பொருள்களை பிரிவு கிராம அலுவலர்கள் அலுவலகத்தில் வைத்து வழங்கினர்.


## வீடு, காணி விற்பனைக்கு

*யாழ். நகரப்பகுதியை அண்டிய பிறவுண் வீதிக்கும் யாழ்.இந்துக்கல்லூரிக்கும் இடையில் நீராவியடியில் ஒரு பரப்புக் காணியுடன் கூடிய கல்வீடு, நல்ல சூழலில் உடன் விற்பனைக்குண்டு.*

தொ.பே:- 0212228737, 077 5296644.


# மரண அறிவித்தல்

## தர்மலிங்கம் புஸ்பராணி

கோண்டாவில் மேற்கு, கலட்டி ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் மனைவி புஸ்பராணி நேற்று (13.12.2008) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது மரணச் சடங்குகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
[illegible]
*கலட்டி லேன்,* [வருமான மேற்பார்வையாளர்
*கோண்டாவில்.* பிரதேச சபை, மானிப்பாய்].

# மரண அறிவித்தல்கள்

## அபிராமிப்பிள்ளை சிவப்பிரகாசம்

மல்லாகம், நீலியம்பனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அபிராமிப்பிள்ளை சிவப்பிரகாசம் நேற்று (13.12.2008) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னம்பலம் - தையல்நாயகி தம்பதியினரின் அன்பு மகளும் அமரர் சரவணமுத்து சிவப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், சேனாதிராசா, விசாலாட்சி, கனகசுந்தரி ஆகியோர்களின் பாசமிகு சகோதரியும் நாகேந்திரம் (முன்னாள் விநாயகர் பேக்கரி உரிமையாளர்), நகுலாம்பிகை (குடும்பநல சேவை பணியாளர்), வள்ளிநாயகி (M.P.C.S, அளவெட்டி - மல்லாகம்), பாலாம்பிகை ஆகியோரின் தாயாரும் விநாயகமூர்த்தி, சிவபாக்கியம், அன்னபாக்கியம், தெய்வநாயகி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் பெரியதாயாரும் பிறைசூடி, கெங்காதரன், வரதர் ஆகியோரின் மாமியாரும் சிந்துஜா, சுகன்யா, தாட்ஷாயினி, கஜானி, கேமலதா, விக்கினேஸ்வரி ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (14.12.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நீலியம்பனை,* தகவல்:
*மல்லாகம்.* மக்கள்.

## திருமதி செல்லத்துரை இராசமணி



மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் இல.86, ஸ்ரேசன் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை இராசமணி நேற்று (13.12.2008) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாத்திரி சுப்பையா-சின்னத்தங்கச்சி தம்பதியினரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும் அமரர் ஆறுமுகம் செல்லத்துரையின் அன்பு மனைவியும், சிவராசா, காலஞ்சென்ற குணசிங்கம் மற்றும் இராசாத்தியம்மா, ஞானரட்ணம் (பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும், பரமேஸ்வரி, ஸ்ரீகரன் (அமரர்), றாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கங்காஜினி, மதினகாஜினி, சுகந்தினி, பிரதீபா- வருணகுலசீலன், பிரசாந்தன், பிரதாபன், பிரகீதா ஆகியோரின் பேர்த்தியும், சரண்ஜா, கஜேதன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நிரந்தரமுகவரி:*
*4 ஆம் வட்டாரம், மண்கும்பான் கிழக்கு.*

*தற்காலிகமுகவரி:*
*இல.86, ஸ்ரேசன் வீதி (பிரம்படி),*
*கொக்குவில் கிழக்கு,* தகவல்:
*கொக்குவில்.* செ.சிவராசா (மகன்).

## கணேசபிள்ளை யோசேப் தெய்வேந்திரன்

(இளைப்பாறிய சிறிலங்கா விமானப்படை அதிகாரி)



யாழ்.சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் இல.772, ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசபிள்ளை யோசேப் தெய்வேந்திரன் (இளைப்பாறிய சிறிலங்கா விமானப்படை அதிகாரி) நேற்று (13.12.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசபிள்ளை - பிரான்சிஸ்கா தம்பதியினரின் அன்பு மகனும் எட்மன் - மற்றில்டா தம்பதியினரின் அன்பு மருமகனும் ஜேற்றுட் பிரான்சிஸ்காவின் அன்புக் கணவரும் டெனிஸ் தர்சான் (பிரான்ஸ்), மேரியன் டினூஷியா கங்கா (ஜேர்மன்), கலிஸ்ரஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரன் (கனடா), அழகேந்திரன் (ஜேர்மன்), நகுலேந்திரன் (இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்), யோகேந்திரன் (இளைப்பாறிய புகையிரதத் திணைக்கள அதிகாரி), றூபேந்திரன் (கனடா), தபேந்திரன் (யாழ்.பல்கலைக்கழக அதிகாரி), அனற் தமயந்தி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் யூலியஸ், கமில்ரன், அன்சிற்றா, சப்சின், கிறிஸ்ரிராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சூசைமுத்துநேசராசா, அனா எலிசபெத் ஆகியோரின் மாமனாரும் நன்சி, யூலியான், மெலிசா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நாளை (15.12.2008) திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யுவானியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் யாழ். புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாது பெய்த பெருமழையும் புயலும் ஓய்ந்தும் அவலமும் துன்பமும் மக்களை விடாது துரத்துகின்றன...?

கடந்தமாத இறுதியில் அனர்த்தங்களைத் தந்த 'நிஷா' புயலும், பெருமழையும் ஓய்ந்து, யாழ்.குடாநாட்டில் இயல்புநிலை தோன்றத் தொடங்கியுள்ளது. எனினும் மழைவிட்டும் தூவானம் விடாத கதைபோல, மழையால் உண்டான பாதிப்புகள் இன்னமும் தொடரவே செய்கின்றன. மழையினால் ஏற்பட்ட அவலத்தையும், அதன்பின்னான துயரத்தின் நீட்சியையும் கூறுகின்ற மக்களின் குரல்கள் இங்கே பதிவாகியுள்ளன.

**"குண்டுமழையில் குழந்தைகளை உயிர் காத்த தென்னை மரங்கள் பெருமழையால் சரிந்த அவலம்"**

**லட்சுமிகாந்தன்**

[கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயிலடி]

எமது வளவில் எங்கள் வீட்டைவிட, இடம்பெயர்ந்த வேறு இருவரின் மண்வீடுகளும் இருந்தன. மழை பெய்து, வெள்ளம் வரத்தொடங்கிய அன்றிரவு அந்த மண்வீடுகளில் இருந்த சின்னப் பிள்ளைகள் எங்களது வீட்டில்தான் தங்கினார்கள். இரவு மழைபெய்து கடும் புயலும் அடிக்கத் தொடங்கியது. ஒருவரும் வீட்டை விட்டு வெளியேற முடியாத இக்கட்டுநிலை, சுற்றிச் சுழன்றடித்த காற்றின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாது வளவில் நின்ற தென்னை மரங்களெல்லாம் சொல்லி வைத்தது மாதிரி ஒவ்வொன்றாய் சாயத்தொடங்கிவிட்டன.



இதில் வேதனை, வேடிக்கை என்னவென்றால் வீழ்ந்தவற்றில் பன்னிரண்டு தென்னை மரங்கள் இரண்டு மண் வீடுகளின்மீதே வீழ்ந்துள்ளன. தெய்வாதீனமாக வீட்டிலிருந்தவர்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை. எனினும் நடுநிசியில்,கொட்டும் மழையில் நனைய வேண்டிய அவலம் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது.

இந்த மழையாலும், புயல்காற்றாலும் வீழ்ந்துபோன தென்னை மரங்கள் ஒரு காலத்தில் பல சிறுவர்களின் உயிரைக் காத்த நிகழ்வும் நடைபெற்றிருக்கிறது.

இதுதான் முன்னைய காலத்தில் உயிர் காத்த தென்னந்தோப்பு...



யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டில இருந்தபோது, நந்தாவில் அம்மன் கோயில் பகுதியில் ஒருமுறை விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது. அப்போது நந்தாவில் அம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள பாலர் பாடசாலையில் கல்வி கற்ற 42 சிறுவர்கள் செய்வதறியாது ஓடி வந்து-இந்தத் தென்னைகளின் கீழேதான் தமது உயிரைப் பாதுகாக்கப் பதுங்கிக் கொண்டார்கள். அன்றைக்கு நடந்த விமானத் தாக்குதலில் அம்மன் கோயிலில் இருந்த இருவர் கொல்லப்பட்டனர். ஆனால் விமானக் குண்டின் சிதறல்களை இங்கிருந்த தென்னை மரங்கள் தாங்கிக் கொண்டதால், தென்னை மரங்களுக்குக் கீழே பதுங்கியிருந்த சிறுவர்களுக்கு எவ்வித பாதிப்பும் நிகழவில்லை.

அன்று குண்டு மழையிலிருந்து பல குழந்தைகளின் உயிர்களைக் காப்பாற்றிய அந்தத் தென்னை மரங்கள் இந்த அடை மழையில் வீழ்ந்ததுதான் சோகம்.

## சேறும், சகதியும் நிறைந்த திறந்தவெளியில் சோறாக்கி உண்கின்ற கஷ்டம்!

**"சீறி வரும் வெள்ளத்தின் முன்னால் இடிந்து விழுந்த மண் சுவர் அணைகளும் தாக்குப் பிடிக்க முடியவில்லை..."**

**வை.இரத்தினசிங்கம்**

[மருதனார்மடம் சந்தையின் பின்புறப் பகுதி]

இந்தப்பகுதி இயல்பாகவே சற்றுப் பள்ளமான இடம். அதனால் வழமையாகச் சாதாரண மழை பெய்தாலே, உடனேயே வெள்ளம் வந்துவிடும்.



ஆனால் ஒருபோதும் வீடுகளுக்குள் வெள்ளம புகுந்ததில்லை. இம்முறை மழை அகோரமாகப் பெய்யத் தொடங்கியபோதே வீடுகளுக்குள் வெள்ளம் வரப்போகின்றது என்று எங்களுக்குத் தெரிந்துவிட்டது. எனினும் இவ்வளவு தூரம் சேதம் வரும் என்று நாங்கள் கனவில்கூட எண்ணவில்லை.

இரவு ஒன்பது மணிபோல வெள்ளம் எங்கள் வீட்டுக்குள் மெதுவாக வரத்தொடங்கி விட்டது. எங்கள் வீட்டுச் சுவர்கள் எல்லாம் மண்ணால்தான் கட்டப்பட்டவை. அந்த மண்சுவர்கள் வெள்ளத்தின் வேகத்தில் ஒவ்வொன்றாய் விழத் தொடங்கிவிட்டன.

அவ்வாறு வீழ்ந்த மண்சுவர்களை, கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது, வெள்ளம் வீடுகளுக்குள் உட்புகாதவாறு, அணைபோல அமைத்தோம். விடாது பெய்த பெருமழையின் முன்னால் இந்த மண்ணாலான சுவர்கள் எம்மாத்திரம்?

விடியற்காலை மூன்று, மூன்றரை மணியளவில் மண் அணையை உடைத்துக் கொண்டு குபுகுபுவென வெள்ளம் சீறிக்கொண்டு வரத்தொடங்கி விட்டது. இனியும் இருந்தால் நிலைமை சிக்கலாவிடும் என்பதை உணர்ந்து வெளியேறத் தீர்மானித்தோம்.

மருதனார்மடம் சந்தைக்குப் பின்புறமுள்ள குடியிருப்புப் பகுதியில் அழிவடைந்த வீடுகளில் ஒன்று...



ஆனால் எங்கே போவது என்று எங்களுக்குத் தெரியவில்லை. எங்கு பார்த்தாலும் ஒரே வெள்ளமயம். பிறகு எமது பகுதியைச் சேர்ந்த சிலர் ஆஞ்சநேயர் மண்டபத்துக்குப் போவதை அறிந்து அவர்களோடு சேர்ந்து நாமும் சென்றோம்.

ஆஞ்சநேயர் மண்டபத்திற்கு நாம் சென்று தங்குவதற்கு அனுமதி கேட்டதும், எவ்வித மறுப்புமின்றி ஆலய நிர்வாகத்தினர் அனுமதி தந்தனர். அதுதவிர சில வசதிகளையும் நாம் தங்கியிருந்த எட்டு நாள்களும் ஏற்படுத்தித் தந்தனர்.

தற்போது ஆலயத்தில் லட்சார்ச்சனை ஆரம்பிக்க இருப்பதால் நாம் அங்கிருந்து வெளியேறிவிட்டோம். ஆனாலும் எங்கள் வீடுகளின் சுவர்கள் எல்லாம் விழுந்து, உள்நிலமும் ஒரே சகதியாக உள்ளது. சாதாரணமாக மனிதர்களால் வாழவே முடியாத ஒரு சூழலுக்குள்தான் தற்போது நாங்கள் வருகின்றோம்.

**"பொருள்களைக் கைவிட்டுவிட்டு குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு ஓடினோம்"**

**ப.தெபோரஞ்சினி**

[மருதனார்மடம் சந்தையின் பின்புறப் பகுதி]

இரவு நேரம் வெள்ளம் வீட்டுக்குள் வராது என்ற நினைப்பில் நாங்கள் உறங்கிக் கொண்டிருந்தோம். திடீரென வீட்டுக்குள் வெள்ளம் புகுந்து, எங்களை நனைத்தபோதுதான், மழை வெள்ளம் உள்ளே நுழைந்து விட்டதை அறிந்தோம். எழுந்து பார்த்தபோது வீட்டிலிருந்த சாமான்கள் எல்லாம் நீரில் முற்றாக நனைந்து போயிருந்தன. சிலபொருள்கள் வெள்ளத்தில் மிதந்து கொண்டும் இருந்தன. ஆனால் பொருள்களை எடுப்பதற்கான அவகாசத்தை வெள்ளம் எங்களுக்கு வழ்ங்கவில்லை. அந்தளவிற்கு வெள்ளம் வெகுவேகமாக வந்து கொண்டே இருந்தது. பிள்ளைகள் எல்லோருமே கைக்குழந்தைகள். பொருள்களை விடவும் எங்களுக்குப் பிள்ளைகள் தானே முக்கியம்?



அதனால் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு, இடுப்பளவு வெள்ளத்துக் குள்ளால் தப்பினோம் பிழைத்தோம் என்று ஆஞ்சனேயர் மண்டபத்துக்குச் சென்றுவிட்டோம்.

மழைவிட்டு, வெள்ளம் சிறிதளவு வடியத் தொடங்கியவுடன் வீட்டுக்கு வந்து பார்த்தபோது எங்கள் வீட்டிலிருந்த எல்லாப்பொருள்களும் மீளப் பயன்படுத்த முடியாத அளவுக்கு அழிவடைந்திருந்தன. அத்தோடு இருப்பதற்குக்கூட ஒழுங்கான நிலையில் வீடு இல்லை. சேறும், சகதியும் நிறைந்த இந்தப் பிரதேசத்திலேயே சோறாக்கி உண்டு உறங்க வேண்டிய அவலம் ஏற்பட்டுவிட்டது.

வாழ்வதற்கான அடிபபடை வசதிகள் எல்லாமே வெள்ளத்தோடு அடிபட்டுப் போய்விட்டதால் வாழ்க்கையை எப்படிக் கொண்டு நடத்தப் போகிறோம் என்பதே தெரியாமல் இருக்கிறது.

எமக்குத் தேவையான உதவிகளை உரியவர்கள் செய்து, மழையால் இருண்டுபோன எங்களின் வாழ்வு மீண்டும் மலருமா என ஏங்கிக் கிடக்கின்றோம்.

**சந்திப்பும், படங்களும்: - ஔண்யன், நேசன் -**

**"வெள்ளத்தின் கோரத்தால் முன்பள்ளியும் முடமாய்ப் போய்விட்டது"**

**சி.சசிக்குமார்**

[மருதனார்மடம் சந்தையின் பின்புறப் பகுதி]

இந்தப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கெனத் தனியாக ஒரு சனசமூக நிலையமொன்றை அமைத்திருக்கிறோம். இந்த சனசமூக நிலையக் கட்டடமும் மண்ணால் கட்டப்பட்டதுதான்.

இங்கு பகல்வேளைகளில் முன்பள்ளிக் கல்வி நிலையம் நடத்தப்பட்டு வந்தது. 30 பிள்ளைகள் இந்த முன்பள்ளியில் கல்வி கற்று வந்தார்கள். மழைவெள்ளத்தால் வீடுகளைப் போலவே, சனசமூக நிலையக் கட்டடமும் சுவர்களும் வீழ்ந்து, ஒரே சேறும், சகதியுமாக உள்ளது. இந்த லட்சணத்தில் இங்கு எப்படிக் குழந்தைகளுக்குக் கலவி புகட்ட முடியும்? எங்களை எட்டிப் பார்த்து விட்டுப் போகின்ற தொண்டு நிறுவனங்கள் மனம் வைத்தால் இந்தக் கட்டடத்தை சீர்படுத்தி, பிள்ளைகளின் கல்வி இடையூறின்றித் தொடர வழி ஏற்படும்.



இதைவிட இந்தப் பகுதியில் ஒருசிலரைத் தவிர மற்ற எல்லோருடைய வீடுகளும் மண்வீடுகள் தான். இதனால் மழை காரணமாக எல்லோருடைய வீடுகளும் அழிவடைந்துள்ளன. எனவே இங்குள்ளவர்கள் மீண்டும் வாழ்வினைக் கட்டியெழுப்ப உரியவர்கள் உதவவேண்டும். மழை பெய்தபோது ஏற்பட்ட துயரத்தைக் காட்டிலும் இப்போதுதான் அதிகளவான கஷ்டத்தை நாங்கள் சந்திக்க வேண்டியுள்ளது. வெள்ளம் தேங்கி நின்றதால் சுற்று வட்டாரம் முழுதுமே சேறாகி, நாற்றமடிக்கிறது. வீடுகளின் சுவர்கள் விழுந்து விட்டதால் திறந்த வெளியான இடங்களில் சமைப்பதால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் தோன்றியுள்ளன. பலருக்கு ஒருவித காய்ச்சல் பரவிவருகின்றது. ஒருசிலருக்கு வயிற்றோட்டமும் ஏற்பட்டுள்ளது.

**சொல்லாது வந்த மழையும் புயலும் விட்டுச் சென்ற வேதனைகள் 02**

முடங்கிக் கிடக்கும் முன்பள்ளி



அடை மழைவந்து இவ்வாறான அழிவுகளை உண்டாக்கி விட்டதால், இப்போது ஒரு சிறியதூறல் மழைக்குக்கூட பயப்பட வேண்டியுள்ளது.

**"சீவனோபாயத்திற்கும் வழி தெரியாது, விழி பிதுங்கி நிற்கின்றோம்"**

**வை.தர்சினி**

[மருதனார்மடம் சந்தையின் பின்புறப் பகுதி]

எல்லோரும் எங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை வெறுமனே பார்த்துவிட்டுப் போகிறார்களேதவிர, உருப்படியான உடைமைகள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை. வெள்ளம் தேங்கி நின்றதால் ஒரே நுளம்புத்தொல்லை. மற்றைய இடங்களில் எல்லாம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நுளம்பு வலைகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் எமக்கு இதுவரை வழங்கப்படவில்லை.



ஒரு வீட்டிற்கு ஒரு படங்கு வீதம் கீழே விரிப்பதற்கான படங்குகள் வழங்கப்பட்டுள்ளன. இங்கு ஒருவீட்டில் ஒன்றிற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிப்பதால், பகலில் இருப்பதற்கும், இரவில் உறங்குவதற்கும் போதிய படங்கு இல்லாமல் கஷ்டப்பட வேண்டியுள்ளது. ஏனெனில் எல்லோருடைய வீடுகளின் தரைப்பகுதிகளும் ஈரமாக இருப்பதால் படங்கை விரித்தால் மட்டுமே காலத்தை ஓட்ட முடிகின்றது.

எங்களுடைய கால்நடைகள் எலலாமே வெள்ளத்தில் அழிந்துவிட்டதால், இப்போது சீவனோபாயத்திற்கும் வழி தெரியாது, விழி பிதுங்கி நிற்கின்றோம். ********************

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர்களுக்குப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ.14

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினால் நடத்தப்படும் மெய்வன்மைத் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான தரம் IV பரீட்சை அடுத்தமாதம் 31 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

விண்ணப்பங்களை யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் இயங்கும் சங்க அலுவலகத்தில் பெற்று அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் 4 தினங்களுக்கு நடைபெறவுள்ளன.(202)


DISSERTATION BINDING

850/=

BHARATHI PATHIPPAKAM
OFF SET PRINTERS
430, K. K. S. Road, Jaffna
Phone : 021 222 3081


## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாய குழுக் கூட்டமும்

யாழ்ப்பாணம், டிசெ.14

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் இந்த மாத ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், விவசாய குழுக் கூட்டமும் நடைபெறவுள்ளன.

இந்தக் கூட்டங்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(204)

***

யாழ்ப்பாணம்,டிசெ.14

வலி.மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கும் 11 மணிக்கும் நடைபெறவுள்ளன. (204)

## பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பணம்,டிசெ.14

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் பயிற்றுநர் தரம் II பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.


இந்தியாவின் பெங்களூரில் நடைபெறவுள்ள இப் பயிற்சியில் பங்குபற்ற விரும்புவோர் சங்கச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)


STUDY IN LONDON



ISO CERTIFIED INSTITUTID
WORK PERMIT TO...
ITALY, GERMANY, SWISS, AUSTRALIA, CANADA.
WITHIN 5 WEEKS
MINIMUM O/L
EMPLOYMENT PASS
MEMBER OF UCAS COLLEGE & UNIVERSITY
HND,BBA,BA,BSc,MA,MSc,BEng,B.Com, MBBS, PhD,IT. LLM,LLB,PGDip,MPharm,computer& ect
LAWYER
Mr. M.S.M.Zahir
Attorney . At .Law
Notary public
Commissioner for company secretary
EDUCATION LONE
வெளிநாட்டில் கல்விகற்க விரும்பும் மாணவர்களின் நலன் கருதி திருகோணமலையிலும் City College International திறக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு தேவையான அனைத்துவசதிகளையும் செய்து தருவதோடு Sponsor ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
CITY COLLEGE
International
E-mail : icclanka@gmail.com Web : city college lanka.com,www.icclanka.com
தமிழ் மொழிமூல அழைப்புக்கு - 077 12 50 789 - 0772 955 977
NO:- 07,2nd Floor ,W.A Silva Mawatha Wellawatte ,Colombo- 06 Tel: 0114 594 104,
No:- 85, College Street, Trincomalee. Tel: 0264 90 98 55, Hotline: 0772 955 977


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நாகமுத்து ரவிச்சந்திரன்

[ஆரம்பக்கல்வி ஆசிரியர்]

வையகத்தின் மைந்தனாக 16.08.1963 — தெய்வத்தின் சொந்தமாக 06.12.2006

திதி: கார்த்திகை மாத அபரத் துதியை 14.12.2008

ஞாலத்தின் திருவுருவமே
நம் வாழ்வின் ஒளி விளக்கே
தேனொக்கும் வாழ்வளித்த
எம் அன்புத் தெய்வமே!
கண்ணீரிற் கரைகின்றோம்
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
ஆறாது உம்பிரிவு, மாறாது உம் பாசம்
எம்முன் இறையாகி என்றும் வாழ்ந்திருவீர்.

(80737)

'ரவி மகால்',
நாவற்காடு, வரணி.

ஆறாத்துயரில்:
அன்பான மனைவி, குடும்பத்தினர்.

## 10ஆம் ஆண்டு நினைவுகளில் ...



### திருமதி இராணி ஜெகசோதி

[ஆசிரியை, திரு/சென்ஜோசேப் கல்லூரி, திருகோணமலை]

மண்ணில் 31.01.1949 — விண்ணில் 05.12.1998

திதி: துதியை

முத்தாக நாம் பெற்ற மூத்த செல்வமே!
பத்தாண்டு சென்றதுவோ உனை நாம் பிரிந்து
பேருடன் நீ வாழ்ந்து பல பணிகள் செய்தாயே
பாதி வழியில் நீ செல்ல பரிதவித்தோம் நாம்
பாரினில் இனி எப்போ காண்போம் - மீண்டும்
எங்கள் குடும்பத்தில் வந்துதிக்க மாட்டாயோ!

198, சென் பெனடிக் றோட்,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம். (80741)

குடும்பத்தினர்.

# வரவேற்கின்றோம்... வாழ்த்துகின்றோம்...

யாழ்.குடாநாடு தழுவிய
புனர்நிர்மாணப் பணிகளில்
நீண்டகாலப் பரிச்சயமுள்ள
ஆலோசக பொறியியலாளர்
திரு.ப.கிரிதரன் அவர்கள்





யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்கத்திற்கு
தலைவராக
பதவிப்பிரமாணம் செய்ததன் பின்பு

மீண்டுமொரு புத்தாண்டிற்குள்
புகுமுகு நிலையில் நின்று
புத்தாண்டினை வரவேற்கின்ற இந்நாளில்...

சுட்டுறவுச் சேவையில்
நீண்டகால அனுபவமுள்ள
செயற்திறன் பொருந்திய
எமது சக பணியாளர்
திரு.து.மனோகரன் அவர்கள்





யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்கத்திற்கு
பொதுமுகாமையாளராகப்
பதவிப்பிரமாணம் செய்ததன் பின்பு

எமது சங்கத் தலைவர், எங்கள் சங்கப் பொது முகாமையாளர்
ஆகியோரின் அர்ப்பணிப்புடனான அளப்பெரும் சேவைகளை
வியந்து பாராட்டுகின்றோம், வாழ்த்துகின்றோம்.

"எமது சங்கம் எதிர்கொண்ட இடர்பாடுகளிலிருந்து விடுபட்டு மகத்தான பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளது"

அதனால் தான் எங்கள் தலைவர் திரு.ப.கிரிதரன் அவர்களின் வழியில்
நாங்கள் ஓரணியாய் நிற்கின்றோம்.

எமது பொதுமுகாமையாளர் திரு.து.மனோகரன் அவர்களின்
நிர்வாகத்திற்கு நாங்கள் பக்க பலமாக நிற்போம்.

பணியாளர்களுக்கான வருடாந்த ஒன்றுகூடல்
ஏற்பாட்டுக்குழு- 2008/ 2009,
யாழ்ப்பாணம் பல நோ.கூ.சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறுகல் நிலையை நோக்கி புதுடில்லி - கொழும்பு உறவு...!

கொழும்பு - புதுடில்லி உறவுநிலை முன்னெப்போதும் இல்லாதவாறு சரிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத்துக்கும் கொழும்பு ஆட்சிப் பீடத்தை ஆட்டிப்படைக்கும் ராஜபக்ஷ சகோதரர்களுக்கும் இடையில் நட்புறவும் நெருக்கமும் மிக இறுக்கமாகத்தான் உள்ளன என்பது உண்மைதான்.

ஆங்கில வார ஏடு ஒன்று பச்சையாகக் கூறியமை போல ராஜபக்ஷவின் ஆளாகத்தான் அலோக் பிரசாத் இங்கு




செயற்படுகின்றார் என்பதிலும் உண்மை இருக்கலாம்.

ஆனால், அலோக் பிரசாத் - ராஜபக்ஷ சகோதரர்கள் நட்புறவு, கொழும்பு - புதுடில்லி நற்பிணைப்பாக மாறவில்லை என்பதுதான் யதார்த்தம்.

கொழும்புக்கான இந்தியத் தூதுவரைக் கையில் போட்டுக் கொண்டால், இந்தியாவைக் கையில் போட்டுக் கொண்ட மாதிரி என்ற ராஜபக்ஷ சகோதரர்களின் சாணக்கிய தந்திரம் தொடர்ந்து பலிக்குமா - என்பதே இப்போதைய கேள்வியாகும்.

தூதுவருடனான நட்புறவைப் பயன்படுத்திச் சமாளிக்கக்கூடிய நிலைமையையும் தாண்டி விடயம் விவகாரமாகிவிட்டது என்பதே இன்றைய யதார்த்த நிலையாகும்.

தமிழக அரசியல்வாதிகளை 'கோமாளிகள்' என்ற சாரப்பட இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா சித்திரித்த விடயம், கொழும்பு - புதுடில்லி உறவில் புதிய நெருக்கடியை உருவாக்கியிருக்கின்றது.

இவ்விடயம் குறித்து இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர், இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத்திடம் வருத்தம் தெரிவித்தார் என்று குறிப்பிட்டு இவ்விடயத்தைச் சமாளிக்க முயற்சி எடுக்கப்பட்டாலும், இச்சமாளிப்பு எத்தனம் சரிவரவில்லை என்று தெரியவருகின்றது.

இலங்கை இராணுவத் தளபதியின் பேட்டி, அரசின் கட்டுப்பாட்டில் உள்ள 'த சண்டே ஒப்சேவர்' பத்திரிகையில் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

அதிலேயே தமிழக அரசியல்வாதிகளை 'கோமாளிகள்' என்றும், 'புலிகளிடம் பணம் வாங்கிக் கொண்டு செயற்படுகின்றவர்கள்' என்றும் காட்டமாக விமர்சித்திருக்கின்றார் இலங்கை இராணுவத் தளபதி.

இந்தப் பேட்டி தொடர்பாக இந்தியத் தரப்பின் சீற்றத்தை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

*"சரியோ, பிழையோ இலங்கை இராணுவத் தளபதி தமது பேட்டியில் குறிப்பிட்ட அரசியல்வாதிகள் இந்தியாவின் மக்கள் பிரதிநிதிகள். இந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். தமிழகம் இந்தியாவை விட வேறு பிரதேசம் அல்ல. அது இந்தியாவின் பிரிக்கப்பட முடியாத ஓர் அங்கம். அந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பிரதிநிதியை - அவர் எந்த மாநிலம், எந்த கட்சியைச் சேர்ந்தவராயினும் - இலங்கை இராணுவத் தளபதி இப்படி விமர்சிக்க முடியாது. இதனை மாநிலங்கள், கட்சிகள் போன்ற விடயங்களுக்கு அப்பாலேயே நோக்குகின்றோம். இந்திய மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிரான பகிரங்கக் கருத்தாகவே பார்க்கின்றோம். இப்போக்கை சகித்துக் கொள்ள முடியாது.*

*"இது தொடர்பில் இந்தியத் தூதுவரிடம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தனிப்பட்ட சந்திப்பு ஒன்றில் வருத்தம் தெரிவித்தார்" என்பதை ஏற்று அடங்கிவிட முடியாது.*

*"இத்தகைய விடயங்களை சீர்செய்வதற்கு இதுவல்ல நடைமுறை. அதற்கு உரிய இராஜதந்திர செயற்பாட்டு முறைகள் உள்ளன.*

*"அதற்காக இராஜதந்திர மட்டத்தில் உரியவர்கள் - அருகதை உடையவர்கள் - சரியான பொறுப்பில் உள்ளவர்கள் - விடயத்தைக் கையாண்டு வருத்தம் தெரிவிக்க வேண்டும். அத்தகைய வருத்தத்தையோ, மன்னிப்பையோ தெரியப்படுத்துவதற்கான நிகழ்ச்சிக்கும் ஓர் ஒழுங்கு முறையுண்டு. தனிப்பட்ட சந்திப்பு ஒன்றில் தூதுவரிடம் ஓர் அதிகாரி தனிப்பட்ட முறையில் வருத்தம் தெரிவிப்பது, புதுடில்லியை சமாளித்து சமரசம் செய்த விடயமாகி விடாது."* - என்று பட்டவர்த்தனமாகப் போட்டுடைத்துக் குறிப்பிட்டார் அந்த அதிகாரி.

இராணுவத் தளபதியின் பேட்டி தொடர்பாக கிளம்பியிருக்கும் சர்ச்சை இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கேவலமாக வருத்தம் தெரிவித்தமையோடு அடங்கி விட்டது என வெளியில் கூறப்பட்டாலும் விடயம் 'நீறு பூத்த நெருப்பாக' உள்ளே தகித்துக் கனன்று கொண்டிருக்கின்றது என்பதுதான் உண்மை.

**- வி.சிவராம் -**

போதாக்குறைக்கு ஈழத்தமிழர் விவகாரம் தொடர்பாகத் தமிழக அரசியல் தலைவர்களின் கருத்து நிலைப்பாட்டை கொழும்பு அரசுக்கு வலியுறுத்தி எடுத்துரைப்பதற்காக கொழும்புக்கு வரவிருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியின் உத்தேச விஜயத்தை ஒட்டி கொழும்பு காட்டியுள்ள எதிர்மறை பிரதிபலிப்புகளும் புதுடில்லியை விசனத்துக்குள்ளும் எரிச்சலுக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

இலங்கையில் யுத்தத்தை நிறுத்தும்படி தமிழக அரசியல் தலைவர்கள் விடுக்கும் வற்புறுத்தலை, எங்களுக்குத் தெரிவிப்பதற்காக என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்கு வருவது எங்களுக்குப் பிடித்தமானது அல்ல என்று புதுடில்லிக்கு கொழும்பு நாசூக்காகக் கோடிகாட்டியிருப்பதே சிக்கலுக்கு பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது.

கொழும்பிலிருந்து சாதகமான சமிக்ஞைகள் - பிரதிபலிப்புகள் - காட்டப்படாத நிலையில், இந்த விஜயத்தை மேற்கொள்வதா என்ற இரண்டுங் கெட்டான் மனோபாவம் - பின்னடிப்பு - புதுடில்லித் தரப்புக்கு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

பக்கத்தில் உள்ள ஒரு சிறிய நாடு, இந்தியாவின் வெளிவிவகார அமைச்சரின் விஜயம் தனக்கு விருப்புடையதல்ல - ஏற்புடையதல்ல - என்று கோடி காட்டுவதற்கு, புதுடில்லியின் பிராந்திய வல்லாதிக்க வலு வீழ்ச்சியடைந்து விட்டதா என்று புதுடில்லி அதிகாரம் தன்னைத் தானே கேட்க வேண்டிய அளவுக்கு நிலைமை சென்றுள்ளது.

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு புதுடில்லியில் வைத்து இந்தியப் பிரதமர் வழங்கிய உறுதிமொழியை நிறைவு செய்வதற்காகவேனும் - வெறும் பெயருக்கேனும் - தமது வெளிவிவகார அமைச்சரை ஒரு தடவை கொழும்புக்கு அனுப்பி எடுக்க, புதுடில்லி விரும்பினாலும் கூட, இது விடயத்தில் கொழும்பின் செருக்குத்தனமான செயற்போக்கு புதுடில்லியை சீற்றத்துக்குள் ஆழ்த்தத் தவறவில்லை.

இப்படி, ஈழத் தமிழர் விவகாரத்தை ஒட்டி இந்தியாவின் கருத்து நிலைப்பாட்டை வெட்டவெளிச்சமாகப் புறக்கணித்து, வெளிப்படையாகச் செயற்படும் துணிவும், மமதையும் கொழும்புக்கு வந்தமைக்குப் பின்னால் உள்ள காரண காரியங்களை புதுடில்லி வலுவாக ஊடுருவி ஆராய்ந்து வருவதாகவும், இது விடயத்தில் கொழும்புக்கான இந்தியத் தூதுவரின் செயற்பாடுகள் ஆழமாக - நுணுக்கமாக - நோக்கப்படுகின்றன எனவும் கூறப்படுகின்றது.

மிக விரைவில் பொதுத்தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் புதுடில்லிக்கு இருக்கையில், தனது வெளிவிவகார சேவையை ஒட்டி நுணுக்கமான ஆராய்வுகளை அடுத்து அவற்றின் அடிப்படையிலான நடவடிக்கைகள் போன்றவை குறித்து புதுடில்லி அதிகார பீடம் கவனம் செலுத்துமா என்பது சந்தேகம் என்றாலும், இவ்விடயத்தில் புதுடில்லியின் அதிகார பீடத்தில் சில நெருக்குதல்கள் இருக்கின்றன என்பது மட்டும் உண்மை.

★★★

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கடந்த புதனன்று இடம்பெற்ற சந்திப்பு திடீரென நிகழ்ந்ததாகக் கூறப்பட்டாலும் - அரசமைப்பின் 17 ஆவது திருத்தப்படி அரசமைப்புக் கவுன்ஸில் மற்றும் அதன் மூலம் தேர்தல், நீதி, பொலிஸ், பொதுச்சேவை ஆகிய நான்கு துறைகளுக்கு நான்கு சுயாதீனக் கவுன்ஸில்கள் ஆகியவற்றை ஸ்தாபிப்பது தொடர்பாக உயர்நீதிமன்றம் விடுத்துள்ள கட்டளைக்கு இணங்கவே அது இடம்பெற்றதாக உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்துக்கு அமைவாக இந்த ஆணைக்குழுக்களையும், அரசமைப்புக் கவுன்ஸிலையும் நிறுவினால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு இந்தத் துறைகளில் இருக்கக்கூடிய பல்வேறு அதிகாரங்கள், தலையீடுகள் அடியோடு வெட்டப்பட்டு விடும். அதனால் இவ்விடயத்தை நடைமுறைப்படுத்தாமல் வருடக் கணக்கில் அதனை இழுத்தடித்து வருகின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இதோ காரணத்துக்காக முன்னர் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு



மேலாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இழுத்தடித்த விடயத்தை, தொடர்ந்து சுமார் மூன்று ஆண்டுகளாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பின்பற்றுவதால் விடயம் நீதிமன்றுக்குச் சென்றிருக்கின்றது.

இந்த வழக்கு எதிர்வரும் ஜனவரி 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கையில் அதற்கு இடையில் வடமேல் (வயம்ப) மற்றும் மத்திய மாகாண சபைகளைக் கலைத்துப் புதிய தேர்தலை நடத்துவதற்கு அரசு முயன்றிருக்கின்றது.

ஆனால், அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்துக்கு அமைய அரசமைப்புக் கவுன்ஸிலும், அதன் மூலம் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவும் நிறுவப்பட முன்னர் இத்தகைய தேர்தலை நடத்துவது தேர்தல் மோசடிகளுக்கும் ஒழுங்கினங்களுக்கும் வழிவகுக்கும் என்பதால் அவை ஸ்தாபிக்கப்படும் வரை இத்தேர்தல்கள் இடைநிறுத்தப்பட வேண்டும் என்று கோரியும் உயர்நீதிமன்றத்தில் ஐ.தே.கட்சி எம்.பி. ஒருவரினால் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் மஹிந்த - ரணில் சந்திப்பு அரசமைப்பின் 17 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தை முன்நகர்த்துமா - என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. காலம்தான் அதற்குப் பதில் கூறவேண்டும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**ஞானேஸ்வரதேவி பரமேஸ்வரன்**



தோற்றம் : 26.11.1948

மறைவு : 06.12.2006

காசில் மதிமுகமே!
காந்த விழியழகே!
வீசு புகழ் விளக்கே!
விண்ணுற்றாய்
நம்புகிலோம்!
நேசஉறவுகள் எம்
நெஞ்சப் பிணி நீங்க
மாசில் பிறப்பெடுத்து
மண்ணுலகு வந்திடம்மா

**திதி: கார்த்திகை மாத அபர பக்கத் துதியை (இன்று)**

அம்மாவின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்

கரந்தன், நீர்வேலி. **குடும்பத்தினர்.**



# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் பரமகுரு நவரட்ணம்**

(K.P.N.சந்திரன்)

அன்னையின் மடியில்: 28.09.1957

ஆண்டவன் அடியில்: 06.12.2006

திதி - துதியை 14.12.2008

அன்புக்கு இலக்கணமாய் பண்பில் உயர்ந்தவனாய்
பாசத்திற்கு உறைவிடமாய் எம்மோடு வாழ்ந்தவனே!
உன் நல்வாழ்வை சகிக்காமல் காலத்தின் சோதனையால்
காலனவன் நின் உயிரை பறித்தது ஏனோ - நின்
ஆத்மா இறைவனில் இளைப்பாற இறைஞ்சுகின்றோம்.

கட்டுக்காணி வீதி,
சாவகச்சேரி. (80702) **தாய், சகோதரர்கள்.**


# விழுந்த மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டன

வடமராட்சி, டிசெ.14

'நிஷா' புயல் மழையினால் மந்திகைச் சந்தையில் வீழ்ந்த இரு அரச மரங்களும் துண்டு துண்டாக வெட்டப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

மந்திகைச் சந்தைக்குள் நின்ற நூற்றாண்டுப் பழமை வாய்ந்த இவ்விரு அரச மரங்களும் அடியோடு புரண்டு விழுந்ததினால் மந்திகைப் பகுதிக்கான மின்சார, தொலைத்தொடர்பு சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன.

அத்துடன், சந்தை வளவுக்குள் இருந்த மீன் சந்தை, இறைச்சிக்கடைகளுக்கு பொது மக்கள் சென்றுவர முடியாத சிரமங்கள் இருந்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.


**விற்பனைக்கு: 8' அடி டிஷ் அன்ரனா, C Band LNP, ரிசீவர் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 27/11 புங்கன்குளம் வீதி, பாண்டியன்தாழ்வு யாழ்ப்பாணம். தொ.பே: 0715198254**

## விற்பனைக்கும் வாடகைக்கும்

நாள் ஒன்றுக்கு 4000 இறாத்தல் பாணும் 4000 பணிஸும் உற்பத்திசெய்யக்கூடிய இயந்திர உபகரணங்கள் விற்பனைக்குண்டு. இடமும் வாடகைக்கு உண்டு. (யாழ்.நகருக்கு அண்டிய பகுதியில்).

தொ.பேசி: 021 4590970, 077 6257896

**PANDA Express** 0212228250 UNIVERSAL COURIER

No 167, Kasthuriyar Road, Jaffna.

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு...

யாழ்நகரில் இருந்து சர்வதேசரீதியாக இருக்கும் உங்கள் உறவுகளிற்கு வேண்டிய ஆவணங்கள், பொதிகள் என்பவற்றை மிக குறைந்தகட்டணத்தில் உலகின் எந்தநாட்டிற்கும் பாதுகாப்பாகவும் விரைவாகவும் அனுப்பிவைக்கப்படும்

கீழ்குறிப்பிடும் இடங்களில் உங்கள் பொதிகள் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

***Head Office***
**PANDA Express, No 30-1/20, W.E.De Silva Mw, Col-06. 0112500207**

***Jaffna Office***
**Computer Express, No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250**

***Nelliyadi Office***
**Computer Express, No 07, Kanpollai Lane, Kodikamam Rd, Nelliyadi. 0777222422**

***Chavakachcheri Office***
**Tharshan Communication, Sangathanai, Chavakachcheri.**

***Manippai Office***
**Thinesh Bake House, No 180, Jaffna Road, Manippai**



## திருமண சேவை

கலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றியவரன் முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த-சுயதெரிவுமுறை முன்னோடி-தனிமனித நிறுவுநர்- சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்பு கொள்க.

கொழும்பு நேரத் தொலைபேசி:
**2360488, 2360694, 4873929.**

வசீகர தோற்றத்திற்கு

## சந்தனாலேப




(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சுமருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகை தரும். ச தடு, ஸைம், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் வீசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

**'சிவா நறுமணப் பூங்கா'**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).

*MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.*


# கண்பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளுக்கான வாழ்வக அனுமதி - 2009

வாழ்வகத்தில் தமது பார்வையற்ற, பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளை இணைத்து அவர்களுக்கு நல்லதொரு கல்வி வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்க விரும்பும் பெற்றோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எழுத்துக்களை வாசிப்பதில் பெருமளவு சிரமப்படுகின்ற பிள்ளைகளும் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

கல்வி பயிலும் காலத்தில் உணவு, தங்குமிடம், கல்விச் செலவுகள் யாவும் இலவசமாக வழங்கப்படும். பிள்ளை தொடர்பான சுயவிவரங்களோடு தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரிக்கு உடன் விண்ணப்பிக்கவும்.

வாழ்வகம். (வி/555973) -தலைவர்.

# மரண அறிவித்தல்



# இராமலிங்கம் ரகுபரன்

நுணாவில் கிழக்கு, கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் ரகுபரன் 07.12.2008 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் இராமலிங்கம் (ஓய்வுபெற்ற முகாமையாளர், MPCS - சாவகச்சேரி), கனகேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) தம்பதியரின் புதல்வனும் நாகநந்தினியின் அன்புக் கணவரும் பவித்திரா, பிரணவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆறுமுகம் -சியாமளா தம்பதியரின் அன்பு மருமகனும் றஜனி (சுவிஸ்), மதிபரன் (கனடா), லோஜினி (மாகாண திறைசேரி, திருகோணமலை- இலங்கை), சிவபரன் (கனடா), கிருபாஜினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தயானந்தன் (சுவிஸ்), விமலா (கனடா), யசோதரன் (இலங்கை), ஜெயசோதரன் (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும் அஜந்தன், டினேஸ், டிலன், கார்த்திகா, மதினிகா, ஜெகிஷ்னா ஆகியோரின் மாமனாரும் நிஷானு, மிஜே ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.12.2008 வியாழக்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: மைத்துனர்-ஜெயசோதரன்**
**தொடர்பு: மதி 4162816035, சிவா 4169971914.**

(வி/555975)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து இலக்கியத் துறையில் நன்கு அறியப்பட்ட மிக மூத்த எழுத்தாளர்களில் ஈழத்து இரத்தினமும் ஒருவர்.

சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள் என்று நிறையவே எழுதியவர். காகிதத் துண்டில் மையினால் மட்டுமன்றி ஒரு பொருள் குறித்து வேண்டிய வேளையில் கவிதை பாடும் புலமை பெற்றவர்.

சினிமாத் துறையில் மிகுந்த ஈடுபாடும் பட்டறிவும் உடையவர். ஈழத்தில் தயாரிக்கப்பட்ட தமிழ்த் திரைப்படங்களின் உதவி இயக்குனராகப் பணிபுரிந்திருக்கிறார். தமிழில் பாண்டித்தியம் பெற்றவர்; நல்ல தமிழ் உணர்வாளர். மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

இங்கு பிரசுரமாகும் ''முடத்தெங்கு'' சிறுகதை சுதந்திரன் பத்திரிகையில் 1963 ஆம் ஆண்டில் வெளியான மொத்தம் இருபது சிறுகதைகளில் சிறந்ததென மதிப்பிடப்பட்டது. படித்து முடிந்ததும் ஏதோ ஒரு வகையில் மனதில் ஓர் உணர்ச்சியை எஞ்ச வைத்த சிறுகதைகளில் ஒன்றாகவும் இனங்காணப்பட்டு யாழ்.இலக்கிய வட்டத்தினால் வெளியிடப்பட்ட ''சுதந்திரன் சிறுகதைகள்'' தொகுதியில் இடம் பிடித்துள்ளது.

# சிறுகதை
# முடத்தெங்கு

திருமணம் முடிந்து ஒரு வாரம் ஆகி விட்டது.

பார்வதியும், சிதம்பரப்பிள்ளைய்யும் என்னதான் சிரித்துப்பேசிக் கொண்டாலும், இருவருக்கும் அவரவர் மனதில் விவரிக்க முடியாத ஏதோ ஒரு 'சுமை' இருக்கத்தான் செய்தது.

கணவன் - மனைவி என்றிருவரும் சேர்ந்து முப்பது வருடங்களைக் கடத்தி விட்டார்கள். அதில், ஆறு வருடங்கள் திருமணமாகிப் பிள்ளைப்பேறு இல்லாமல் இருந்தபோது, இருவரிடையே இருந்த மகிழ்ச்சி, கலகலப்பு, குறும்புத்தனம் எல்லாம் ஆறு வருடங்களுக்குப் பிறகு பிறந்த குழந்தைச் செல்வத்தால் செத்துப் போய்விட்டன.

குழந்தை பிறந்தால் குடும்பத்தில் புதிய பொலிவும், மகிழ்ச்சியும், உறவும் பெருகும் என்று சொல்வார்கள். ஆனால், சிதம்பரப்பிள்ளை -பார்வதி என்ற குடும்பத்தைப் பொறுத்தவரையில், இனம் தெரியாத ஏதோ ஒன்றால் அந்தக் குடும்பம் குழம்பிக்கொண்டிருந்தது.

'ஆண்குழந்தை வேண்டும் வேண்டும்' என்று இல்லாத தெய்வங்களை எல்லாம் பார்வதி வேண்டிக் கொண்ட போது, சிதம்பரப்பிள்ளையும் தன் மனைவிக்காக, மனைவியின் பேரில் உள்ள அன்பிற்காக, நடைபாதையில் காணுகின்ற கோயில்களின் முன்னெல்லாம் கும்பிடு போட்டுக் கொண்டிருந்தார்.

மனைவியின் மனம் கோணும்படி இதுவரை அவர் நடந்ததில்லை என்றாலும், ஏதோ ஒரு தவறு செய்து விட்டவர் போலவே கடந்த இருபத்தினாலு வருடங்களாக வருந்திக்கொண்டு வாழ்கிறார்.

ஒரு வாரத்திற்கு முன்பு.......

இன்றுவரை சிதம்பரப்பிள்ளையால் மறந்து விடமுடியவில்லை. தவறுகளுக்கு மேல் 'பெரிய' தவறாக ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டார்.

பெண்ணுக்குக் கூறைச்சேலை எடுப்பதற்காக, கடைக்குப்போன பார்வதி, முன்னூற்றி ஐம்பது ரூபாவிற்கு தங்க இழை போடப் பட்ட சேலையை எடுத்து வந்திருந்தாள்.

'ஏனம்மா, ஐநூறு ரூபாவிற்கு இன்னும் நல்ல சேலையாக எடுத்திருக்கலாமே' என்று அந்தச்சேலையைப் பிரித்துப் பார்த்தபடி கூறிய வடிவேலுவின் வார்த்தைகளை வாங்கிக் கொண்டு, அறையின் ஜன்னல் பக்கமாக நின்றிருந்த சிதம்பரப்பிள்ளை, ''யார் பணம் எண்டு நினைச்சுப் பேசுறான்?'' என்று மனைவியைப் பார்த்துக் கேட்டார்.

அந்த வார்த்தையிலே தனது ஆத்திரத்தைத் தீர்த்து விட்டது போல அப்போதைக்கு அவருக்குத் தோன்றினாலும், அடுத்த நிமிடம் அவர் உண்மையிலே மனம் வருந்தினார்.

சிதம்பரப்பிள்ளை இப்படிக் கேட்ட போது, பார்வதிக்கு அழுகை அழுகையாக வந்தது. தந்தைக்கும் மகனுக்கும் இடையே பெரிய இடைவெளி ஏற்படுவதை எப்போதோ அவள் தெரிந்து கொண்டு, எப்படியும் அது பெரிது பட்டுவிடக் கூடாது என்பதற்காக எப்படியோ எல்லாம் முயன்று, இறுதியில் தன்னால் முடியாது என்ற நிலையில், இதை எண்ணித் தன்னந் தனியாக இருந்து அழுது தீர்த்துக் கொள்வதோடு சரியாகி விட்டவள் பார்வதி.

இப்போது....... 'உங்கள் மகன் தானே? இது நீங்கள் சம்பாதித்த பணம் தானே?' என்று சொல்லிவிட அவளால் முடிந்தும், சொல்லாமல் சேலையை மடித்துக்கொண்டு ஒரு புறமாகப் போய் விட்டாள்.

தான் அவசரப்பட்டு விட்டதையும், அதனால் பார்வதிக்கு வேதனை ஏற்பட்டு விட்டதையும் நினைத்தபோது, சிதம்பரப்பிள்ளை தன் மனதிலே புதைந்து கிடக்கும் ரகசியத்தை அவளிடம் சொல்லிவிட வேண்டும் என்ற முடிவோடு சமையல் கட்டுப்பக்கம் வந்த போது, உள்ளிருந்த தாயும் மகனும் பேசும் குரல் கேட்டு அப்படியே நின்று கவனித்தார்.

'அம்மா, ஏனம்மா அப்பா என்னோடு இப்படி நடந்து கொள்கிறார். நான் அவர் பிள்ளையில்லையா?' இந்த வார்த்தைகளைத் தொடர்ந்து அவனுடைய தேம்பல் கேட்டது.

'அப்படி எல்லாம் சொல்லக்கூடாது மகன். உன்னைப் பெத்தவள் நான். அவர் தான் உன் அப்பா. நீ பிறந்தபோது, அப்பாவின் வியாபாரத்தில் சிறிய நட்டம் ஏற்பட்டு, அதற்கு நீதான் காரணம் என்று யாரோ சொல்லியதை மனத்திலே வைத்திருக்கிறார் போல இருக்கிறது. இதெல்லாம் நாளைக்கு உனக்குக் கல்யாணம் நடந்தா சரியாப்போகும்.'

பார்வதியின் தேறுதல் மகனுக்காகச் சொல்லப்பட்டபோதும், அவை தனக்கும் ஆறுதலாக இருப்பதாக சிதம்பரப்பிள்ளை எணணிக்கொண்டு சொல்ல வந்ததைச் சொல்லாமலே திரும்பிவிட்டார்.

திருமணத் தினத்தன்று.....

பெற்ற பிள்ளையாச்சே என்ற எண்ணம் சிதம்பரப்பிள்ளைக்கு இருந்ததோ இல்லையோ! தெரியாது; இயந்திரமாக ஆடி ஓடி வேலைசெய்து அலுத்துப் போன கால்களுக்கு ஓய்வு கொடுப்பதற்காக, நடுக்கூடத்து மூலையிலே போய், மல்லாக்காகக் கால்களையும் கைகளையும் நீட்டிக்கொண்டு படுத்திருந்தார்.


வீடே கலகலப்பாக - ஆள்களின் நடமாட்டம் எந்த நேரமும் இருந்து கொண்டேயிருந்தது, முகூர்த்தத்திற்கு இன்னும் ஆறு மணித்தியாலயங்கள் இருந்தன.

பக்கத்து மேசையில் கிடந்த அன்றைய தினசரி ஒன்றை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்த சிதம்பரப்பிள்ளை, பத்திரிகையின் விளிம்புக்கு மேலாக, கூடத்தில் அவருக்கு எதிரே கிடந்த மேசையில் எதையோ தேடிக் கொண்டிருக்கும் வடிவேலுவின் முதுகுப் புறத்தை அர்த்தத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

தன் மனைவியின் மேல் உள்ள ஆசையால், தான் செய்துவிட்டதவறு, தன்னையும் சேர்த்து - மூன்று உள்ளங்களைக் குடைந்து கொண்டிருப்பதை எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்த போது, எதிர்பாராமல் வடிவேலு அவரைப் பார்த்ததும், மிகச் சிரமத்தோடு தனது பார்வையைப் பெயர்த்து, மீண்டும் பத்திரிகையின் மேல் நிறுத்தினார்.

ஊருக்கும் உலகத்திற்கும் - குறிப்பாகப் பிறப்புச் சாட்சிப்பத்திரத்திலும், வடிவேலு அவர் மகன் என்று உறுதி செய்யப்பட்டிருப்பதை, 'இல்லை' என்றும் அவரால் சொல்ல முடியவில்லை. 'எனக்குப் பிறந்தவனல்ல வடிவேலு' என்று சொல்லி ஒரு கலவரத்தை ஏற்படுத்தவும் அவரால் முடியும் என்பது அவரைப் பொறுத் தவரை இலகுவாக இருந்தபோதும்,

(14 ஆம் பக்கம் பார்க்க...)



# வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணியில் வரும் உயிரினங்கள்

தேம்பாவணியில் விலங்குகள், பறவைகள், பூச்சிகள், மரங்கள், மலர்கள் ஆகியவை பற்றிப் பல பாடல்களில் செய்திகள் வருகின்றன. அந்தச் செய்திகளையெல்லாம் ஆராய்ந்து எழுதுவதென்றால் அது ஒரு நூலாகிவிடும்.

தேம்பாவணியில் யானை, குதிரை, புலி,கரடி,சிங்கம்,பசு,குரங்கு, கழுதை, மேதி, எருது,தகர்,பன்றி,முதலை,முயல், மான், நரி, கீரி,நாவிப்பிள்ளை ஆகிய விலங்குகள் கூறப்பட்டுள்ளன. இந்த விலங்குகளில் ''தகர்''என்ற விலங்கைத் தவிர மற்றவை அனைவரும் அறிந்தவையே!

'தகர்' என்ற விலங்கு சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள அரியதொரு மலையாடு ஆகும். இதைத் தற்காலத்தில் நீலகிரி, ஆனைமலை முதலிய மலைகளின் உச்சிக் குவடுகளில் காணலாம். இதை வேட்டை யாடுவது மிகவும் கடினமாகும். இவை மேகம் தவழும் மலைக் குவடுகளில் குதித்துத் தாவும். இந்த அரிய விலங்கைப் பற்றி முனிவர் சொல்லியிருப்பதை நோக்க வேண்டும். புனுகுப் பூனையை 'நாவிப்பிள்ளை' என்று முனிவர் குறிப்பிட்டுள்ளார்.

பறவைகளில் அன்னம், குயில்,மயில், கிளி, புறா, பூவை, நாரை, கொக்கு, காடை, ஆந்தை, கானக்கோழி, சகோரம், கோழி, காகம், அன்றில், வௌவால், கௌதாரி, கூகை ஆகிய பறவைகளைப் பற்றிக் கூறியுள்ளார். இப் பறவைகளில் பூவை என்பது மைனாவைக் குறிக்கும். நாரையும் கொக்கும் தனித்தனியான பறவைகள் என்று உணர்ந்து எழுதியுள்ளார். சகோரம் என்ற புராணப் பறவையைப் பற்றியும் கூறியுள்ளார். ஒன்றை விடுத்து மற்றொன்று வாழாத் தன்மையுடைய அன்றில் பறவையைப் பற்றியும் சங்க நூல்களில் வரும் கற்பனைச் செய்தியைக் கூறியுள்ளார். தமிழ் இலக்கியத்தில் எந்த நூல்களிலும் கூறப்படாத 'ஆகிலப் பறவை' என்றதொரு பறவையைப் பற்றியும் கூறியுள்ளார்.

மற்றும் தவளை, நாகம் ஆகியவை பற்றியும் எறும்பு, தும்பி, ஈ முதலிய பூச்சிகளைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். சங்கு, கயல் முதலிய நீர்வாழ்வன பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

மரஞ் செடி கொடிகளும் உயிர்களேயாகும். மரங்களில் கடம்பு, முருங்கை, ஆச்சா, வேம்பு, பாக்கு, பேரீச்சை, அகில், எட்டி, தென்னை, வாழை, ஆல், மா, பலா, மரா, சந்தனம் அகியவை பற்றி முனிவர் எழுதியுள்ளார் மற்றும் தாளை, கரும்பு, நானல் ஆகியவவை பற்றியும் முனிவர் எழுதியுள்ளார். வல்லிக்கொடி, வெற்றிலை, மிளகுக்கொடி ஆகியவை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

மலர்களில் தாமரை, சண்பகம், புன்னை, மகிள் ,வெட்சி, தும்பை, முல்லை, பவளமல்லி, வேங்கை, ரோஜா, சூரியகாந்தி, செவ்வந்தி, அனிச்சம், குவளை, ஆம்பல், கோங்கு, காயா, பாதிரி ஆகிய பூக்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். முனிவர் சங்க இலக்கியத்தில் பயிற்சி உடையவராக இருந்திருப்பார். இல்லாவிட்டால் சங்க நூல்களில் வர்ணிக்கப்பட்ட வெட்சி, தும்பை, பாதிரி, கோங்கு, காயா முதலிய அரிய மலர்களைப் பற்றியும் கூறியிருக்க மாட்டார்.

முனிவர் கூறியுள்ள மரங்களில் பேரீச்சை அரேபியாவிலிருந்து வந்ததாகும். பூக்களில் ரோஜா, சூரியகாந்தி ஆகியவை முனிவர் காலத்திலேயே போர்த்துக்கீசரால் இந்தியாவில் பரப்பப்பட்டிருக்கலாம்.

முனிவர் 'லீலி' என்ற மலரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும். தமிழ் இலக்கியத்தில் வெண்மையான முல்லைப் பூவை மகளிரின் கற்புக்கு ஒப்பிடுவர். ஆனால் சூசை என்ற வளனின் கற்புக்கு 'லீலி' என்ற வெள்ளை மலரை முனிவர் ஒப்பிடுகின்றார். மேல் நாட்டில் கற்புக்கும் உண்மைக்கும் லீலி மலரை ஒப்பிட்டுக் கூறியதில் ஒரு நயம் உண்டு. முனிவர் தமிழ் மரபைப் பின் பற்றி வளனின் கற்புக்கு முல்லை மலருடன் ஒப்பிட்டிருக்கலாம்.

**ஆண்களின் கற்பு பற்றி.....**

ஆனால் தமிழ் மரபில் மகளிர்க்குத் தான் கற்பு கற்பிக்கப்பட்டு முல்லை மலருடன் ஒப்பிடப்பட்டுள்ளது. ஆணிற்குக் கற்பொழுக்கம் சங்க நூல்களில் இருந்தே கூறப்படவில்லை. கற்பு பெண்டிர்க்கும் ஆடவர்க்கும் பொது என்பதை வள்ளுவர் தான் முதலில் வற்புறுத்தினார். கிறிஸ்தவ மதக் கொள்கைப்படி தேவதாய், தூய ஆவியினால் தேவ அருளால் கருவுற்று மனுக் குலத்தை மீட்க வந்த மைந்தனான இயேசுவைப் பெற்றாள். அதனால் இறைவன் மனித அவதாரம் எடுத்தான். கன்னி மேரித்தாயின் கணவனான வளன் தன் மனைவியிடம் மனிதக் கணவனாக வாழவில்லை. தன் மனைவியின் தெய்வத் தன்மையைக் கருதி மனைவியைத் தொடாத கற்பு நெறியை வளன் கடைப் பிடித்ததால் அந்தக் கற்புக்குத் தமிழ் மரபில் ஒப்புமை காட்ட முடியாததாய், தான் வெளி நாட்டிலும், தன் மத மரபிலும் அறிந்த 'லீலி' மலரைக் குறிப்பிட்டார்.

வீரமாமுனிவர் மேல் நாட்டிலிருந்து வந்தாலும், தமிழ் நாட்டு உயிரினங்களை நன்கு அறிந்து தமிழ் மரபோடு அவற்றைத் தேம்பாவணியில் பயன்படுத்தியிருப்பது மிகவும் போற்றுதற்குரியதாகும்.

பி.எல்.சாமி

# இப்படியும் சிந்தித்துப் பாருங்கள்

அண்மைக் காலங்களில் தீவிரமடைந்திருக்கும் திருட்டு, கொள்ளைச் சம்பவங்களைத் தவிர்ப்பதற்குச் சிறந்த வழி என்ன? அளவுக்கு மீறி சேமித்து வைத்திருப்பவர்களின் வீடுகளிற்றான் கொள்ளையர்களின் அட்டகாசம் தீவிரமாக உள்ளதைக் காணமுடிகிறது. தேவைக்கு அதிகமாக உள்ளதை இல்லாதோருக்குக் கொடுத்துப் பகிர்ந்து வாழ்ந்தால் என்ன? ஒரு சிலரிடம் செல்வம் அளவுமீறிக் குவிந்திருப்பதாற்றான் இந்த விபரீதம். மித மிஞ்சியிருப்பதை ஏழைகளுடன் அல்லது வலது குறைந்தவர்களுடன் பகிர்ந்து கொண்டால் கொள்ளைக்கு இடமேது? சமுதாயம் மேடு, பள்ளம் இல்லாது இருந்தால் சச்சரவுகளுக்கு இடமிருக்க முடியாதல்லவா? இந்தப் பரோபகாரச் சிந்தனை சமுதாயத்தில் தோன்றும்வரை திருட்டு, கொள்ளைகளை சட்டத்தினாலோ, காவற்துறையாலோ, படையினராலோ, நீதிமன்றத்தாலோ அல்லது விழிப்புக் குழுக்களாலோ தடுக்கவே முடியாது. அவரவர் விரலுக்கேற்ற வீக்கத்தோடு வாழப்பழகிக் கொண்டால் ஒரு பாதகமும் இல்லை.

''அளவுக்கு மேலே பணம் வைத்திருந்தால்
அவனும் திருடனும் ஒன்றாகும்.
வரவுக்கு மேலே செலவுகள் செய்தால்
அவனும் குருடனும் ஒன்றாகும்.
களவுக்குப் போகும் பொருளை எடுத்து
வறுமைக்குக் கொடுத்தால் தர்மமடா
பூட்டுக்கு மேலே பூட்டைப் போட்டு
பூட்டி வைத்தால் அது கர்மமடா''

என்ற கண்ணதாசனின் பாடல் இவ்விடத்தில் பொருத்தமாக இருக்கும். இதனைச் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

வன்னிப் பிராந்தியத்தில் திருட்டுக் கொள்ளைகள் அறவே இல்லை. என்ன காரணம்? அங்கு செங்கோல் செங்கோலாகக் கோலோச்சுகிறது. ஆனால் இங்கு.....?

எனவே பகிர்ந்து கொள்ளுதலே ஆனந்தம்.

-யாழ்.வதிரிவாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையான இளவரசி

ஒரு ஊரில் ஒரு விவசாயி இருந்தான். அவனுக்கு ஓர் தங்கை இருந்தாள். அவள் பெயர் கலைவாணி. அவள் மிகவும் அழகி. அவளுக்கு திருமண வயது வந்து விட்டதால் அவளை ஒரு இளவரசனுக்குத் திருமணம் செய்யத் திட்டமிட்டான் விவசாயி. அவனது திட்டப்படி அவர்கள் இருவரும் அயல் நாட்டுக்குச் சென்றனர். ஒரு புதருக்கருகில் சென்றதும் தனது தங்கையின் ஆடையைக் கிழித்து புதருக்குள் போட்டுவிட்டு, தனது தங்கையை மறைந்திருக்குமாறு கூறிவிட்டு அரண்மனைக்கு ஓடினான்.

அரசியாரிடம் "நான் முல்லை நாட்டு இளவரசியுடைய வேலைக்காரன். நானும் இளவரசியாரும் தங்களைப் பார்த்து சில நாள்கள் இங்கு தங்கிவிட்டுச் செல்லலாம் என்று வந்தோம். வழியில் திருடர் கூட்டம் எங்களைத் தாக்கியது. அதனால் இளவரசியாருடைய ஆடை கிழிந்து விட்டது. தற்போது இளவரசியார் புதருக்குள் மறைந்து கொண்டிருக்கிறார். தங்களை அழைத்து வரும்படி என்னை அனுப்பி வைத்தார்" என்று கூறினான். உடனே அரசியார் தன்னுடன் தனது மகனையும், அதிகாரிகளையும் அழைத்துக் கொண்டு சென்றார். அங்கே கலைவாணியின் ஆடை கிழிந்து துண்டு துண்டாக இருப்பதையும், அவள் புதருக்குள் மறைந்திருப்பதையும் கண்டார். திருடர் கூட்டம் தாக்கியது உண்மை என அரசியார் நம்பினார். தனது அதிகாரிகளைத் திருடர்களைப் பிடித்து வருமாறு அனுப்பி வைத்தார். பிறகு தான் கொண்டு வந்த ஆடையை அணிவித்து கலைவாணியைத் தன்னுடன் அழைத்துச் சென்றார். அவள் அழகில் மயங்கினான் இளவரசன்.



திருடர்களைப் பிடிக்க முடியாது அரண்மனைக்குத் திரும்பினார்கள் வீரர்கள். தாயிடம் சென்ற இளவரசன் தனக்கு இந்த இளவரசியைத் திருமணம் செய்து தருமாறு கேட்டான். அப்போது அவனது தாய் "இவள் உண்மையான இளவரசியா? இல்லையா? என்று அறிவதற்கு இரண்டு சோதனைகள் வைத்திருக்கிறேன். அதில் அவள் வெற்றியடைந்தால் அவளை உனக்குத் திருமணம் செய்து வைக்கின்றேன்" என்று கூறிவிட்டு தான் வைக்கப்போகும் சோதனைகளையும் ஒவ்வொன்றாக விளக்கினார். இதனை மறைந்திருந்து கேட்ட வேலைக் காரன் தனது தங்கையிடம் இதைப்பற்றி ஒன்றும் விடாமல் கூறினான்.

இரவு வந்ததும் அரசியார் கலைவாணியை அழைத்து விளக்கேற்றச் சொன்னார். கலைவாணியும் பக்குவமாக எண்ணெய் ஊற்றி விளக்கேற்றினாள். பிறகு அருகில் நின்ற பணிப்பெண்ணிடம் "எனது கையில் எண்ணெய் சிந்திவிட்டது. துடைப்பதற்குத் துணி கொண்டு வா" என்றாள். பின்பு அரசியார் கலைவாணியிடம் "இன்று இந்தப் பாயில் படுத்துத் தூங்குங்கள்" என்றார் . அரசியார் சென்றதும் கலைவாணி பாயில் படுத்து நித்திரை வராதது போல் நடித்தாள். கலைவாணியின் அறைக்கு வந்த அரசி அவள் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். மறுநாள் காலையில் இளவரசனை அழைத்து " இவள் உண்மையான இளவரசிதான்" என்றார் அரசியார். திருமண ஏற்பாடுகள் நடைபெற்றன. திருமணம் முடிந்ததும் தனது தங்கையிடம் இருந்து விடைபெற்றுச் சென்றான் வேலைக்காரன். ★

புத்திசாலிக்கு வெற்றி நிச்சயம்.

நா.துவாரகா தரம்-7 யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.




மந்திரக் கிழவியின் ஆணைப்படி, இளவரசர்கள் இருவரையும் 'தர தர' வென இழுத்துச் சென்ற ராட்சதர்கள், குகையொன்றினுள் அவர்களை அடைத்தனர். குகையின் வாசலையும் ஒரு பெரிய பாறாங்கல்லால் மூடினர்.

குகையினுள்ளே ஒரே கும்மிருட்டு. இளவரசர்கள் இருவருக்கும் முதலில் ஒன்றுமே தெரியவில்லை. அந்தளவிற்குக் குகையெங்கும் இருள் ஆக்கிரமித்திருந்தது. எனினும் சிறிது நேரத்தில் அந்த இருட்டு கண்களுக்குப் பழக்கமாகி, காட்சிகள் கலங்கலாகப் புலப்படத் தொடங்கின. அதன் பின்னர் குகையின் ஒரு ஓரமாக மேடாக இருந்த இடத்தில் அமர்ந்து கொண்டனர்.

"இங்கிருந்து எப்படித் தப்பிப்பது?" என்று இந்திரவர்மன் கேட்டான்.

"இந்திரவர்மா! எங்களை ஒன்றுமே தெரியாத சிறுவர்கள் என்றுதான் மந்திரக் கிழவி எண்ணுகிறாள். அந்த எண்ணத்தைச் சாதகமாக்கினால் நாம் தப்பிக்க முடியும்!" என்று பதில் சொன்னான் சந்திரவர்மன்.



"நாம் கற்ற வித்தைகளெல்லாம் இந்தக் கிழவியின் மந்திரசக்திக்கு முன்னால் தாக்குப் பிடிக்குமா?" என்றான் இந்திரவர்மன்.

"யானைக்கும் அடி சறுக்குவதுண்டு. அது போல மந்திரக் கிழவியின் பலவீனம் என்ன என்பதை அறிய வேண்டும். அதற்கான வேலைகளில் நாம் இப்போதே இறங்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே தான் கட்டியிருந்த இடுப்புப் பட்டியை அவிழ்த்தான் சந்திரவர்மன். அந்த இடுப்புப் பட்டியின் உட்புறமாகக் கைவிட்டு, அதனுள் இருந்த இரத்தினக் கல்லொன்றை வெளியே எடுத்தான்.

மஞ்சள் நிறமான அந்த இரத்தினம் ஒளி வீசத் தொடங்கியதும், குகையில் இருந்த இருள் காணாமல் போனது.

அதேபோல் இந்திரவர்மனும் தன் காலணியைக் கழற்றி அதனுள் இருந்த கண்ணாடித் துண்டொன்றை வெளியே எடுத்தான். அதைக் கீழே வைத்துவிட்டு ஏதோ ஒரு மந்திரத்தை அவன் முணுமுணுத்தான். அடுத்த நொடியே அந்தக் கண்ணாடியில் இளவரசர்களின் குருநாதரின் முகம் தெரியத் தொடங்கியது. *(தொடரும்)*

## தாய்



அன்புகள் பல வேண்டாம்
தாயின் அன்பே வேண்டும்
உறவுகள் பல வேண்டாம்
தாயின் உறவே வேண்டும்
தூங்குவதற்குத் தலையணை வேண்டாம்
தாயின் மடியே வேண்டும்
நீல வான் இல்லாமல் மழை இல்லை
தாயே நீயில்லாமல் நான் இல்லை

வோ.விதுஷன்.தரம் - 9 C.




## நேர்மை காத்திட வேண்டும்



கல்விக்குக் கரையேது கூறு - அது
ஆழம் அறியா மாபெரும் ஆறு
மண்ணுக்குள் விளைந்திடும் முத்து - அது
மாபெரும் விருட்ச மாவதும் உண்டு

பூவுக்குள் மறைந்திடும் வாசம் - நம்
பூமிக்குத் தந்திட்ட நேசம்
நாவுக்குள் மறைந்திருக்கும் பாசை
நம் வாழ்வுக்கு ஒளிதரும் ஓசை

கல்லுக்குள் மறைந்திருக்கும் தேரை - அது
கண்டதில்லை பல நாளாய் நீரை
நெல்லுக்குள் மறைந்திருக்கும் மணியாய் - நீ
நேர்மை காத்திட வேண்டும் தனியாய்.

ஜெ.பிரகாஷ், தரம் 8 A,
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.

## விடுகதை சொல்லப்போறோம்...

01) தொட்டால் சுருங்கும். தொண்ணூறு கால். அது என்ன?
அட்டை.

02) மேடெல்லாம் கிடக்கும். கால் வைத்தால் அலற வைக்கும். அது என்ன?
முள்ளு.

03) உள்ளே வெள்ளைப் பூட்டு. வெளியே நார்ப் பூட்டு. அது என்ன?
தேங்காய்.

04) காலில்லை; தாவுவான். வாயில்லை; கத்துவான். அவன் யார்?
கடலும் அலையும்.

05) குச்சி உடம்பில், குண்டு தலையில். அது என்ன?
தீக்குச்சி.

06) ஆத்தோரத்து அக்கா, விடியும் வரை பாடுவாள். அவள் யார்?
தவளை.

07) கடலில் வாழும் கை. அது என்ன?
திருக்கை.

08) ஐந்து அரசனுக்கு ஒரு மீசை. அது என்ன?
செவ்வரத்தம் பூ.

09) மூன்றெழுத்துப் பறவை. கடைசி இரண்டு எழுத்தும் ஒட்ட உதவும். அது என்ன?
காகம்.

10) செம்பு நிறைய முத்து அது என்ன?
மாதுளம்பழம்.

க.சஜிதா - தரம் 5
யா/நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயம்.


## சிந்திக்க சில நிமிடங்கள்



* உலகில் எதுவும் இல்லாதவனுக்குத் தான் எதையும் தாங்கும் இதயமுண்டு.
* தீக்குச்சி ஒரு முறை சிரிப்பதால் மெழுகுவர்த்தி வாழ்நாள் முழுவதும் அழுகின்றது.
* அரிசியை நிலத்தில் கொட்டினால் பொறுக்கி விடலாம் - ஆனால் வார்த்தைகளைக் கொட்டி விட்டால் மீளப் பெறமுடியாது.
* எதைச் சிந்திக்கிறாய் என்பதில்லை, எப்படிச் சிந்திக்கிறாய் என்பதில்தான் புதிய கருத்துக்கள் வெளிவருகின்றன.
* கட்டுப்பாடு மனிதனுக்கு அவசியம். கட்டவிழ்ந்தால் கெட்டுவிடும் இலட்சியம்.

ச.சகல்யா, தரம் 7E,
யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

## பொன் மொழிகள்



★ பணமும் பத்தாயிருக்க வேண்டும்
குணமும் முத்தாயிருக்க வேண்டும்

★ குருடனுடன் சென்றாலும்
குறும்புக்காரனுடன் செல்லாதே

★ தகுதிக்கு மேல் செலவு செய்பவன்
தரித்திரத்தை விலைக்கு வாங்குவான்

★ உன்னை நீயே திருத்திக்கொள்
மற்றவர் திருத்த வராமல் இருப்பதற்கு

★ சமூகத்தை நீ நேசி
சமூகம் உன்னை நேசிக்கும்.

இந்துஜா,
தரம் 8, கண்டுக்குளி மகளிர் கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-




'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## மாணவர் தூரிகை

| றோ.அஜிதா<br>தரம் - 7,<br>யா/புனித றோக்ஸ் றோ.க.வித்தி. | நி.பார்த்தீபன்<br>தரம் - 6 B ,<br>யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி. | த.தனுசிகா<br>தரம் -8,<br>யாழ்.வட. இந்துமகளிர் கல்லூரி. | அ.அபூர்வா<br>தரம் - 5 தரம் C,<br>யா/திருக்குடும்பக் கன்னியர் மடம். |
|---|---|---|---|
|  |  |  |  |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையும் மனிதனும் அழித்தவை போக எஞ்சிய மர வளத்தையேனும் பாதுகாப்போமா?

இற்றைக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் சரிந்து விழுந்திருந்தது தல விருட்சமொன்று! மனிதனொருவன் இறந்த துயரத்தை விடப் பல மடங்கு துயரத்தை ஏற்படுத்தியிருந்தது இதன் சரிவு! ஆண்டாண்டு காலமாக யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் வாயிலில் வாயிற்புறக் காப்பாளர்களுடன் ஒருவராக இருந்து இளைப்பாறியிருக்கிறது. சரிந்த மரம் நிமிர்ந்து நின்றபோது செய்த சேவை அளப்பரியது. தலைமுறை தலைமுறை யாக அடியொதுங்கியவர்களுக்கு நிழல் கொடுத்து, அவ்வப்போது நிகழ்ந்த சூட்டுச் சத்தங்களுடன் பல்கலை இளசுகளின் சில்மிசங்களையும் யாருமறியாதிருந்து இரசித்து உயர்ந்து அகல விரிந்திருந்த அரச மரமது திடுதிப்பென சரிந்து விழுந்து விட்டது.

சரிந்தது சரிந்ததுதான். ஆனால் தான் சரிந்து வரப்போகும் அழிவைக் கட்டியம் கூறியும் மரத்தின் உன்னத செயலை மரத்துப்போன மனிதன் உணர்ந்து கொள்ளவில்லை. இதன் தாக்கம் ''நிஷா'' புயற்காற்று. உணர்த்தியபோதே எம்மில் பலர் சற்றுப் பிந்தியே புரிந்து கொண்டனர்.

**மரம் சரிந்தது! மனதுக்குக் கவலை**

மரத்திற்கு நேர்ந்த கதியையறிந்து இனம் புரியாத கவலையில் ஆழ்ந்தனர் ஒரு சிலர். சரிந்த மரமதை விரைந்து ஒளிப் படமாக்கிக் கண்ணீரஞ்சலியும் பிரசுரமா னது. பாதுகாப்பு காரணமாகியதால் விழுந்த மரத்தை வெட்டித் துண்டுகளாக்கித் தள்ளி அகற்றிவிட்டு மதில் எழுப்பப்பட்டுவிட் டது. மரம் நின்ற இடத்துத் தடயங்கள்

> எவ்வளவுதான் முன்னெச்சரிக்கை ஏற் பாடுகளுடன் செயற்பட்டாலும்கூட, இயற்கை யின் சீற்றத்தைத் தடுத்து நிறுத்துவது மனித இனத்துக்கு இயலாததொன்று. எனினும் முன்னேற்பாட்டுடன் செயற்பட்டால் பாதிப் பின் கடுமையை முடிந்தவரை குறைத்துக் கொள்ள இயலும்.
>
> கடந்த மாத இறுதியில் சற்றும் எதிர்பார்த் திராத வேளையில் யாழ்.குடாநாட்டை ஒரு கலக்குக் கலக்கி ஓய்ந்துள்ளன மழையும் 'நிஷா' சூறாவளியும்.
>
> அவற்றின் நேரடியான - உடனடியான பாதிப்புக்களைவிட, வெளிப்படையாகப் புலப்படாத பல்வேறு பாதிப்புக்களின் தாக் கத்துக்கு இன்று குடாநாட்டு மக்கள் முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.
>
> இந்த நிலையில், இனத்துக்கேயான நற் பண்பையும், மனிதத்தையும் கைவிட்டு, இயற் கையின் அழிவைச் சீர்செய்யப்போய் அழிந்த வைபோக, -குடாநாட்டின் எஞ்சிய மர வளத் தையும் கட்டுப்பாடின்றி சேதப்படுத்தி வரும் சாத்தியங்கள் தெரிகின்றன. இவற்றைச் சுட் டிக்காட்டுவதுடன் 'நிஷா'வின் தாக்கத் தால் எமக்கேற்பட்ட இழப்பினை மீண்டும் நேர்சீர் செய்ய மேற்கொள்ள வேண்டிய அவசிய-துரித செயற்பாடுகள் குறித்து இக்கட்டுரைத் தொடர் விளக்கி விவரிக்கிறது.

இன்னும் அங்கே இருக்கின்றன. இன்னும் கொஞ்சக் காலத்திற்கு இலையும் இருந்து உக்குமளவிற்கு உக்கியபின் மரம் இருந்த இடமேயில்லாமல் போய்விடும்.

பல ஆண்டுகளாக உயர்ந்தெழுந் திருந்த மரம் அடிமுழுவதும் உக்கி உள்ளே நடுவிலே கோறையானதாலும் இருந்த கொஞ்சநஞ்சப் பிடிப்புகளும் வலுவிழந்த தாலும் நிலை குலைந்து எவருக்கும் பாதிப்பில்லாதவாறு விழுந்து விட்டது. மீண்டும் அதனைத் தூக்கி நிமிர்த்த விரும் பிய இளகிய மனங்களுக்குக் கசப்பான செய்திதான். தூக்கி நிமிர்த்தினாலும் தன்னடி தனக்கினிப் பயனில்லையெனக் கண்டு கொண்டதால். அதைப் பக்குவ மாகச் சொல்லி வெட்டியகற்ற அனுமதியும் கொடுத்திருக்கிறது அரசமரம். மரத்திற்கு இருக்கின்ற பக்குவம் எமக்கில்லையே. ஒரு வேளை அநுராதபுரத்து ''அரச'' மரமாக இருந்திருந்தால் தண்டு கொடுத் துக் கட்டடமும் கட்டி மிண்டு கொடுத் திருப்பார்கள். இடம் மாறியதால் இடர் நிவாரணம் இம் மரத்திற்கு இல்லை.

**தானாகச் சரிந்ததும் தமக்காகச் சரிக்கப்பட்டவையும்**

இதுபோல தினந்தினம் பல மரங்கள் வயது வந்து சரிவதும், வசதிக்காகவும் வருமானத்திற்காகவும் சரிக்கப்படுவதும் மனதை நெகிழ வைக்கும் செயல்களாகும். வயது வந்து சரிவதென்பது மிக மிக அரிதாகவே காணப்படுகின்றது. இவை சரியாகப் பேணப்படாத காரணத்தினால், கவனிப்பாரற்று கிடப்பதால் இவ்வாறு நடக்கின்றது. தெருவோரத்தில் நிற்பதால் கவனிப்பென்பது மிகவும் குறைந்து விட்டது. இது போதாதென்று ''நிஷா'' வினால் நிசப்தமாகிவிட்ட கதை சோக மானது. ஆண்டாண்டு காலமாக நாம்

வாழுகின்ற சூழலுக்கு உயிர் கொடுத்து நிற்கும் அவ்வரிய மரங்களை, எமது சந்ததிகளைத் தொலைத்து நிற்கும் இவ் வேளையிலாவது இவ்வாறான விருட்சங் களை, கவனித்துக் கொள்ளக் கூடாதா? வயது முதிந்தவர்களுக்குண்டான, முதியவர்களுக்குரிய நியாயமான அங்கலாய்ப்பு இது தானே!

**மனிதனுக்கு மேலான கைங்கரியம்**

தன் கால்கள் களைத்துப் போனதால் பாதிப்பெதுவும் ஏற்படுத்தாது பக்குவமா கச் சரிந்து விழுந்து விட்டது அரசமரம். வயதான பலரும் தமது இறுதி நாள்களில் எவரையும் கஷ்டப்படுத்தாது செய்யத் துடிக்கும் கைங்கரியத்தை ''மரம்'' செய் திருக்கின்றது.

இருநூறு வருடங்களுக்கும் மேலாக நிமிர்ந்து நின்ற இந்தத் தலவிருட்சம் எம் அனைவரினதும் முதுசம். எமது பூர்வீக சொத்து. நாம் பிறந்து, தவழ்ந்த நிலம் கூட எமக்கில்லையாமே! அதைச்

மூச்சை மனிதன் உள்ளிழுக்கின்றான். காற்று ஒன்று; ஆனால் அதிலுள்ள கலவைகள் வேறு. மனிதன் விடும் மூச்சில் காபனீரொட்சைட்டு அதிகமிருக்கும். அதனை மரம் உள்வாங்கி ஒட்சிசனாக வெளிவிடுகின்றது. ஒட்சிசன்- காபனீ ரொர்சைட்டு வாயு சமநிலைக்கு இருவரும் அவசியம். அதிலும் மனிதன் உயிர்வாழ மரங்கள் என்றும் அவசியம். உணவு, நிழல், விறகு, போர்வை, உறைவிடம், மூச்சு என அனைத்தையும் தரும் மரங் களை வெட்டுவதில் ஈவிரக்கம் கொஞ்ச மேனும் இல்லையா?

மனித உறவுகளில் விரிசல் ஏற்பட்டா லும் மரத்தில் அது இருப்பதில்லை. இப்போதெல்லாம் விஞ்ஞானத்தின் துணை கொண்டு நாள் நேரம் பார்த்து இயற்கையை பகைத்து அறுத்தெடுக்கப் படுகின்ற தொப்புள் கொடி உறவிற்கு அந்த உறவின் பலமும் பலவீனமும் தெரிவதேயில்லை. நாள் செல்லச்செல்ல

லாக்கி மந்தசுகத்தை நுகர்ந்ததால் மரத்தின் மகிமையை மூடமனிதன் முற்றுமுழுதாய் மறந்தான். மரந்தான் அவனுக்கு தந்தது சுக மென்றதையும் மறந்தான். இதனால் மறத் தமிழன் மறந்த தமிழனாகிவிட்டானே! மரத்தை மட்டுமா மறந்தான். மண்ணை மறந்தான், மக்களை மறந்தான். மனிதம் என்றும் வாழும் பூமியையே மறந்தான். ஆசை கொண்டு பூமியிலிருந்து பூமியை மறந்து சந்திரனுக்கும் செவ்வாய்க்கும் ஏன் சூரியனுக்கும் 'றொக்கற்' விடுகின்றான்.

இதற்கு ''மறுத்தான்'' கொடுக்கப் பிறந்தான் இன்னொருவன். அதிசயம் தானே! அவனும் மனிதனாகவே பிறந்தான். இந்த மண்ணின் மைந்தனாகப் பிறந்தான்.

**எது பலம்? எதுவரையில் பலன்?**

மனிதம் வாழும் வரையில் பலம். ஆனால் மரத்துப்போகும் வரையில் மட்டும் அதனால் பலன். மரம் வாழும் வரையிலும் பலம். வீழ்ந்த பிறகும் பலம்.

# மரத்துக்கும் மனிதனுக்கும் இடையேயான பந்தம் தொப்புள் கொடி உறவுக்கும் மேலானதே!

சொல்வதற்காவது காலத்தின் குணாதி சயங்களைச் சொல்லும் இம்மரங்கள் தேவையன்றோ? மரத்துப்போன மனித ருக்கு கதை சொல்ல மனிதம் வாழுகின்ற மரங்கள் அவசியம் தேவை!

**மறத்தமிழன் மரமானது எப்போது?**

எமது வளங்களனைத்தும் சுரண்டப்படு கின்றன. இயற்கை அன்னையை அழிப் பதைச் சுட்டினேன். இயற்கை வளங்களை பயன்படுத்துவது-குறிப்பாகச் சிறப்பான தாக பாவிப்பது வேறு. ஆனால் எதற்கும் அசையாது தாக்குப்பிடித்த மரங்களை தருணம் பார்த்து 'நைசாக'' வெட்டி யெடுத்த அண்ணலார் மனமும் குறு குறுக்காதோ? யாழ்ப்பாண நகரத்தில் அங்குமிங்குமாக நின்ற மரங்கள் ''நிஷா'' வின் பேயாட்டத்தில் சிக்குண்டு ஏக்கத் திலே சரிந்து உயிரை விட்டிருக்கின்றன. எம்மவர் மனம் புண்பட்டிருக்கையில் கோடரியும் கத்தியும் போதாதென்று

அப்படி ஓர் உறவு இருப்பதையே உணர் வதில்லை. ஆனால் மரத்திற்கும் மனித னுக்கும் மிகவும் ஆழமான உறவுண்டு.

இந்த உறவின் ஆளுமையை, இறுக் கத்தை கவிஞர் வைரமுத்து கவிதையாக முழங்கியிருக்கிறார்.

**''மறந்தான்-மனிதன்**
**மரத்தை மறந்தான்.**
**மரந்தான்-மனிதன்**
**மனமும் மரந்தான்**
**மறந்தான் மரத்தை**
**மனிதன் மறந்தான்**
**மரத்தை மறந்த மனிதன்**
**மனமும் மரந்தான், மரந்தான்''**

**தொட்டில்-மரம்-சுடுகாடு**

தொட்டிலிலிருந்து சுடுகாடுவரை,- இன்னும் சொல்லப் போனால் சுடுகாட்டின் நெஞ்சாங்குத்தி வரை மரத்தின் உறவு

ஆனால் மரம் மனிதமாகும் போதும் அதனால் என்றுமே பலன். கன்னிக்காலாக நட்டால் இந்திர னுக்குப் பலன். கதிரைக் காலாக ஆக்கினால் எங்களூர் சுந்தரனுக்கும் பலன். செதுக்கிய சிலையாக ஆக்கினால் சிவனுக்குப் பலன். வேலியில் மரமாக ஆக்கினால் அனைவருக் கும் பலன். அதில்தானே ஏமது பலம்.

**மரத்தின் மகோன்னதம்**

2004 ஆம் ஆண்டு ஓங்கியெழுந்து ஆர்ப்பரித்த ஆழிப்பேரலைகளுக்குள் சிக்கி மரத்தைப் பிடித்து, மரத்தால் தடுக்கப் பட்டு, மரமாகக் கட்டிப்பிடித்ததால் எத்தனை உயிர்கள் காப்பாற்றப்பட்டன. மிதவை களாக மரம் மாறியதால் மிதந்து கரைசேர்ந் தன பல உயிர்கள். கட்டு மரத்தில் காலம் கடத்தின இன்னும் பல உயிர்கள். (கட்டு) மரமும் கடலும் வாழ்வாகிய மக்களுக்கு உழைப்பும் பிழைப்பும் (கட்டு) மரத்தால் தானே!

**தேவை உணர்தல் அவசியமன்றோ!**

மரங்களின் தேவை அவசியமாக உண ரப்பட வேண்டிய ஒன்று. மரத்தின் பயன் களைத் தெரிந்தும் தெரியாமலும் பெறத் துடிக்கும் ஒவ்வொருவருக்கும் அவற்றை நடுகை செய்வதிலும் பராமரிப்பதிலும் அக்கறை இருக்க வேண்டும். குறைகளை யும் பழியையும் விரைந்து அடுத்தவரில் போடும் பழக்கத்திலிருந்து விடுபட்டு ''நாம் என்ன செய்தோம்,'' நான் என்ன செய்தேன்'' என்று சற்றேனும் மரத்துக்குக் கீழிருந்து சிந்தித்தால் இந்தப் பூமித்தாய் குளிர எவ்வளவு மரங்களை நடவு செய்ய லாம்.

**''வெட்டுவது யாராக இருந்தாலும் நட்டவர் நாங்களாக இருக்க வேண்டும்.''**

புத்திமதிகளும் அறிவுரைகளும் தேவையில்லையென அவசரப்படும் சம கால சந்ததி உறவுகளுக்கு அவரவர் என்ன செய்தால்-எப்படிச் செய்தால் எல்லோரும் நலமாக வாழலாம் என கொஞ்சமேனும் சிந் திக்கப் பார்க்கலாமே.



இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக மனிதனுக்கும் இயற்கைக்கும் தர்மம் செய்த வழக்கம்பரை ஆலமரங்களில் ஒன்று சாய்ந்து போய்க் கிடக்கும் சோகமான காட்சி.

நீண்ட வெட்டும் வாளும் கொண்டு ஓடி யோடி லான்மாஸ்ரரில், உழவு இயந்திரத் திரத்தில் என ''நல்லது'' செய்வதாக பாசாங்கு காட்டி ''ஓசி'' யில் வெட்டிச் சென்று காசாக்குகின்றார் இங்கு சிலர். சரிந்த மரம் சரிந்திருக்க நின்ற மரத்தையும் சரித்துவிட்டார். அனைத்தும் ''அன்ன வருக்கு'' முதலாகி விட்டிருக்கிறது. மொத் தத்தில் பித்துப்பிடித்த முதல் தேடி அலை யும் முதலையாகிவிட்டார்.

சட்டமென்று எதுவும் வாளாதிருந்த தருணம் பார்த்து வாள் கொண்டு வெட்டி, துண்டாக்கி, ஏற்றிச் சென்று பதமாக அடுக்கி வைத்திருக்கிறார் நாலு காசு சேர்க்க. இவர் களது நீண்டநாள் கனவு ''நிஷா''வின் நாட்டியத்தில் நனவாகி விட்டது. தாவரவியலாளரும், சூழலியலாளரும் அரசும் எதுவுமே செய்ய முடியாத தருணம் இம்மறத்தமிழருக்கு குருமாறிய திசையாகி விட்டது. சும்மாவா சொன்னார்கள். வெட்டி யெடுத்தது அனைத்தும் ''தங்கம்'' அன்றோ? இதுவும் ஒருவகையில் வழிப்பறிதானே!

**மனிதனும் மரமும்**

மரத்திற்கும் மனிதனுக்கும் என்ன உறவு? தொப்புள் கொடி உறவிலும் மேலான உறவு இருவருக்குள்ளும் இருக்கின்றது. மனிதன் விடும் மூச்சை மரம் உள்வாங்கி [illegible]

மனிதனுக்கு இருக்கின்றது. எந்த சொந்த பந்தங்களும் இதற்கிடை யிலேயேதான் வந்து போகும். கடைசிக் கொள்ளி வைத்த பிறகு திரும்பியே பார்க்காது போகும் உறவைப் பார்த்து அந்த வெற்றுடலுடன் கூட இருக்கும் மரமெல்லாம் சேர்ந்து சிரிக்குமாம். மறுநாள் பஸ்பமாய் இருக்கும்-உறவின் அஸ்தியாக இருக்கும் சாம்பலில் கூட எரிந்த மரமும் இருக்குமாம். சடங்கின் முறைகளூடாக கங்கையில் கரைக்கும் வரை மரம் மட்டும்தானே எம்முடன் கூட வருகின்றது.

இந்தத் தாற்பரியம் புரிந்ததாலோ என் னவோ நெஞ்சாங்குத்திக்கென ஒரு சில மரங்களை விட்டுவைப்பார் இளகிய மனங் கொண்டவர். அப்படியாவது தப்பிய மரங் களை விட்டு வைத்திருந்தால் கொஞ்ச மரங்களாவது நகரத்திலே தப்பியிருக்கும்.

கவிஞர் கண்ணதாசனுக்கு இதுமட்டும் ஏன் புலப்படவில்லை? அல்லது புரிந்து கொள்ளட்டும் என சிலேடையாக விட்டுச் சென்றாரோ? வீடு வரை உறவு, வீதிவரை மனைவி, காடு வரை பிள்ளை, கடைசி வரை யாரோ? என்று வினவி அதை ''மரம்'' எனப் புரிந்து கொள்ளடா மனிதா என [illegible] எனத் தோன்றுகிறது.

[illegible] தொட்டிலாக்கிப் பின் கட்டி

## மரங்களை வளர்த்து மானுடம் காப்போம் 01

சிந்தித்தது சிதறி விடாது இருக்க அதனை சாதித்து காட்ட லாமே. ஒரு மரத்தையாவது நட்டு நம்பிக்கை தரலாமே. இந்தியாவை வளம்படுத்திக் காட்ட சுவாமி விவேகானந்தர் கேட்ட அந்த நூறு இளைஞர்கள் இங்கும் இருந்தால் இன்னொரு சரித்திரம் எழுதப்பட்டுவிடும். (வளரும்)



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டிகள் அடுத்த ஆண்டு பொதுவான இடத்தில்

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டித் தொடரைப் பொதுவான இடத்தில் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்திய - கிரிக்கெட் அணி அடுத்த மாதம் (ஜனவரி) 4ஆம் திகதி முதல் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டி மற்றும் ஒரு 20 ஓவர் போட்டியில் விளையாடத் திட்டமிடப்பட்டிருந்தது.

மும்பையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்ததால் இந்திய அணியின் பாகிஸ்தான் பயணததுக்கு மத்திய அரசு அனுமதியளிக்காது என்பது திட்டவட்டமாகத் தெரியவந்துள்ளது. இருப்பினும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை போட்டித் தொடரை நடத்த பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் ஆசிய கிரிக்கெட் சபையின் செயற்குழுக் கூட்டம் சென்னையில் நடக்கிறது. இதில் கலந்துகொள்ளும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகிகள் இந்தியா - பாகிஸ்தான் இடையிலான போட்டித் தொடரைப் பொதுவான இடமான இலங்கை, அபுதாபி அல்லது சார்ஜாவில் நடத்த வலியுறுத்தத் திட்டமிட்டுள்ளது. இந்தத் தகவலை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்தோடு அடுத்த ஆண்டில் பாகிஸ்தானில் நடத்தத் திட்டமிட்டுள்ள அனைத்துப் போட்டிகளையும் பொதுவான இடத்தில் நடத்தலாம் என்ற முடிவுக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இறங்கி வந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

# ஒலிம்பிக்கில் கிரிக்கெட்: லண்டன் மேயர் வலியுறுத்தல்



ஒலிம்பிக்கில் கிரிக்கெட் போட்டி சேர்க்கப்பட வேண்டும் என லண்டன் மேயர் போரிஸ் ஜோன்சன் வலியுறுத்தியுள்ளார்.

ஒலிம்பிக்கில் 'ருவென்ரி - 20' கிரிக்கெட் போட்டியைச் சேர்ப்பதற்கு இதுவே சரியான தருணம் என 'திங்க் லண்டன்' என்ற அமைப்பு லண்டனில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பேசும்போது போரிஸ் ஜோன்சன் தெரிவித்தார். ஒலிம்பிக் போட்டி 2012இல் லண்டனில் நடைபெறவுள்ளது. ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டையும் சேர்க்க வேண்டும் என அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் கில்கிறிஸ்ட் உட்பட பலர் வலியுறுத்தி வருகின்றனர். 1900 இல் பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி யிலும் 1998 இல் கோலாலம்பூரில் நடைபெற்ற கொமன்வெல்த் போட்டியிலும் மட்டுமே கிரிக்கெட் இடம்பெற்றது.

# சிறந்த நம்பிக்கை நட்சத்திரமாக சாய்னா



இந்த ஆண்டின் சிறந்த, வளர்ந்துவரும் நம்பிக்கை நட்சத்திர வீராங்கனையாக இந்தியாவின் சாய்னா நேவாலை, சர்வதேச பட்மின்ரன் கூட்டமைப்புத் தெரிவு செய்துள்ளது.

ஹைதராபாத்தைச் சேர்ந்த 18 வயதான பட்மின்ரன் வீராங்கனை சாய்னா நேவால், தனது அபார ஆட்டத்தின் மூலம் இவ்வாண்டு தொடர்ந்து பல வெற்றிகளைக் குவித்து வருகிறார். கொமன்வெல்த், உலக ஜூனியர் போட்டி, சீன-தைபே போட்டிகளில் பட்டம் வென்றதன் மூலம், மகளிர் தரவரிசைப் பட்டியலில் அவர் 10 ஆவது இடத்துக்கு முன்னேறினார். இந்நிலையில், இவ்வாண்டின் சிறந்த, வளர்ந்துவரும் நம்பிக்கை நட்சத்திர வீராங்கனைக்கான விருதை சாய்னாவுக்கு வழங்க, சர்வதேச பட்மின்ரன் கூட்டமைப்பு (பி.டபிள்யூ.எவ்.) முடிவு செய்துள்ளது.

தென்கொரியத் தலைநகர் சியோலில் டிசம்பர் 6 ஆம் திகதி நடந்த பட்மின்ரன் கூட்டமைப்புக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

# உடல் எடையால் தடுமாறிய ஹைடன்



மத்யூ ஹைடன் அவுஸ்திரேலியாவின் மிகச் சிறந்த தொடக்க வீரராகப் பெயர் வாங்கியிருக்கலாம். ஆனால், ஆரம்ப காலத்தில் அவர் உடல் எடை காரணமாக அவுஸ்திரேலிய அணியில் இடம் பெற முடியாமல் தடுமாறியிருக்கிறார்.

இந்தத் தகவலை அவுஸ்திரேலிய பயிற்சியாளர் ரிம் நீல்சன் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

38 வயதாகும் ஹைடன் டெஸ்ட் கிரிக்கெட்டில் 32 சதங்களை அடித்துள்ளதோடு 8,000 ஓட்டங்களுக்கும் மேல் குவித்து சாதனை படைத்துள்ளார். அவுஸ்திரேலியாவின் மிகச் சிறந்த தொடக்க வீரர்களில் ஒருவராக அவர் கருதப்படுகிறார்.

பல ஆண்டுகளாக அவுஸ்திரேலிய அணியில் நிலையான இடத்தைப் பிடித்துள்ள ஹைடன் ஆரம்ப காலத்தில் தனது உடல் எடை காரணமாக அணியில் சேர்க்கப்படாமல் விலக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய அணியில் இடம்பெறக் குண்டான ஹைடன் தகுதியில்லாதவர் என்று கருதப்பட்டு ஒவ்வொரு முறையும் புறக்கணிக்கப்பட்டதாக நீல்சன் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், ஹைடன் தனது மன உறுதியின் மூலம் போராடி அணியில் நுழைந்து நிலையான இடத்தைப் பிடித்துவிட்டதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

# தற்போதைக்கு ஓய்வு இல்லை - பிரெட் லீ



சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து தற்போது ஓய்வுபெறும் எண்ணம் இல்லை என அவுஸ்திரேலிய வீரர் பிரெட் லீ தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ சமீபத்தில் இந்தியத் தொடரில் மோசமாகச் செயற்பட்டார். ஆனால், அடுத்து நடந்த நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 9 விக்கெட்டுகளை வீழ்த்தி தனது சிறந்த பந்து வீச்சை நிரூபித்தார். பொன்டிங் ஓய்வு என்ற செய்தியை அடுத்து, இப்போது பிரெட் லீ ஓய்வு பெறப்போகிறார் என செய்திகள் வெளியாகின.

இதற்கு மறுப்புத் தெரிவித்து பிரெட் லீ கூறியது: எனக்கு இப்போது உள்ள உடல் நிலையில் இன்னும் குறைந்தது 4 அல்லது 5 ஆண்டுகள் கிரிக்கெட் விளையாடுவதில் உறுதியாக இருக்கின்றேன். வேகப்பந்து வீச்சாளராக இருப்பதால் அடிக்கடி காயம் ஏற்படுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் கிரிக்கெட் மிகவும் மாறி, புதிய வடிவில் உள்ளது.

என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் காயத்தால் 18 மாதங்களாக அணியில் 12 ஆவது வீரராகத்தான் இருந்துள்ளேன். எனது தரத்தை இப்போதும் உயர்த்திக் கொண்டுதான் உள்ளேன். இந்நிலையில் ஓய்வுபெறுவதைப் பற்றியே நான் சிந்திக்கவில்லை - இவ்வாறு பிரெட் லீ தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைவிமர்சனம்

# மகேஷ், சரண்யா மற்றும் பலர்





நீண்டகாலத்திற்குப் பிறகு, குடும்பப்பாசமும், மென்மையான காதலும் கலந்த ஒரு திரைப்படமாக வந்திருக்கிறது 'மகேஷ், சரண்யா மற்றும் பலர்'. இத் திரைப்படத்தில் ஷக்தி, சந்தியா, சரண்யா மோகன், கீர்த்தி சாவ்லா, சந்தானம் உட்படப் பலர் நடித்துள்ளனர். இதனை பி.வி.ரவி என்ற அறிமுக இயக்குநர் நெறியாள்கை செய்துள்ளார்.

கும்பகோணத்திலிருந்து படிப்புக்காகச் சென்னை செல்லும் ஷக்தி, அங்கே சந்தியாவைக் காதலிக்க ஆரம்பிக்கிறார். அதேவேளை ஷக்தியின் தங்கை சரண்யாவுக்கும் திருமணம் நடக்க இருக்கிறது. சரண்யாவின் மாப்பிள்ளையின் தங்கை கீர்த்தி சாவ்லாவுக்கும் அதேநாளில், ஒரே மேடையில் திருமணம் நடத்த ஏற்பாடு செய்யப்படுகின்றது.

ஆனால் கடைசி நேரத்தில் கீர்த்திசாவ்லாவின் மாப்பிள்ளை காணாமல் போய் விடுகிறார். இதனால் கீர்த்தி சாவ்லாவைத் திருமணம் செய்து கொள்ளும்படி எல்லோரும் ஷக்தியைக் கெஞ்சுகின்றனர். சந்தியா மீது கொண்ட அளவற்ற காதலால் கீர்த்தி சாவ்லாவை மணக்க மறுக்கிறார் ஷக்தி. இதனால் தன்னுடைய குடும்பத்தாரின் வெறுப்புக்கு ஷக்தி ஆளாகின்றார். இறுதியில் என்ன நடந்தது என்பதையே சொல்கிறது 'மகேஷ், சரண்யா மற்றும் பலர்' திரைப்படம்.

இளம் நடிகர் என்ற பயமில்லாமல் மிக இயல்பாக, அழுத்தமான நடிப்பைப் பதிவு செய்திருக்கிறார் ஷக்தி. இறுதிக் காட்சியில் சந்தியாவின் நடிப்பு கண்களில் நீரை வரவழைக்கின்றது. ஷக்தியின் தங்கையாக வரும் சரண்யா மோகனும் மனதில் பதிகின்றார். சந்தானமும், ஷக்தியும் சந்தியாவின் முகவரியை அறிய எடுக்கும் முயற்சிகள் சிரிப்பலையை உண்டு பண்ணுகின்றன.

அழுத்தமான கதையை வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார் அறிமுக இயக்குநர் பி.வி.ரவி. வித்தியாசாகரின் இசையும் படத்திற்குப் பலம் சேர்த்துள்ளது.

கனமான கதையைக் கலகலப்பாகச் சொல்லியிருக்கிறது.

'மகேஷ், சரண்யா மற்றும் பலர்!'

# பிரிந்தனர் நண்பர்கள்






இசையமைப்பாளர் யுவன் ஷங்கர்ராஜாவும், இயக்குநர் செல்வராகவனும் நீண்டகால நண்பர்கள். இருவரும் இணைந்து கொடுத்த படங்கள் எல்லாமே வெற்றியைச் சுவைக்காமல் விட்டதில்லை.

இவர்கள் இருவரும் 'வெள்ளை யானைகள்' என்ற பெயரில் ஒரு படத் தயாரிப்பு நிறுவனத்தையும் ஆரம் பிக்கத் திட்டமிட்டிருந்தனர்.

இப்போது யார் கண்பட்டதோ தெரியவில்லை. பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பது போல நெருங்கிய நண்பர்கள் இருவரும் இப்போது நிரந்தரமாகப் பிரிந்து விட்டனர்.

இந்தப் பிரிவு குறித்து செல்வராகவன் எதுவும் கூறாவிட்டாலும், தன் மனக் குமுறல்களைப் பத்திரிகையாளர்களிடம் சொல்லியிருக்கிறார் யுவன் ஷங்கர்ராஜா.

அதில் -'ஒரு நல்ல நண்பனாக இருக்கும் தகுதி செல்வராகவனுக்கு இல்லை' என்றும் யுவன் புலம்பியிருக்கிறார்.★

# 'டடுக்' விருது பெற்ற ஷாருக்!



ஹிந்தித் திரையுலக சூப்பர் ஸ்டார் ஷாருக்கானுக்கு, மலேசியாவின் உயரிய விருதுகளில் ஒன்றான 'டடுக்' வழங்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் 6 ஆம் திகதி கோலாலம்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்த விருது அவருக்கு அளிக்கப்பட்டது.

இங்கிலாந்து அரசு வழங்கும் 'நைட்' பட்டத்திற்கு இணையானதாக மலேசியாவில் கருதப்படும் பட்டம் 'டடுக்' மலேசியாவின் மலாக்கா மாநில அரசு இந்த விருதினை ஷாருக்கானுக்கு அளித்தது. மலாக்கா மாநிலத்தைச் சிறந்த சுற்றுலாத் தளமாக்க ஷாருக்கான் உதவியதற்காக இந்தக் கௌரவத்தை அந்த மாநில அரசு வழங்கியுள்ளது. மலாக்கா மாநிலத்தில் ஷாருக்கானின் 'ஒன் டு கா போர்' உள்ளிட்ட இரு படங்களின் படப்பிடிப்புகள் நடந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. டிசெம்பர் 6 ஆம் திகதி நடைபெற்ற விழாவில் நடிகர் ஷாருக்கான் மலேசியப் பாரம்பரிய உடையணிந்து பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.★

# அறிமுகப்படுத்தியவருக்கே 'அல்வா'



அஞ்சாதே படத்தில் ''கத்தாழைக் கண்ணாலே....'' பாடலில் குத்தாட்டம் போட்டு, தமிழ் ரசிகர்களின் மத்தியில் வரவேற்பைப் பெற்றவர் நடிகை ஸ்னிக்தா.

அஞ்சாதே பட இயக்குநரான மிஷ்கின் தன்னுடைய 'நந்தலாலா' படத்தின் கதாநாயகியாகவே ஸ்னிக்தாவை அறிமுகப்படுத்த எண்ணியிருந்தார். எனினும் நந்தலாலா படம் சில காரணங்களால் பிற்போடப்பட்டதால் அஞ்சாதே படத்தில் ஸ்னிக்தாவை ஒரு பாட்டுக்கு மாத்திரம் பயன்படுத்தினார்.

இப்போது 'நந்தலாலா' படத்தை இயக்கியபடி, நாயகனாகவும் நடித்து வருகிறார் மிஷ்கின். நாயகி ஸ்னிக்தாதான்! ஆனால், படப்பிடிப்புக்கு ஒழுங்காக வராமல் இழுத்தடிக்கிறார் ஸ்னிக்தா. ஸ்னிக்தாவுக்குத் திரையுலக வாழ்வு கொடுத்த தனக்கே இப்படி 'அல்வா' கொடுக்கிறாரே! என்று மிஷ்கின் பெருங் கவலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.★

# மகனை இழந்த பிரபுதேவா



நடன இயக்குநர், திரைப்பட இயக்குநர், நடிகர் என்று பன்முகத்தன்மை கொண்டவராக விளங்கும் பிரபுதேவாவின் வாழ்வில் இப்போது இடி விழுந்திருக்கிறது. அவரது மூத்தமகனான விஷால் கடந்த ஆறுமாத காலமாகப் புற்றுநோயால் அவதிப்பட்டு, சிகிச்சை பயனளிக்காது டிசெம்பர் 4 ஆம் திகதி இறந்துவிட்டார். இதைத் தாங்கிக் கொள்ள முடியாது, கவலையில் மூழ்கிப்போய் இருக்கிறார் பிரபுதேவா. தன்னைச் சந்திக்க வருபவர்களிடம் தன் மகனின் நினைவுகளைப் பகிர்ந்து அழுகிறாராம்.

பிரபுதேவாவின் மகனின் மறைவைத் தொடர்ந்து, பிரபுதேவா இயக்கத்தில் விஜய் நடித்துவரும் 'வில்லு' படப்பிடிப்பு தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்ரன் பாலசிங்கம்: வரலாற்றினுள் வெடித்தெழுந்தவர்



**தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் இரண்டாம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

பிரான்சிலிருந்து
பரணி கிருஸ்ணரஜனி

ஐரோப்பாவிலிருந்து விடுபட்டு பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் விரல்விட்டு எண்ணக் கூடிய குடிப்பரம்பலைக் கொண்ட ஒரு சிறு தீவிலிருந்து மழையும் புயலும் அடித்து ஓய்ந்துபோன ஒரு நாளின் பின்னிரவில் இதை எழுத நேரிடுகிறது. வானத் திலிருந்து கொட்டிய தண்ணீர் முழுவதையும் உள்வாங் கியிருந்த கடல் அவற்றை வெளியேற்ற எத்தனிப்பது போல் கடல் அலைகள் மூர்க்கமாக கரையை நோக்கி வந்து மோதிக்கொண்டிருக்கின்றன.

நீண்ட நாள்களாக இழுபறிப்பட்டு அன்றுதான் வந்த பணி முடிந்து ஆள் அரவமற்ற அத்தீவை விட்டு வெளியே போகும் சந்தோசத்தில் சக நண்பர்கள் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஐரோப்பாவிலிருந்து தொலைபேசியில் உரையாடிய நண்பன் ஒருவன் இணைப்பை துண்டிக்கும் முன் கூறிய இறுதி வாக்கியம் எனது நித்திரையை தொலைத்து விட்டிருந்தது: அது 'பாலாண்ணையின் நினைவுநாள் வருகுது' அந்த வரிகள் மன அடுக்குகளில் ஆழமாக உள்ளிறங்கி எண்ணற்ற நினைவலைகளை உருவாக்கிவிட்டி ருந்தன. இந்த எண்ணவோட்டத்துடன் கடல் அலை களை பார்க்கும் போது அவையும் பாலாண்ணையின் நினைவுகளையே கரையை நோக்கி எடுத்துவருவது போல் ஒரு பிரம்மை....

என் வாழ்நாளின் நிம்மதியற்ற இரவு களில் அதுவும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டது.

★★★

இரண்டு வருடங்கள். போராட்டத்தின் தாங்கு தூண்களில் ஒன்றும் அதன் இயங்கு சக்திகளின் மையமுமாகிய ஒருவர் இல்லாம லேயே கடந்து விட்ட காலங்கள் இவை. ஒரு வகையில் கொடுமையான நாள்கள்.

காலம் என்பது பல நினைவுகளை தின்று செரித்துவிடக்கூடியது. ஆனால் சில இழப்புக் களும் பிரிவுகளும் காலத்தால் தின்று தீர்த்துவிட முடியாதவை. கால உடைப்பில் சிதறுண்டு போகாத அத்தகைய ஒரு பேரிழப்புத்தான் அன்ரன் பாலசிங்கம் அவர்களுடையது. அவரின் இழப்பினூடாக விழுந்த வெற்றிடம் என்றுமே இட்டு நிரப்பப்படமுடியாதது. ஆனால் நிரப் பப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். ஆனால் துரதிஸ்டவசமாக அந்த வெற்றிடம் அப்படியே வெறுமையாகவே கிடக்கிறது.

### முக்கிய கட்டத்தில் போராட்டம்

போராட்டம் மிக முக்கியமான வரலாற்றுக் கால எல்லைக்குள் பிரவேசித்திருக்கிற தருணம். இந்த வரலாற்றுத் தருணத்தில் அவர் இல்லையே என்ற ஏக்கமும் கவலையும் இயல்பாகவே தொண்டைக்குள் வந்து பந்தாய் அடைத்துக் கொள்கிறது. பாலசிங்கத் திற்கான நினைவுக் குறிப்பாய் இந்த பத்தியை எழுதி முடிக்கலாம். ஆனால் அவருக்கான உண்மையான அஞ்சலி யும் நினைவும் அதில் தங்கியிருக்கவில்லை.

அவர் தன் வாழ்நாளில் எத்தகைய பணியை மேற்கொண்டிருந்தார். அது இன்று எவ்வாறு முன்னெடுத்துச்செல்லப்படுகின்றது என்பதை ஆராய்வதும் அதிலுள்ள தேக்கங்களைக் கண்ட டைந்து அதைக் களைய முற்படுவதும்தான் நாம் அவருக்குச் செய்யும் நிஜமான அஞ்சலி யாகும். இதையொட்டி இந்தப் பத்தியினூடாக பன முக ஆளுமை கொண்ட அவரது பணியின் ஒரு சிறு பகுதியை விளங்கிக் கொள்ள முற்படுவோம்.

இக் கட்டுரையின் தலைப்பு frantz fanon இன் wretched of earth நூலுக்கு jean paul satre எழுதிய முன்னுரையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது. ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைப் போராட்ட வடிவங் களை விபரிக்கும் frantz fanon இன் இந்நூல் உலகப் பிரசித்திபெற்றது. அதைவிடப் பிரசித்தம் அந்நூலுக்கு satre எழுதிய முன்னுரை. உலக வரலாற்றிலேயே நூலின் உள்ளடக்கத்திற்கு நிகராக எதிர்வினையை எதிர்கொண்டதும் சிலாகிக்கப்பட்ட தும் அனேகமாக சர்த்தரின் இந்த முன்னுரையாகத் தான் இருக்க முடியும்.

நீதி என்பது அரசின் வன்முறை. வன்முறை என்பது மக்களின் நீதி' என்ற கருத்தியல் கோட் பாட்டின் அடிப்படையில் ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலையின் அடிநாதமாக இருக்கும் வன்முறையை சிலாக்கிக்கும் frantz fanon இன் நூலுக்கு முன்னுரை எழுதப்புகும் sartre பல படிகள் மேலேபோய் வன் முறையின் உச்சமாக நிகழும் பயங்கரவாதத்தை தூக்கிப் பிடிக்கிறார். அரச வன்முறைக்குள்ளாகி நிர்க்கதியாகி நிராயுபாணிகளாக இருக்கும் மக்களின் ஒரே ஆயுதம் பயங்கரவாதம் மட்டுமே என்று வாதிடும் sartre ஒடுக்கப்பட்டவர்களின் ஆயுதக்கிளர்ச்சிக்கு ஒரு புதிய வடிவத்தையும் தருகிறார். பிரெஞ்சு வேர்ச் சொல்லல் இருந்து பிரித் தெடுத்து "terror" என்ற வார்த்தைக்கு ஒரு புதிய வியாக்கியானத்தை வழங்கியவர் சர்த்தார்.

சர்தாரினதும் பனானினதும் வியாக்கியானப படி அரசின் வன்முறைக்குள்ளாகி ஒடுக்கப் பட்டு அடக்கப்படும் ஒரு இனத்திலிருந்து அந்த அடக்குமுறைக் குள்ளிருந்தே திமிறியெழுந்து வன்முறையின் துதிபாடியபடி வரலாறு ஒன்று மேலெழும் என்பது ஒரு கோட்பாடாகக் கட்டவிழ்கிறது. அப்போது அந்த வரலாற்றின் மீது பேரொளி ஒன்று வந்து குவிகின்றது. அப்போது ஒடுக்கப்பட்ட அந்த இனம் மட்டுமல்ல எதிரிகள் உட்பட ஒட்டுமொத்த உலக முமே அந்த வரலாற்றுப் பேரொளியின் தரிசனத்தைக் காண்கிறார்கள். அது ஒரு முடிவிலி. அந்த இனத்தின் வரலாறாகவும் வழிகாட்டியாகவும் அது இயங் கிக் கொண்டேயிருக்கும். வரலாறு என்பது அதன் போக்கில் எழுதப்படும் என்பது ஒரு இயங்கியல்விதி. தமிழினத்தின் இயங்கியலும் வர லாறும் யார் என்பதை சொல்லவும் வேண்டுமா?

### தமிழினத்தின் இயங்கியலும் வரலாறும்

கால நீரோட்டத்தில் தமிழினத்தின் இயங் கியலையும் வரலாற்றையும் இனங்கண்டு அத னோடு இணைந்து இசைநது அந்த வரலாற்றி னது 'குரல்' ஆகப் பரிமாண மாற்றமடைந்தவர் தான் அன்ரன் பாலசிங்கம் அவர்கள். ஒருவகை யில் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் அந்த இயங்கியல் வரலாற்றினுள் வெடித்துக் கிளம்பிய வர் என்றுதான் தற்போது தோன்றுகிறது.

காலனியாதிக்கத்திற்கெதிராகத் தனது வாழ்வின் இறுதிவரை போராடிய கறுப்பின வீரரான பிரான்ஸ் பனானை உலகிற்கு அறிமுகம் செய்த பெருமை சர்த்தாரையே சாரும். இருவரும் இணைந்து பணியாற்றி யது மட்டுமல்ல பனான் இறந்த பிற்பாடும் அவரது கோட்பாடுகளை - கொள்கைகளை உலகிற்கு கொண்டு சேர்த்த பெருமையும் சர்த்தாரையே சாரும். அதன் அடையாளம் தான் jean paul satre தொகுத்த frantz fanon இன் wretched of earth நூல்.

கால வெளியில் வைத்து யோசித்துப் பார்க்கும் போது ஒரு கோணத்தில் பனானுக்கு ஒரு சர்த்தார் போல் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு ஒரு அன்ரன் பாலசிங்கம் என்று இப்போது புரிகிறது. வரலாறு என்பது எவ்வளவு அற்புதமானது. சும்மாவா சொன்னான் ஜெர்மானிய தத்துவக் கிழவன் கேகல் (hegal) 'வரலாறு என்பது அதன் போக்கில் எழுதப்படும்' என்று...

"war and terror" என்ற பெருங்கதை யாடல்களுடன் 'பயங்கரவாதத்திற்கெதிரான போர்' புரியக் கிளம்பியிருக்கும் மேற்குலக வல்லரசுகளின் ஒற்றை அறத்தையும் நீதியையும் இன்று எதிர்கொள்ள எம்முடன் பனானும், சர்த்தாரும் இல்லாமல் போனது ஒரு வகையில் துரதிஸ்டவசமானதுதான். இதை ஒரு வகையான காலக்குழப்பம் என்றுதான் கூற வேண்டும். அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தன் வாழ்நாள் பணியாகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மீது விழத் தொடங்கியிருந்த 'பயங்காரவாத' சாயத்தை தொடர்ந்து ஏதோ ஒரு வகையில் எதிர்கொண்டவண்ண மிருந்தார். அவருடைய அந்த பணியின் ஆழத்தைத்தான் இன்று நாம் சர்த்தரினதும் பனானினதும் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

### விடுதலைப் போராட்டங்களுக்கு பயங்கரவாத முத்திரை

விடுதலைப் போராட்டங்களுக்குப் பயங்கர வாத முத்திரை குத்தி 'அழகு' பார்க்கும் அரச பயங்கர வாதத்திற்கு எதிராக நாம் சர்த்தாரின் மீள் வருகை ஒன்றை உறுதி செய்ய வேண்டி யது காலத்தின் கட்டாயம். ஒரு போராடும் இனம் என்ற அடிப் படையில் ஈழச் சூழலின் உச்சத்தில் நிறுத்தப்பட வேண் டிய சர்த்தார், பனான் போன்றவர்கள் தமிழ்த் தேசிய ஊடகப் பரப்பின தட்டையான ஒற்றையான வழிநடத்த லினால் மறக்கடிக்கப்பட்டதும் காணாமல் போனதும் துரதிஸ்டவசமானது.

இவர்களின் [illegible] பழக்கப் பட[illegible] தற்போதைய மோசமான களநிலவரங்களை முன்வைத்து ஒரு ஈழத்தமிழன் பிதற்றிக் கொண்டிருக்கமாட்டான். புலிகள் தமது பின்னகர்வினூடாக போராட்டத்தைத் தக்க வைப்பதையும் போராட்ட வடிவத்தை புலி கள் மாற்றிக் கொண்டிருப்பதையும் சுலப மாக இனங்கண்டிருப்பான். தமிழ்த் தேசிய ஊடகங்கள் இனியாவது தமது வரலாற்றுப் பொறுப்பை உணர்ந்து தமது பன்முகத் தன்மை யைக் கட்டிக்காக்க முன்வர வேண்டும்.

### அன்ரன் பாலசிங்கத்தின் தோற்றுவாய்

இந்த வரலாற்றுப் பின் புலத்திலிருந்து துதிபாட லாக இலலாமல், மிகையுணர்ச்சி சார்ந்து இயங்காமல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் தோற்றுவாயை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அது தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் தோற்றுவாயுடன் பொருத்தப்படுவதை ஒரு கட்டத்தில் அவதானிக்கலாம்.

வெற்றியின் விளிம்பில் நின்று ஆரவாரங் களுடன் ஒரு ஆய்வை முன்வைப்பதைவிட தற்போதுளள இந்த இக்கட்டான சூழலில் ஒரு தேடலை நிகழ்த்து வதுதான் பொருத்தமாக இருக்கும். அது தான் உண்மையானதாகவும் இருக்கும். இதை எழுதிக் கொண்டிருக்கும் போது மகிந்தவின் படைகள் குமுழமுனை, அலம்பில் தொடங்கி மாங்குளம் கனகராயன் குளம் வரை நீண்டு பரந்தன் வரை ஒரு பிறை வடிவ முற்றுகைக்குள் புலிகளை அடக்கி வைத்திருக்கும் செய்திவந்து சேர்கிறது. ஒரு வகையில் உண்மையிலேயே இது ஒரு அற்புதமான தருணம். ஏனெனில் ஒரு விடுதலைப்போராட்டத்தின் யதார்த்தத்தை உண்மையிலேயே பிரதி பலிக்கக்கூடிய இடமும் காலமும் இதுதான்.

போராட்டத்தின் தேவை என்பதே அழிவிலும் துயரத்திலும் இருந்துதான் பிறக்கிறது. எனவே ஒரு போராட்டத்தின் முடிவை- வீழ்ச்சியை ஒரு நிலப்பரப்பைக் கைப்பற்றுவதனூடாக, அழிவை ஏற்படுத்துவதனூடாக அந்த இனத்தின் துயரத்தை முன்னிறுத்தி வரையறுப்பதை கோமாளித்தனம் என்பதைவிட வேறு வார்த்தைகளில் விபரிக்க முடியவில்லை. பனானின் மொழியில் கூறினால் 'இந்த நிலைக்கு அஞ்சத் தேவையில்லை. அடக்கு முறையாளனின் இந்த வழிமுறைகள் வழக்கொழிந்தவை.. சில சமயங்களில் அவை விடுதலையைத் தாமதப்படுத்த இயலும்: ஆனால் தடுக்க முடியாது'. இதை நாம் எமக்கு தெரிந்த வேறு ஒரு மலினமான சொல்லாடலில் தமிழக நகைச்சுவை நடிகர் வடிவேல் பாணியில் குறிப்பிட்டால் சின்னப்புள்ளத்தனமா இல்லை'.

### தொடங்குவதற்கு முன்பே தோல்விகண்ட போர்

சர்த்தார் இன்னும் அழகாகக் குறிப்பிடுகிறார். 'தொடங்குவதற்கு முன்பே தோல்வியைத் தழுவி விட்ட ஒரு போரில் தங்கள் முழுப் படைபலத் தையும் பிரயோகித்து எதிரி நிலத்தை ஆக்கிர மித்து வெற்றுக்கூச்சலிடுகிறான். இந்த செயல் முழுவதும் வரலாற்றை எழுதப்புகுந்துவிட்ட சுதேசிகளின் விடுதலை நிறைவேற்றத்தை தாமதப்படுத்துவதே ஒழிய. முற்றாகத் தடுப்பதல்ல'. எத்தகைய தீர்க்கதரிசனமான வார்த்தைகள்.

இந்தத் தீர்க்கதரிசனங்களை தின்று செரித்து வரலாற்றினுள் வெடித்தெழுந்த வர்தான் அன்ரன் பாலசிங்கம். அதுதான் அவரால் இறுதிவரை 'பயஙகரவாத' பூச்சாண்டிகளுக்கு அஞ்சாமல் தமிழ மக்களின் ஆயுதப் போராட்டத்தை உலக அரங்கில் துணிச்சலுடன் முன்மொழிய முடிந்தது. அன்ரன் பாலசிங்கத்தின் வழி ஒவ்வொரு தமிழனும் வரலாற்றினுள் வெடித்தெழுவோம். நமது தாக்குதலால் அவ் வரலாற்றை உலகளாவியதாக மாற்றுவோம். நாம போராடுவோம். நிலங்கள் ஆக்கிரமிக்கப பட்டாலும் பிரச்சினையில்லை- ஆயுதங்கள் இல்லை யென்றாலும் பிரச்சினையில்லை - காத்திருக்கும் சக்திகளின் பொறுமை போதும். அன்ரன் பாலசிங கத்திற்கான நிஜமான அஞ்சலிக்குரிய வார்த்தை கள் அவை. ஏனெனில் சர்த்தார் குறிப்பிடுவது போல் தொடங்குவதற்கு முன்பே தோல்வியைத் தழுவி விட்டான் எதிரி.

அன்ரன் பாலசிங்கம் அவர்களை ஈழ விடு தலைப் போராட்டத்தின் மதியுரைஞர். கோட் பாட்டாளர் என்று நாம் கூறிக்கொண்டாலும் அவர் குறித்து ஒரு தட்டையான வாசிப்பே ஈழத் தமிழ்ச் சூழலில் இருக்கிறது. நாம் அவருடைய தோற்றுவாயை ஆராயத் தவறிவிட்டோம்.

பிரித்தானியாவிலிருந்து புறப்பட்டு வந்த அவர் எப்படி ஆயுதம் தரித்த குழுக்களை ஆத ரித்து அதன் பின் நின்றார் என்ற யதார்த்த புற நிலையை ஆராயவும் அடையாளங் காணவும் தவறிவிட்டோம்.

இத்தவறுகள்தான் இன்றைய போராட்டம் குறித்த தவறான புரிதலுக்கு நம்மை கொண்டு சென்று நிறுத்தியிருக்கிறது. மேற்குறிப்பிட்ட புறநிலைகளின் தோற்றுவாய்களைப் பிரக்ஞை பூர்வமாக நாம் தேடத் தொடங்கினால் அத் தேடல் எம்மை சர்த்தாரிலும் பனானிலும் கொண்டு போய் நிறுத்தும். ஏனெனில் அவர்களின் தொடர்ச்சியே அன்ரன் பாலசிங்கம்.

அந்த ஆய்வின் தொடர்ச்சி பயங்கரவாதம். புரட்சிகர வன்முறை. வன்முறையின் அறவியல் தொடர்பான கோட்பாடுகளை உய்ந்துணர்ந்து கொள்வதுடன் மட்டுமல்ல தற்போதைய களநிலவரங்களின் கன பரிமாணத்தை உணர்த்து வதுடன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தந்தி ரோபாய வடிவ மாறுதலையும் இனங்காட்டும்.

அன்ரன் பாலசிங்கம் குறித்து இன்னும் ஒரு தவறான புரிதல் இருக்கிறது. அவர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டம் இல்லை என்று நிறுவ முயன்றார் என்பதுதான் அது. இதைத்தான் நாம் தவறு என்கிறோம். ஏனெனில் அவர் அவ்வாறு செய்ய முற்படவில்லை என்பதுதான் உண்மை. இந்த இடத்தில் ஒரு முக்கியமான விடயம். பாலசிங்கம் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளில் அவரை முன்வைத்து இன்று நாம் பேசிக் கொண்டிருக்கும் விடயம் மிகச் சிக்கலானது மட்டுமல்ல நுட்பமானதுமாகும். எமது போராட்டத்தின் மீது தொடர்ச்சியாகத் தடவப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த சாயத்தைக் கேள்விக்குள்ளாக்குவதுடன் அதிலிருந்து வெளியேறும் நோக்குடனுமே நாம் இது குறித்து தேட வேண்டியவர்களாக இருக் கிறோம்.

மேற்கண்ட வரிகளை முன்வைத்து ஒருவர் அப்படியென்றால் 'புலிகள் என்ன பயங்கரவாதி களா? பாலசிங்கம் அதை முன்மொழிந்தாரா?' என்று கேட்டு வாதாட முன்வரலாம். இது ஒரு ஒற்றைப் பார்வை. பன்முகக் கோணத்தில் அது உண்மையல்ல. இதன் அடிப்படையில்தான் பாலசிங்கம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தவிர்க்க முடியாமல்போன பயங்கரவாத கூறுகளை ஒரு அறவியல் வடிவமாக இனங்கண்டு அதை நியாயப்படுத்தினார் - கொண்டாடினார்.

### துணிச்சலுடனும் நேர்மையுடனும் உலகத்துடன் பேசியவர்

ஏனெனில் நிராயுதபாணிகளாக - நிர்க்கதி யாக நின்ற தமிழினத்தின் ஒரே ஆயுதமும் தீர்வும் அதன் மித மிஞ்சிய வன்முறையிலேயே அடையாளம் காணப்பட்டது. இதை அவர் துணிச்ச லுடனும் நேர்மையுடனும் உலகத் துடன் பேச முற்பட்டார். எந்தக் கட்டத்திலும் அவர் இதிலிருந்து இறங்கவேயில்லை.

சர்த்தாரின் மொழியிலேயே எமது 'பயங்கர வாதத்திற்கு' நாம் வியாக்கியனம் கூறினால், எமது வன்முறை வெறும் கோபக் குமுறல் அல்ல. 'வன்மத்தின் விளைவுமல்ல. அது எம்மை நாமே திருப்பி படைப்பது. எந்த ஒரு நளினத் தாலும் மேன்மையாலும் சிங்களத்தின் வன் முறையை அழிக்க முடியாது. எமது வன்முறையால் மட்டுமே அதை அழிக்க முடியும்.

(16 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் என்றுமில்லாத வெள்ளப்பெருக்குக்கு பூகோள ரீதியான வாய்ப்பு ஏதும் இல்லை

**2004** ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி எமது நாட்டுக்கும், மக்களுக்கும் அறிமுகமான ''சுனாமி'' என்ற சொல்லை மறப்பதற்கு முன்னர் 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி (ஒரே திகதி) இன்னொரு பாடத்தை இயற்கை நமக்குக் கற்பித்துள்ளது. இந்த இரண்டு நிகழ்வுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஒரு விடயத்தை மட்டும் இலகுவாகப் புரிந்து கொள்ளலாம். அதாவது நாம் (யாழ்ப்பாணம்) எந்தவித இயற்கை அனர்த்தத்தையும் சமாளிக்கக் கூடியவாறான கட்டுமானத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதேயாகும்.

அனர்த்த முகாமைத்துவம் என்றோ, தேச நிர்மாணம் என்றோ, நகர திட்டமிடல் என்றோ நாம் எத்தனை பாடங்களைக் கற்பித்தாலும் எல்லாம் கறிக்கு உதவாத ஏட்டுச் சுரக்காய் ஆனதுதான் மிச்சம். ஏற்படவிருந்த, ஏற்பட்ட அழிவுகளைத் தடுப்பதற்கு உடனடியாக எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்க முடியாமல் போனதே இதற்குச் சாட்சியாகும்.

நவம்பர் 25 ஆம் திகதி இரவு 8 மணியளவிலேயே முன்னெச்சரிக்கையாக மின்சாரத்தை நிற்பாட்டியிருந்தாலும், அது புயலுக்கான முன்னேற்பாடு என எந்த அறிவித்தலும் மக்களுக்குக் கிடைக்கவில்லை.

எனது வீட்டில் நீர் மட்டம் அங்குல அங்குலமாக உயர்ந்து வந்து கொண்டிருந்த போது கூட இன்னும் சிறிது நேரத்தில் மழைவிட்டுவிடும், நீர் வடிந்து ஓடிவிடும் என்ற நம்பிக்கை எனக்குக் கலையவே இல்லை. 25.11.2008 அன்று இராசாவின் தோட்டத்திலுள்ள எனது வீட்டில் மாலை 6 மணியளவில் ஒன்பது அங்குல நீர் தேங்கியது. இரவு 8 மணிக்கு நீர் மட்டம் பதின்மூன்று அங்குலமாகவும், 10 மணிக்குப் பதினாறு அங்குலமாகவும் உயர்ந்தது. அப்பொழுது கூட நீர் மட்டம் உயராது என்ற நம்பிக்கையில் நித்திரை கொண்டோம். 26.11.2008 அதிகாலை நான்கு மணியளவில் வழக்கம் போல நித்திரை விட்டு

## புயல்கள் எவ்வாறு உருவாகின்றன 01

எழும்பியபோது எனது கட்டிலுக்குக் கீழே மூன்று அங்குல நீர் ஏற்கனவே வந்திருந்தது. என்ன செய்வது என்று திகைத்தபடி கதவைத் திறந்து பார்த்தேன் எவ்வித ஆளரவமும் தெரியவில்லை. உடனே கீழே இருந்த சில பொருள்களைத் தூக்கிக் கட்டில், கதிரை, மேசைகளில் வைத்தேன். அதற்கிடையில் கீழே இருந்த எனது காலணிகள், உடுப்புகள், பல பெறுமதியான புத்தகங்கள் நில விரிப்புகள் என்பன முழுமையாக வெள்ள நீரில் ஊறியிருந்தன. பின்னர் காலை 6 மணியளவில் இடுப்பளவு தண்ணீரில்

## முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படாமையே அழிவுக்கும் மக்களின் அவலத்துக்கும் பிரதான காரணம்

நடந்தபடி எனது நண்பரின் வீட்டுக்குச் சென்று நடந்தவற்றை விபரித்தேன். காலை 8 மணியளவில் நீர் மட்டம் 29 அங்குலத்தையும் இறுதியாகத் தனது அதியுயர் உயரமான 34 அங்குலத்தை மாலை 5 மணியள விலும் சென்றடைந்தது. இவ்வளவும் நடந்து முடிந்த போது கூட மக்களுக்கு எந்தவித எச்சரிக்கையும் விடப்படாமை அரசாங்கத்தின் தவறென்றே கூற வேண்டும்.

இக் கட்டுரையின் நோக்கம் நடந்த இழப்பு களை விவரிப்பதோ அல்லது யாரில் குற்றம் என விமர்சிப்பதோ அல்ல. மாறாகப் புயல்கள் எவ்வாறு உருவாகின்றன என்பது பற்றிய விஞ்ஞான விளக்கத்தைக் கொடுப்பதேயாகும்.


உரியவர்களால் உடனடி அறிவிப்பு எதுவும் விடப்படாமையால் முழங்கால் அளவு வெள்ளத்தில் காலையில் பாடசாலைக்குச் செல்லும் மாணவி ஒருவர்.


கடந்த மாதம் 25 ஆம் திகதி மாலை 6 மணியளவில் மருதங்கேணிக்கு அருகே கடலில் சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்தில் ஆரம்பமான புயல் அன்று நடுச்சாமம் அளவில் பருத்தித்துறை முனையை நோக்கி நகர்ந்தது; பின்னர் கடந்து அப்படியே விலகி வடக்கு நோக்கி நகர்ந்து தமிழகத்தில் காரைக்கால் என்ற இடத்தை 26 ஆம் திகதி மதியம் 12 மணியளவில் அடைந்ததது. பின்னர் மீண்டும் கடலுக்குள் விலகி 100 கிலோ மீற்றர்வரை சென்று பின் மீண்டும் 26 ஆம் திகதி நடுச்சாமம் அளவில் பாண்டிச்சேரிப் பக்கமாக இந்தியாவிற்குள் நுழைந்து அதன் வலுவை இழந்து மறைந்தது.

படம் : 1 இல் 'நிஷா' எனப் பெயரிடப்பட்ட வெப்ப வலய புயல் (Tropical Cyclone) பயணித்த பாதை காட்டப்பட்டுள்ளது. இப் புயல் சுமார் 50 kmph இற்கும் 95kmph (ஒரு மணித்தியாலத்தில் செல்லும் தூரம் கிலோ மீற்றரில்) இதற்கும் இடைப்பட்ட வேகத்தில் சுழன்று வீசியது.

அத்துடன் 22.11.2008 அன்று முதல் ஆரம்பமான மழையும் சேர்ந்துகொண்டது. அதன் விளைவைத்தான் கடந்த சில நாள்களாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளும், படங்களும் காட்டின. உண்மையிலேயே இந்தளவு வேகமான புயலுக்கு இவ்வளவு இழப்புகள் ஏற்பட்டிருக்க வேண்டியதில்லை.

### யாழ்.மாநகர சபைப் பகுதியே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்ட



'நிஷா' புயல் சென்ற பாதை

(படம்:01)

ஒரு குடாநாடாகும். இதனால் இவ்வளவு அனர்த்தம் வெள்ளத் தால் ஏற்பட வாய்ப்பே இல்லை.

யாழ்.குடாநாட்டுக்குள்ளேயே மிக மோசமாகப் பாதிப்பட்ட இடம் யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசமாகும். மாநகர சபை எல்லைக்குள் மழை நீரை சேகரிப்பதற்காக 42 குளங்கள் கட்டப்பட்டுள்ளன. குளங்களுக்கு மழை நீர் செல்ல வாய்க்கால்களும், குளத்திலிருந்து மேலதிக நீர் வடிந்து கடலுக்குச் செல்வதற்குப் போதுமான அளவு வாய்க்கால்களும் இங்கு உண்டு. ஆயினும் ஏன் இவ்வாறு வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டது?

இங்கு தான் சிக்கல்! சில இடங்களில் பொதுமக்கள் வாய்க்கால் வழியே நாய், கோழி, பூனை போன்றவற்றுடன் திருடர்களும் வந்துவிடுவார்கள் என எண்ணி வாய்க்கால்களின் குறுக்கே ஓட்டையிடப்பட்ட சுவர்களை அமைத்தோ, அல்லது இரும்பு வலைகளால் அடைத்தோ மூடிவிட்டிருந்தனர். வெள்ளம் ஓடத்தொடங்க அதனுடன் சேர்ந்து ஓடிய குப்பைகளும் பொலித்தீன் கழிவுப்பொருள்களும் அந்த ஓட்டைகளை அடைக்க மழைநீர் ஓட இடமின்றித் தேங்கத் தொடங்கியது. இதேபோன்றே பல இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்களுக்கு அருகால் செல்லும் வாய்க்கால்களும் பாதுகாப்பு என்ற பெயரில் முட்கம்பிகளாலும், மண்மூடைகளாலும் அடைக்கப்பட்டிருந்தன. மாநகர சபையைச் சேர்ந்த ஊழியர்களுக்கோ அவ்வாய்க்கால்களைச் சுத்தம் செய்ய முடியாத நிலை. இதனால் பல வாய்க்கால்களுக்குள் புல்லுகளும், பாரிய மரங்களும் வளர்ந்திருந்தன. இவற்றைவிட இறுதியில் மழைநீர் கடலில் சங்கமிக்கும் வாய்க்கால்களும் இராணுவத்தினரால் மண்அணைகள் போடப்பட்டு அடைக்கப்படிருந்தன. சில இடங்களில் சிமெந்தினால் சுவர்களும் எழுப்பப்பட்டிருந்தன. மேற்சொன்ன காரியங்களின் விளைவே 26, 27 ஆம் திகதிகளில் ஏற்பட்ட வெள்ள


விண்வெளியில் இருந்து எடுக்கப்பட்ட புயலின் தோற்றம்

அனர்த்தத்திற்கு காரணமாகவும் அமைந்தது. புயலால் ஏற்படும் அனர்த்தமானது புயலின் வேகத்திலே தங்கியுள்ளது. அட்டவணை 1 இனை அவதானித்தால் இம்முறை ஏற்பட்ட ''நிஷா'' புயலினால் இவ்வளவு அனர்த்தங்கள் நிகழ்ந்திருக்க வேண்டியதில்லை என்பது புரியும்.

இம்முறை ஏற்பட்ட நிஷா புயல் சராசரியாக 80kmph என்ற வேகத்தில் வீசியதால், அது வகை 1 இனைச் சார்ந்ததாகும். எனவே இது வலிமையற்றதொரு புயலாகும். இப்புயலில் 7 உயிரிழப்புகள் வரை ஏற்பட்டதென பத்திரிகைகள் மூலம் அறியமுடிந்தது. அந்தளவில் நாம் அதிர்ஷ்டசாலிகளே. 1970 ஆம் ஆண்டு எமது பிராந் தியத்திலுள்ள பங்களாதேசத்தில் வீசிய Sidr என்ற சூறாவளி 225 kmph என்ற வேகத்தில் வீசியது. இதனால் ஏற்பட்ட உயிரிழப்பு 5 இலட்சத்திற்கும்


கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்
சிரேஷ்ட விரிவுரையாளர், பௌதிகவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அதிகமாகும். எமது பிராந்தியத்திலேயே அதிகம் சூறாவளியால் பாதிக் கப்படும் நாடு பங்களாதேசமாகும். வங்காள விரிகுடாவில் உருவாகும் புயல்கள் பங்களாதேசத்திலேயே முடிவடைகிறது. அங்கு சித்திரை-வைகாசியிலும், ஐப்பசி- கார்த்திகையிலும்; அதாவது பருவ மழைக்கு முன்னும், பின்னுமே புயல் ஏற்படுவது வழமை.

காற்றின் வேகம் 118 kmph இனை விட அதிகரிக்கும்போது அதனை சூறாவளி (Harricane) எனத் தமிழில் அழைப்பர். புயல் ஏற்படுவதற்கு கடல் மேற்பரப்பின் வெப்ப நிலை 27°C இனை விட அதிகமாக இருக்க வேண்டும். வெப்ப நிலை அதிகமாக இருக்கும்போது புயல் உருவா


குளம் எது வீதி எது என்று தெரியாத நிலையில் றக்கா வீதி

கும் சந்தர்ப்பமும் அதிகமாக இருக்கும். மேலும் உயர்வான சார்பு ஈரப்பதனும் மேற்பரப்பிலிருந்து கிட்டத்தட்ட 6km வரை இருக்க வேண்டும். வளிமண்டல அமுக்கம் 1013mb இற்குக் குறைவாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு பல சூழல் காரணிகள் பொருத்தமானதாக அமையும்போது புயல் விருத்தியடைந்து சில நூறு கி.மீ தூரம் வரை பரவும். அதன் மத்தியில் மிகவும் தாழ்ந்த மேற்பரப்பு வளிமண்டல அமுக்கம் இருக்கும். அப்பிரதேசத்தைக் கண் என அழைப்பர். அக்கண் பகுதி முகிலோ அல்லது மழையோ அற்ற பகுதியாக இருக்கும். 10 கி.மீ வரையான அப்பகுதியில் மெல்லிய காற்று வீசும். அதனைச் சுற்றி அடர்ந்த முகில்கள் சுவர் போன்று இருப்பதுடன் பாரிய மழை வீழ்ச்சியையும், வேகமான காற்றையும் உருவாக்கும். ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 80 வரையான வெப்ப வலய புயல்கள் சமுத்திரங்கள் மேல் உருவாகுகின்றன. புயல்களின் வேகம் 118 kmph இனை விட அதிகரித்தால் அதனை பெரும்புயல் (Harricane) என மேல் அரைக்கோளத்திலுள்ள பிரதேசங்களிலும் தைபூன் (Typhoons) என வடமேற்கு பசுபிக் பிராந்தியங்களிலும், சூழல்காற்று அல்லது வெப்ப வலய சூறாவளி என ஏனைய பிரதேசங்களிலும் அழைப்பர். இப் புயல்கள் எப்படி உருவாகுகின்றன? இவற்றுக்கு பெயர் எப்படி வைக்கப்படுகின்றன என்பதைப் பின்னர் பார்ப்போம்.

(வளரும்)

| வகை | வேக விபரம் | ஏற்படும் தாக்கம் |
| --- | --- | --- |
| வகை 1 | 125 kmph வரையான வேகம் | மரங்கள், பயிர்கள் நாசப்படலாம், தவிர்க்கக் கூடிய அளவு வீடுகளுக்கு சேதம் ஏற்படலாம். வள்ளங்கள் நங்கூரத்தை இழுத்துச் செல்லலாம். |
| வகை 2 | 125 முதல் 170 kmph வரையான வேகம் | பயிர்களுக்கு பாரிய சேதமும், மரங்களுக்குக் குறிப்பிடத்தக்க சேதமும், குறைந்தளவு வீடுக ளிற்குச் சேதமும் ஏற்படலாம். மின்சாரம் தடைப்படும், வள்ளங்கள் அடித்துச் செல்லப்படும். |
| வகை 3 | 170 முதல் 225 kmph வரையான வேகம் | சில கூரைகளும், கட்டடங்களும் சேதமாகலாம். மின்சாரம் தடைப்படும் |
| வகை 4 | 225 முதல் 280 kmph வரையான வேகம் | கூரைகளுக்கும், கட்டடங்களுக்கும் பாரியளவு சேதம் ஏற்படும். வானில் பயங்கரமான கழிவுகள் வரலாம். |
| வகை 5 | 280 kmph இனை விட அதிக வேகம் | மிகவும் பாரதூரமான விளைவுகள் ஏற்படும். |

(அட்டவணை: 01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடத்தெங்கு......

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

அப்படிச் சொல்வதனால் தன் மனைவிக்குக் களங்கம் ஏற்படும் என்பதற்குப் பயந்து அப்படிச் சொல்லவும் அவர் விரும்பவில்லை.

'வடிவேலு சிதம்பரப்பிள்ளையின் மகன் தான்' என்று எந்தக் கோயிலில் வேண்டுமானாலும் பார்வதி சத்தியம் செய்யத் தயாராகவே இருந்தாள் என்பதற்கு சிதம்பரப்பிள்ளையின் 'திடீர்' நடத்தைகள் காரணமாகவே இருந்தன. பார்வதிக்குத் தெரியும், சிதம்பரப்பிள்ளையின் இரத்தம்தான் வடிவேலுவின் உடலிலும் ஓடுகிறது என்று. ஆனால் சிதம்பரம்பிள்ளை, வேண்டுமானால் மனைவிக்கு மறைமுகமாக நின்று மறுக்கலாம்.

வடிவேலுக்கு ஆறு வயதிருக்கும், ஒருநாள் பக்கத்து வீட்டுக் குழந்தை களோடு அவன் விளையாடிக் கொண்டி ருக்கும்போது, யாரோ ஒரு குறும்புக்காரப் பையன் எதற்கோ எறிந்த 'கல்' எப்படியோ சுற்றிவந்து வடிவேலுவின் தலையைக் கிழித்து, ஏராளமான இரத்தத்தைத் தெருவில் இறைத்து விடவே, தலையிலும் வயிற்றிலுமாக அடித்துக்கொண்டு வடிவேலுவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனாள் பார்வதி.

இரண்டு நாளாக உணர்வற்றுப்போன வடிவேலுவை நினைத்து நினைத்து பார்வதி அழுதபோது, அந்த அழுகையை சிதம்பரப்பிள்ளையால் இலகுவில் நிறுத்திவிட முடியவில்லை. அப்போது அவர் உள்மனம் 'இப்படியே வடிவேலு செத்துப்போனால் நல்லது' என்று ஏனோ உளறியது.

சிதம்பரப்பிள்ளையின் இரத்தம் வடிவேலுவின் உடலில் ஏற்றப்பட்ட போது, பார்வதிக்கு ஏற்பட்ட வேதனை விவரிக்க முடியாத நிலையில் இருந்தது. வடிவேலுவைப் பெற்றவள் அவள். இருந்தும் அவளின் இரத்தம் 'ஒத்து வரவில்லை' என்று டொக்டர் சொன்னபோது, ஆஸ்பத்திரி என்பதையும் மறந்து 'ஓ' என அழுதுவிட்டாள்.

விஷயம் தெரிந்த ஒரு பெண் 'நீங்க தாயாக இருக்கலாம். ஆனால் இரத்த ஒற்றுமை இல்லாமல் இருப்பது இயற்கை. இதற்காகப் போய் நீங்க அழலாமா? இந்த இரத்த ஒற்றுமை எல்லாம் விஞ்ஞான முறையில் கண்டு பிடிச்சிருக்காங்க......'

எதையோ அந்தப்பெண் சொல்லிக் கொண்டிருந்தபோது, பார்வதிக்கு ஆத்திரம் அவளை உலுப்பிக்கொண்டு வந்தது. 'பெத்தவள்ற இரத்தம் பிள்ளையிட உடம்பில் இல்ல எண்டு சொல்றதுதான் விஞ்ஞானமா?' என்று கேட்டபோது வடிவேலுவைக் கிடத்தி இருந்த அறையை நோக்கிச் சென்ற டாக்டராலும், அருகே நின்று விஞ்ஞான விளக்கம் சொன்ன பெண்ணாலும் இந்தக் கேள்விக்கு உடனடியாக விளக் கம் சொல்ல முடியவில்லை. டாக்டர் மெல்லச் சிரித்துக் கொண்டு போய்விட்டார்.

வடிவேலு தப்பிப் பிழைத்து, வளர்ந்து, படித்து, ஆசிரியத் தொழில் செய்து கொண்டிருக்கிறான் - இப்போது ஒரு வாரத்திற்கு முன்பு திருமணம் செய்து கொண்டும் போய்விட்டான். தந்தை தன்னைப் பொறுத்தவரையில் நடந்து கொண்ட முறைகளை மனதில் வைத்திருந்த வடிவேலு, தனியாக மனைவியோடு சென்ற பல மாதங்களாகப் பெற்றவர்களைப் பார்க்க வராமலே இருந்துவிட்டான்.

அவனைப் பற்றிய கவலை பார்வதிக்கு இருந்ததேயன்றி சிதம்பரப் பிள்ளையிடம் எதுவும் இல்லை. இந்த நிலையில் மருமகளைப் பார்க்க ஆசைப்பட்ட சிதம்பரப்பிள்ளை வடிவேலுவை வரவழைத்தால் என்ன என்று கேட்டபோது, பார்வதியின் உள்ளம் 'இதற்கு மேல் பூரிக்க முடியாது' என்கிற அளவிற்குப் பூரித்துக் கொண்டது.

மறுநாள் மாலை மகன் - மருமகள் வரப்போகின்றார்கள் என்ற மகிழ்ச்சியில் - அதை வெளியே காட்டிக்கொள்ளாமல் ஒருவித பூரிப்போடு இருந்த சிதம்பரப் பிள்ளையிடம் ஐம்பது வயதிற்குப் பிறகு முதல் முதலாக எந்தவிதமான உளைச்சலும் இல்லாத நிலையில் பார்வதி குழைந்து கொண்டிருந்தாள்.

அந்த நிலையில் பார்வதியைப் பார்த்த சிதம்பரப்பிள்ளைக்கு இரக்க உணர்வு பிறந்து, 'தான் செய்த தவறை உணராமல், இன்னமும் அறியாமையிலே தன்னை நம்பிக்கொண்டு, தான் செய்யும் ஒவ்வொன்றிற்கும் அர்த்தம் கற்பித்துக் கொண்டு அப்பாவியாக இருக்கிறாளே' என்று தனக்குள்ளே முணகிக்கொண்டார்.

சிதம்பரப்பிள்ளை அழவோ, தன்னை மறந்து வலிந்து சிரிக்கவோ முடியாத நிலையில் தன்னை உருவாக்கிக் கொண்டு இருந்துவிட்ட காரணத்தால் அவர் அமைதியதாகவே இருந்தார். அவர் உள்ளத்திலே மருமகளைப் பார்க்கும் ஆவல் சுடர்விட்டுக் கொண்டிருந்தது.

இந்த ஆசை, வடிவேலு குழந்தையாக இருந்தபோது, ஒரே ஒருமுறை சுடர்விட்டு எழுந்து - இன்றைய மருமகளுக்கு - அன்றே வடிவேலைக் கொடுப்பதாகச் சத்தியம் செய்து, மருமகளின் தாயோடு அடிக்கடி பேசிக் கொண்டு இருந்தபோது, பார்வதிக்கு சிதம்பரப்பிள்ளையின் மேல் சந்தேகம் எழுந்து, இன்றைய மருமகளான இலட்சு மியின் தாயார் மாரிமுத்துவோடு அன்று சண்டைபோட்டு, தன் கணவனையே தாறுமாறாக - தன் கணவன் பிறருக்கு இரையாகக்கூடாது என்ற எண்ணத்தில் - ஏசி, ''அந்த வீட்டுப் பக்கமே போகக் கூடாது என்று கண்டித்தபோது, சிதம்பரப்பிள்ளை உண்மையைச் சொல்லமுடியாமல் எதையோ மழுப்ப அதைத் தவறாகப் புரிந்து கொண்ட பார்வதி,'' அந்தக் குழந்தைக்கு நீங்கள்தான் தந்தையோ?'' என்றுகேட்க, ''ஆம்'' என்று சொல்லவந்து பாதியிலேயே சிதம்பரப்பிள்ளை நிறுத்திக்கொள்ள, அது பெரிய ரகளையில் முடிந்து விட்டிருந்தது.

பார்வதி கர்ப்பம் தரித்த அதேநாளில் மாரிமுத்துவும் கர்ப்பம் தரித்தாள் என்று மாரிமுத்துவின் கணவன்மூலம் கேள்விப்பட்ட சிதம்பரப்பிள்ளை, அன்று தொட்டு மாரிமுத்துவின் குடும்பத்தில் தனிப்பட்ட அக்கறை செலுத்தத் தொடங்கினார். அப்போதெல்லாம் பார்வதிக்கு இந்த நிகழ்ச்சி தெரியவே தெரியாது. தெரிந்திருந்தால், குழந்தை பிறந்து சில வருடங்களுக்குப் பிறகு நடத்திய 'யுத்தத்தை' முன்பே நடத்தியிருப்பாள்.

இந்த நேரத்தில், பார்வதியின் 'ஆண் குழந்தை' நச்சரிப்பு உதயமாகவே, அவளோடு சேர்ந்து பிற்பாட்டுப் பாடிக் கொண்டிருந்த சிதம்பரப்பிள்ளை மாரிமுத்துவோடு மனம் திறந்து பேசி ஏதோவொரு உடன்பாட்டுக்கு வந்தார்.

அதன்பிறகு எத்தனையோ நிகழ்ச்சிகள், பலரின் கண்களில் மண்ணைத் தூவிக்கொண்டு நழுவிப்போயின. ஆனால் மாரிமுத்துவிற்கும் சிதம்பரப்பிள்ளைக்கும் இருந்த நெருக்க உறவு... இருவருக்கும் தான் தெரியும்.

நடுக்கூடத்தில், சாய்மானக் கதிரையில் படுத்துக்கிடந்த சிதம்பரப்பிள்ளையின் அருகே இருந்த பார்வதி, வெற்றிலையை மடித்து அவரின் வாயில் நுழைத்துவிட்டு, சிதம்பரப்பிள்ளை நன்றாக வெற்றிலையைக் குதப்பிக் கொண்டபோது 'அம்மா' என்ற வடிவேலுவின் குரல் கேட்டு, நடுக்கூடத்தைத் தாண்டுவதற்கு எடுத்து வைத்த காலைப் பெயர்க்காமலே நின்று திரும்பினார்.

'அம்மா' என்று அழைத்தவன் நடுக்கூடத்து நுழைவாயில் வந்தபோது, சாய்மானக் கதிரையில் படுத்தபடி கிடந்த சிதம்பரப் பிள்ளை மெல்லச் சிரித்துக் கொண்டு, மருமகளோடு வந்த மாரிமுத்துவை வரவேற்றார்.

மாரிமுத்து சிதம்பரப்பிள்ளையின் அருகில் உட்கார்ந்து கொண்டதும், அதைக் காணாதவளைப் போல மகனையும் மருமகளையும் அழைத்துக்கொண்டு வேறு அறையில் உட்காரவைத்துவிட்டு மாரிமுத்துவுக்கும் சிதம்பரப்பிள்ளைக்கும் இடையே நடைபெறும் பேச்சைக் கவனிக்க, ஒதுக்குப்புறமாக இருவர் கண்ணிலும் படாமல் நின்று கொண்டாள் பார்வதி.

இரண்டு மணிநேரமாக சிதம்பரப் பிள்ளையும் மாரிமுத்துவும் பேசிய பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டிருந்த பார்வதி, தனக்குள்ளாகவே அழுது தீர்த்துவிட்டு மகனும் மருமகளும் இருந்த அறைக்கு வந்தாள்.

இதுவரைக்கும் இல்லாத புதிய பார்வை தன்மீது படிவதைப் பார்த்த இலட்சுமிக்கு, அந்தப் பார்வைக்குச் சரியான பதில் பார்வை பார்க்கத் தெரியாது கணவனுக்குப் பின்புறமாக ஒதுங்கிக் கொண்டாள். வடிவேலுவுக்கு தன் தாயின் போக்கே விசித்திரமாக இருந்தது.

'மகளே' என்று அழைக்கச் சேர்ந்த உதடுகளில் இருந்து எந்த வார்த்தையும் வெளிவராமல் உதடுகள் மட்டும் மெல்லத் துடிக்க, சேலை முந்தானையை சுட்டு விரலால் சுருட்டிவிட்டுக் கொண்ட தன்னை மீறிய நிலையில் நின்ற பார்வதிக்கு, தன் கணவன் மாரிமுத்துவோடு பேசிய பேச்சுக்கள் நினைவுக்கு வந்தன.

தன்மீது தன் கணவன் கொண்டிருந்த அன்பு இத்தனை அழமானதாக இருக்கும் என்பது இதற்கு முன்பு புரியவில்லை. இப்போது புரிகிறது. தன்னுடைய ஆசை குலைந்து போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காக தன் கணவன் செய்துவிட்ட செயலும், இதுவரை அதை அவளிடம் சொல்லிக்கொள்ளாமல் இருப்பதையும் எண்ணிய பார்வதிக்குத் தன் கணவன் மேல் அனுதாபம் பிறந்தது.

கீழிமைகளின் எல்லைக் கோட்டிலே, இதயத்தின் கசிவு நீர்த்துளிகள் யாருடைய உத்தரவையும் எதிர்பாராமல் விழுந்து விடத்துடித்துக் கொண்டிருந்தன. தான்பெற்ற பெண்ணிண் முகத்தைப் பெற்றவள் என்ற பாசத் தோடு பார்த்து 'மகளே' என்று அழைத்தபோது, 'இத்தனை நாளாக இன்னொருவருக்குப் பலன் கொடுத்துக் கொண்டிருந்தாயே' என்ற ஏக்கம் - பாசம் இன்னும் என்னவெல்லாமோ கலந்து கிடப்பதை அங்கே வந்து கொண்டிருந்த சிதம்பரப்பிள்ளையால் உணரமுடிந்தது.

(நன்றி:சுதந்திரன் சிறுகதைகள்)

## சொற்சிலம்பம் - போட்டி இல: 39

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | | | |
| 9 | | 10 | | | | 11 | |
| | | 12 | | | 13 | | |
| | 14 | | | 15 | | | 16 |
| 17 | | | 18 | | | 19 | |
| 20 | | 21 | | 22 | 23 | | |
| 24 | | | | | 25 | | |

அனுப்புபவர் பெயர்:..........

விலாசம்:..........

..........

கையொப்பம்:..........

### மேலிருந்து கீழ்

1. உதடு.
2. விருட்சம்.
3. வசப்படுத்தும் செயல்.
4. நாள்.
5. சூரியன்.
6. குளிகை.
10. தண்ணீரில் அமிழாதிருப்பதால் இதற்கு இப்பெயர்.
13. பெரும் நீர்த்தேக்கம்.
14. அணிதல்.
15. உபகரணம்.
16. சுறு சுறுப்புக்குப் பெயர்போன ஜீவன்.
17. பாக்குமரம்.
19. ஒரு நட்சத்திரம்.
21. மஜ்னு மனம் பறிகொடுத்தது இவ ளிடம்.
23. தர்க்கம்

### இடமிருந்து வலம்

1. கம்பரின் மகனை விரும்பியவள்.
5. கொதிக்கும் திரவத்தின் அடுத்த நிலை இது.
7. பெருக்கல் குறி.
8. கோபித்தல்.
9. சந்தோஷம்/அழகு.
11. இதை விரிப்பது ஒன்றை மாட்ட வைக்க.
12. மறைத்துப் புகை பிடித்தல் .
13. கேள்வி பிறப்பது இதனால்.
14. பட்சி/பெண்.
15. எரிந்து மிஞ்சுவது.
17. மரத்தின் முளி/ மூட்டு.
18. பசுவின் சாணம் .
19. மாசு/மச்சம்/குற்றம்.
20. கொண்டது விடாது .
22. திருமணம்.
24. தொப்பி.
25. தென்னைமட்டையில் பிரித்து எடுப் பது.

### போட்டி விதிகள்

1. வாசகர் வெரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும்முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

சொற்சிலம்பம் போட்டி இல. 39
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம்361,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் - (24.12.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக் கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 39 இல் வெற்றிபெற்றோர் விவரம் 28.12.2008 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்:37 இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்

(1) சுகப்பிரசவம் (7) பாண் (8) ரவிக்கை (9) வடிவம் (12) ராமன் (13) பதி (14) மகன் (15) மலர் (16) பாலம் (17) சாதி (18) துரு (19) ஆண் (20) சம (21) கைம்மாறு (22) தாகம்

மேலிருந்து கீழ்

(1) சுபாவம் (2) கண்டி (3) பிரம்மன் (4) ரவி (5) சக்கை (6) வகை (10) வராகம் (11) கதிர்காமம் (13) பல (14) மலரும் (15) மதி (16) பாதுகை (17) சாண் (19) ஆறு (20) சக

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 37 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந் தெடுக்கப் பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு

**1 ஆம் பரிசு**
க.சுகிர்தா,
'தாயகம்' சிறுவர் இல்லம்,
பொற்பதி வீதி, கோண்டாவில்.

**2 ஆம் பரிசு**
செல்வியிஸ்ணுபிரியா செந்தில்வேல்,
நவலிண்டில், கரணவாய் மத்தி,
கரவெட்டி.

**3 ஆம் பரிசு**
ஐஸ்நோபர் ரயிர்ரஸ்,
இல06, அடப்பன் வீதி,
3ஆம் குறுக்குத்தெரு, குருநகர்,
யாழ்ப்பாணம்.

பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

கணனி மூல தட்டச்சு முறையில் ஏற்பட்ட தவறுதல் காரணமாக சொற்சிலம்பம் போட்டி இல: 38 இல் கீழ்க்காணும் தவறுகள் இடம் பெற்றுவிட்டன. இருந்த போதிலும் ஏராளமான வாசகர்கள் அத்தவறுகளை உரிமையுடன் சுட்டிக்காட்டியிருப்பது மட்டுமல்லாது தமது திறனை வெளிப்படுத்தும் வகையில் சரியான முறையை அடையாளம் கண்டு கூப்பன்களைப் பூர்த்தி செய்து அனுப்பிவைத்துள்ளனர். அவர் களுக்கு எமது நன்றிகளும் பாராட் டுகளும்.

இடமிருந்து வலம் 8மேற்றும் 10 என்பவற்றுக்கான விவரங்கள் ஆதாயம் மற்றும் உரிய பொருத் தப்பாடு என்பன விடுபட்டுள்ளதுடன், மேலிருந்து கீழ் 11 இற்கான விவரம் ஒன்று சேர்தல் என்ப தற்குப் பதிலாக ஒன்று சேர்த்தல் என அச்சாகி விட்டுள்ளது.

தவற்றைச் சுட்டிக் காட்டிய சொற்சிலம்பம் போட்டி ஆர்வலர்களுக்கு நன்றி.

சொற்சிலம்பம் போட்டி.இல: 38 இற்கான சரியான விடைகளும் வெற்றிபெற்றோர் விவரமும் 21.12.2008 உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி 38 இற்கான கட்டம் கீழ்க்காணும் விதத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 38

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 | 4 | | 5 |
| 6 | | | 7 | | | | |
| | 8 | 9 | | | 10 | 11 | |
| 12 | | | | 13 | | | |
| 14 | | | 15 | | | | |
| | | 16 | | | 17 | | 18 |
| 19 | 20 | | | | | | |
| 21 | | | | | 22 | | |

### பாராட்டுப் பெறுவோர்

(1) வி.நளாஜினி,
அந்தோனியார் வீதி,
மாதகல்.

(2) சி.நிரோஷினி,
இல:213, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(3) வே.தர்மலிங்கம்,
அரசடி வீதி, தாவடி வடக்கு,
கொக்குவில்.

(4) ச.திலீப்காந்த்,
அராலி வீதி,
சங்கானை.

(5) த.நந்தகோபன்,
தரம் 11 ஆ, யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி,
சங்கத்தானை..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.புற்றுநோயாளர் விடுதியின் சிறப்பான செயற்பாட்டால் நோயாளர்களின் சிரமங்கள் பெரிதும் குறைவடைந்துள்ளன

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புற்றுநோயாளருக்கான விடுதி (வார்ட்) அமைக்கப்பட்டு இன்று நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. புற்றுநோயாளருக்குரிய சிகிச்சை வசதிகளில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்கள் மற்றும் வசதிக் குறைவுகள் குறித்துக் கண்டறியும் பொருட்டு வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி என்.ஜெயகுமரனை 'உதயன்' சார்பில் செவ்வி கண்டோம். அதன் விவரம் இங்கே பிரசுரமாகிறது.



புற்றுநோய் சிகிச்சை நிபுணர்
வைத்திய கலாநிதி ந.ஜெயகுமரன்

**கேள்வி:** யாழ்.மாவட்டத்தில் புற்றுநோயின் தாக்கம் பற்றியும், அது ஏற்படுவதற்கான காரணிகள் பற்றியும் குறிப்பிட முடியுமா?

**பதில்:** பொதுவாகவே புற்றுநோய் எந்தெந்தக் காரணிகளால் ஏற்படுகின்றது என வரையறுத்து விடமுடியாது. எனினும் புற்றுநோய்க்கான காரணிகள் என இனங்காணப்பட்ட சில விடயங்களை இங்கு குறிப்பிட முடியும்.

புகைப் பொருள்களை நுகர்தல், மதுப் பாவனை, மாறுபட்ட உணவுப்பழக்க வழக்கம், வாய்ச்சுகாதாரம் இன்மை, இரசாயனப்பதார்த்தப் பயன்பாடு, இரசாயனப் பசளைகளை அளவுக்கதிகமாக உறிஞ்சிய உணவு வகைகளை உட்கொள்ளல், அணுக் கதிர்த்தாக்கம், மாதவிடாய் நின்ற பின் ஓமோன்களைப் பெண்கள் பாவித்தல், பரம்பரை அலகுகளில் மாற்றம் ஏற்படல் என்பன புற்றுநோயை உண்டு பண்ணுவதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

புற்றுநோய் ஏற்பட்ட சிறிது காலத்துக்குள்ளேயே அதனைக் கண்டறிந்தால் முற்றாகக் குணப்படுத்தக் கூடியதாக இருக்கும். புற்றுநோயின் வீரியம் அதிகமான பின்னர் கண்டறிந்தால் அதனை முற்றாகக் குணப்படுத்த முடியாவிட்டாலும், கட்டுப்பாட்டில் வைத்திருக்கமுடியும். மேலும் புற்றுநோய் ஒரு தொற்றுநோயல்ல. புற்றுநோயாளிகள் தமக்குரிய சிகிச்சையைப் பெற்றுக் கொண்ட பின்னர் சாதாரண மனிதர்கள் போன்று இயல்பாக இருக்கமுடியும். அவர்கள் மீண்டும் சகஜமாக இருப்பதற்கான சூழலை அவருடன் பழகுபவர்களும் ஏற்ப



'கேன்' புற்றுநோயாளர் காப்பகம்

டுத்திக்கொடுக்க வேண்டும். புற்றுநோய்க்குச் சிகிச்சை பெற்றவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களை ஒதுக்கி வைக்காமல் முன்னர் போலவே அவர்களுடன் பழக வேண்டும். புற்றுநோய் ஒரு தொற்று நோயல்ல என்பதால் அவருடன் பழகுபவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

**கேள்வி:** யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள புற்றுநோயாளர் விடுதி பற்றியும் அது ஆற்றிவரும் பணிகள் பற்றியும் கூறமுடியுமா?

**பதில்:** யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த புற்றுநோயாளர்கள் முன்னரெல்லாம் சிகிச்சை பெறுவதற்காகக் கொழும்புக்கும், மஹரகமவிற்கும் அலைந்துதிரிய வேண்டியிருந்தது. எனினும் நாம் எடுத்த பெருமுயற்சியின் பயனாக 2004.12.14 அன்று முதல் யாழ்.போதனா வைத்தியசாலையிலேயே புற்றுநோயாளர்களுக்கான தனிவிடுதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த விடுதித் திறப்பு வடபகுதியைச் சேர்ந்த புற்றுநோயாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. அதன் பின்னர் நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக மஹரகமவிற்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் தவிர்க்கப்பட்டது. 2005ஆம் ஆண்டு 3118 நோயாளர் அனுமதிகளும், 2006ஆம் ஆண்டு 3151 நோயாளர் அனுமதிகளும், 2007ஆம் ஆண்டு 2758 நோயாளர் அனுமதிகளும், 2008ஆம் ஆண்டு (டிசெம்பர் மாதம் வரை) 2740 நோயாளர் அனுமதிகளும் இந்தப் புற்றுநோயாளர் விடுதியால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமக்கு ஏற்பட்டிருப்பது புற்றுநோய் தான் என்பதை அறிந்தவுடனேயே எவ்வித சிரமமுமின்றி இங்கேயே தகுந்த சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்ப தால், புற்றுநோயின் தாக்கம் வீரியமடைய முன்னரே, குணப்படுத்தக்கூடியதாக இருக்கின்றது.

**கேள்வி:** புற்றுநோயைக் குணப்படுத்த யாழ்.புற்றுநோயாளர் விடுதி மூலம் எவ்வகையான சிகிச்சைகள் மேற்கொள்ளப் படுகின்றன?

**பதில்:** புற்றுநோயைக் குணப்படுத்தப் பல்வேறு வகையான சிகிச்சை

## பற்றுநோய் ஒரு தொற்றுநோயல்ல என்பதை அனைவரும் உணர்வது அவசியம்

முறைகள் உள்ளன. சத்திரசிகிச்சை, கதிர்வீச்சு, இரசாயன மருத்துவ சிகிச்சை, ஹோமோர்ன் சிகிச்சை, பரம்பரை அலகுகள் மூலமான சிகிச்சை, என்பு மச்சை மாற்று சிகிச்சை என்பனவெல்லாம் இன்றைய நவீன மருத்துவ உலகில் புற்றுநோயைக் குணப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் சிகிச்சை முறைகளாகும்.

இவற்றில் எமது சூழலின் தன்மைக்கேற்ற வகையில், எம்மாலியன்ற சிகிச்சை வகைகளை வழங்கி வருகின்றோம். சில சிகிச்சை முறைகள் சில மேற்குலக நாடுகளில் மட்டுமே பயன்பாட்டில் உள்ளன.

எம்மைப்போன்ற வளர்முக நாடுகளில் அவை இன்னும் பயன்பாட்டுக்கு வரவில்லை.

சத்திரசிகிச்சை, இரசாயன மருத்துவ சிகிச்சை போன்ற சிகிச்சைகளோடு 'கோபோல்ற்' அணுக்கதிர் மூலகத்தைப் பயன்படுத்திச் செய்யப்படுகின்ற கதிர்வீச்சு சிகிச்சையையும் நாம் மேற்கொண்டு வருகிறோம். இதற்கென தனியான கதிர்வீச்சு சிகிச்சை நிலையம் தெல்லிப்பழையில் அமைக் கப்பட்டுள்ளது. 09.06.2005 முதல் இந்தக் கதிர்வீச்சு சிகிச்சை நிலையம் சிறப்பாக இயங்க ஆரம்பித்து, இன்று வரை பல நோயாளர்களின் புற்றுநோயைக் குணப்படுத்தியிருக்கிறது.

தெல்லிப்பழையில் அமைக்கப்பட்டுள்ள 'கோபோல்ற்' அணுக் கதிர் வீச்சுச் சிகிச்சை மையத்தில் 2005ஆம் ஆண்டு 295 நோயாளி களும், 2006ஆம் ஆண்டு 440 நோயாளிகளும், 2007ஆம் ஆண்டு 391 நோயாளிகளும், 2008ஆம் ஆண்டு 356 நோயாளிகளும் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள்.

**கேள்வி:** 'கரண்ட் பிடித்தல்' சிகிச்சை என மக்க ளால் சொல்லப்படுவது இந்தக் கதிர்வீச்சுச் சிகிச்சை முறைதானா?

**பதில்:** ஆம்! பொதுவாக மக்களிடையே கதிர்வீச்சுப் [illegible] முறையே 'கரண்ட்' பிடித்தல் என்ற தவறான பதத்துடன் வழக்கில் இருந்து வருகின்றது. உண்மையில் புற்றுநோயாளிக்கு மின்சாரம் பாய்ச்சி, சிகிச்சை அளிக்கப்படுவதில்லை.

'கோபோல்ற்' அணுக்கதிர் மூலம் 'GAMMA' என்ற கதிர்வீச்சினூடாக புற்றுநோய்க் கலங்கள் அழிக்கப்படுகின்றன. இதன்போது நோயாளர்களுக்கு எவ்வித வலிகளோ, உபாதைகளோ ஏற்படுவதில்லை.



யாழ்.புற்றுநோயாளர் விடுதியின் உட்புறம்

எனவே புற்றுநோயாளர்கள் தமக்கு மின்சாரம் ஏற்றியே சிகிச்சை மேற்கொள்ளப் படுகின்றது என்ற தப்பபிப்பிராயத்தைக் களைய வேண்டும்.

**கேள்வி:** யாழ்.புற்றுநோயாளர் விடுதி ஆரம் பிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகின்றது. இவ்வேளையில் இவ்விடுதி பற்றியும், எதிர் காலத்திட்டங்கள் பற்றியும் கூறமுடியுமா?

**பதில்:** புற்றுநோயாளருக்கான சிகிச்சைப்பிரிவு தற்போது நரம்பு சத்திரசிகிச்சை, நரம்பியல் விடுதியில்தான் தற்காலிகமாக இயங்கி வருகின்றது. எனினும் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனால், இந்த விடுதியில் பல அசௌகரியங்கள் நோயாளர்களுக்கு ஏற்படுகின்றன.



அல்ற்றா சவுண்ட் ஸ்கானர்

ஒரு சிறிய அறையில் ஏறக்குறைய 5 நோயாளிகள் தங்கியிருக்கவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

எனினும் தற்போது அரச அதிபரின் உந்துதலால் 'நிகொட்' நிறுவனத்தின் நிதியுதவியுடன், புற்றுநோயாளர்களுக்கென நிரந்தரமான தனிவிடுதி அமைக்கப்பட்டு வருகின்றது. விரைவில் பூர்த்தியாகவுள்ள புற்றுநோயாளர் பிரிவில் ஆண், பெண் புற்றுநோயாளர்களுக்கெனத் தனித்தனியாக இரு விடுதிகளையும் கொண்டதாக இவ் விடுதிகள் அமையவுள்ளதால் எதிர்காலத்தில் புற்றுநோயாளர்கள் உரிய சிகிச்சையினைச் சௌகரியமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

அரச அதிபரினால் பண்ணைப்பகுதியில் ஒதுக்கப்பட்ட காணியில் எதிர்காலத்தில் 'ஒருங்கிணைந்த புற்றுநோயாளர் மையம்' ஒன்றை நிறுவ உத்தேசித்திருக்கிறோம்.

எனினும் நாட்டில் நிரந்தர சமாதானமொன்று ஏற்பட்டால் மாத்திரமே இது சாத்தியமாகும்.

**கேள்வி:** யாழ்.குடாநாட்டில் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதா?

**பதில்:** ஆமாம். அண்மையில் கூட புற்றுநோய் தொடர்பான விளக்கப்படங்களடங்கிய ஒரு கண்காட்சியை ஒழுங்கு செய்திருந்தோம். இதனைப் பலர் பார்வையிட்டு இந்நோய் தொடர்பான விழிப்புணர்வைப் பெற்றுக்கொண்டனர்.

இதுதவிர இனிவரும் காலங்களில் மருதனார்மடத்தில் உள்ள 'கேன்' (CANE) புற்றுநோயாளர் காப்பகத்தில் இக்கண்காட்சி அமைப்பை நிரந்தரமாகக் அமைத்து, ஓர் அட்டவணைப் பிரகாரம், சுழற்சிமுறையில் பாடசாலை மாணவர்கள் இதனைப் பார்வையிட அனுமதித்து, அதனூடாக அவர்களிடையே விழிப்புணர்வை உண்டு பண்ணவும் திட்டமிட்டிருக்கிறோம்.

மேலும் மேலைநாடுகளில் 'PPCAP' என்ற விழிப்புணர்வுத் திட்டம் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அதாவது 'தனிநபர்களுக்கிடையேயான தொடர்பாடல் மூலம் புற்றுநோய் விழிப்புணர்வுத் திட்டத்தை செயற்படுத்துதலே' இத்திட்டத்தின் நோக்கமாகும். அவ்வாறான திட்டத்தையும் குடாநாட்டில் அறிமுகப்படுத்த எண்ணியுள்ளோம்.

இவற்றின் மூலம் எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்தில் புற்றுநோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையை குறைக்கலாம் என நம்புகிறோம்.

**கேள்வி:** யாழ்.புற்றுநோயாளர் சிகிச்சைப் பிரிவுக்குத் தொண்டு நிறுவனங்களின் உதவிகளும் கிடைக்கின்றனவா?

**பதில்:** ஆமாம். முக்கியமாக 'கேன்' (CANE) நிறுவனம் எமது செயற்பாடுகளில் மிகத் தீவிரமாக உதவி செய்து வருகின்றது. மருதனார்மடத்தில் 'கேன்' புற்றுநோயாளர் காப்பகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தெல்லிப்பழையில் கதிர்வீச்சுச் சிகிச்சைப் பெறும் நோயாளர்களும், சரியான பராமரிப்பு வசதியற்ற நோயாளர்களும் இந்தக் காப்பகத்தில் தங்கியுள்ளனர். இவர்களுக்கென சகல வசதிகளையும் - உணவு, பராமரிப்பு உட்பட - கேன் நிறுவனமே செய்து வருகின்றது.

இதைவிட அண்மையில் அல்ற்றா சவுண்ட் ஸ்கானர் (Ultra Sound Scanner) ஒன்றையும் 'கேன்' நிறுவனம் புற்றுநோயாளர் விடுதிக்கென அன்பளிப்புச செய்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள ஐ.எம்.எச்.ஓ (I.M.H.O) என்னும் தமிழ் வைத்தியர்களின் அமைப்பும் புற்றுநோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவொன்றை நிறுவுவதற்கு உதவி செய்தது.

இவற்றோடு சிவபூமி நிறுவனம், சாயி சேவா நிறுவனம், கியூடெக் - கரித்தாஸ் அமைப்பு, உலக தரிசனம் நிறுவனம், மனித நேய அமைப்புகளின் கூட்டமைப்பு மற்றும் மனிதநேயமிக்க தனிநபர்கள் என்போர் புற்றுநோயாளர்களின் சிகிச்சைக்கெனப் பல்வேறு வகைகளிலும் உதவி வருகின்றார்கள்.

இதனைப் போல ஏனையோரும் புற்றுநோயாளர்களின் சிகிச்சைக்காகத் தம்மாலியன்ற உதவிகளைச் செய்ய முன்வருவார்களேயானால், அது யாழ்.மாவட்டத்திலுள் புற்றுநோயாளர் களுக்கு ஒரு விடிவினை ஏற்படுத்துமென நம்பலாம். ★

சந்திப்பும் படங்களும்:
பிரபா, லக்ஸ்மன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் தினமும்

வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் தினமும் எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலையின் அருணாசல சாஸ்திரிகள் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அதிபர் வ.அம்பலவாணர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) செல்வி வி.கந்தையா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வர். இந்த நிகழ்வில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆசிரியர் பிரம்ம ஸ்ரீ இ.பிரதாமசர்மா ஆசியுரையினையும், உடுவில் மான்ஸ் பாடசாலை அதிபர் பா.பாலச்சந்திரன், நிறுவுனர் நினைவுப் பேருரையையும் வழங்கவுள்ளனர். (204-112)


தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்



**வாழும் கலை பயிற்சி - பாகம் I**

*(பிராணாயாமம், பாஸ்திரிகா, இலகு யோகாசனம், சுதர்ஸன கிரியா எனும் சிறப்பு மூச்சுப் பயிற்சி )*

**வடமராட்சி**

அறிமுக உரை

இடம்: தடங்கன் புளியடி முருகன் கோயில் மண்டபம், நெல்லியடி

திகதி: 15.12.2008 திங்கட்கிழமை

நேரம்: மாலை 5.00 மணி

*பயிற்சி முற்றிலும் இலவசம்*

பயிற்சி நாள்கள்: 16.12.2008 (செவ்வாய்) முதல் 21.12.2008 (ஞாயிறு) வரை

காலை 6.30 - 8.30 அல்லது மாலை 3 - 5 வரை

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

**YES பயிற்சி**

(Youth Empowerment Seminar)

*(14 முதல் 18 வயதுவரையானோர்க்கு)*

இடம் : தடங்கன் புளியடி முருகன் கோயில் மண்டபம், நெல்லியடி.

பயிற்சி நாள்கள் : 15.12.2008 ( திங்கள்) முதல் 20.12.2008 (சனி) வரை

நேரம் : முற்பகல் 10 - 12

*குறிப்பு:* பயிற்சிகளுக்கு எவ்விதக் கட்டணமும் இல்லை

*மேலும் விவரங்களுக்கு:*

**சர்வதேச வாழும் கலை அறநிறுவனம்,**

தொ.பே.: 077 9434 879, 060 221 7788


## முன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 | 17 |
| 03 | 11 |
| 1941 | 2005 |



**அமரர் கந்தையா சந்திரமோகனதாஸ்**

*[மீன்பிடிக் கூட்டுத் தாபன உத்தியோகத்தர்]*

*திதி: அபரபக்க துதியை (14.12.2008)*

அப்பா மூன்றாண்டுகள்
ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*இல.04, குருசோ வீதி, கண்டுக்குழி, யாழ்ப்பாணம்.*

*உங்கள் பிரிவால் வாடும்:* மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரன்.

(சி/555986)

# அன்ரன் பாலசிங்கம்.....

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

ஆயுதத்தின் முலம் ஆக்கிரமிப்பாளனை நாம் வெளியேற்றுவதன் மூலம் அடக்குமுறை மன நோயிலிருந்து எம்மை குணப்படுத்திக் கொள்கிறோம். எமது கையில் இருக்கும் ஆயுதம் எமது மனிதத்தன்மையின் அடையாளம். ஒரு சிங்கள ஆக்கிரமிப்பாளனை சுட்டு வீழ்த்துவதன் மூலம் ஒடுக்குபவனையும் அவனால் ஒடுக்கப்படுபவனையும் ஒரே சமயத்தில் ஒழித்துக் கட்டுகிறோம்.

எமது காலடியில் கிடப்பது ஒரு பிணம். ஆனால் அங்கு எழுந்து நிற்பது சுதந்திரமான ஒரு ஈழத்தமிழ் உயிரி.

தொடர்ந்து புதுப்பிக்கப்படும் அடக்குமுறைகள் எம்மை பணியச் செய்வதற்கு பதிலாக தாங்கிக் கொள்ள முடியாத முரண்பாட்டிற்குள் அழுத்துகின்றன. இதற்குத்தான் நாம் பதில் சொல்கிறோம். அவமானமும் பசியும் வலியும் என்னவென்று எங்களுக்கு ஆக்கிரமிப்பாளன் கற்பித்தபோது எழுந்த அழுத்தத்திற்கு சமமான சீற்றமான உணர்வை இன்று நாம் வெளிப்படுத்துகிறோம். இப்போது எங்களை பயங்கரவாதிகள் என்கிறீர்கள். எங்களுக்கு வன்முறையைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது என்றும் சொல்கிறீர்கள். ஆமாம். உண்மைதான். ஆனால் ஆரம்பத்தில் அது எதிரியி னுடையது. விரைவில் நாம் அதை எமதாக்கிக் கொண்டோம். உண்மையைச் சொல்லப்போனால் நாம் வன்முறையின் குழந்தைகள்.

அன்ரன் பாலசிங்கம் பேசிய - கொண்டாடிய பயங்கரவாதம்' இதுதான். ஆனால் இந்த அறத் தையும் நீதியையும் தவற விட்டுவிட்டு கேடுகெட்ட சர்வதேச சமூகம் ஒடுக்கப்பட்ட இனங்களின் விடுதலைப் போராட்டங்களின் மீது நியாயத் தீர்ப்புக்களை வழங்குவதற்கு முண்டியடிப்பது காலத்தின் விசித்திரம் என்று கூறாமல் வேறு எப் படிக் கூறுவது. பிரச்சினையின் மூலத்தையும் வேரையும் விட்டுவிட்டு அதற்கு தீர்வை முன்வைக் காமல் 'பயங்கரவாத' பட்டியலிடும் சர்வதேச்தின் மனச்சாட்சிகளோடு நாம் தொடர்ந்து போராடுவோம். பாலசிங்கத்திற்கான அஞ்சலி அதில்தான் தங்கியுள்ளது. அவர் முன்னெடுத்த பணியும் அதுதான்.

அவர்களின் கதவு இறுகச் சாத்தப்பட்டிருக் கிறது என்பது எமக்குத் தெரியும். அவர்கள் திறக்க வில்லை என்பதற்காக நாம் தட்டுவதை நிறுத்த வேண்டாம். நாம் தொடர்ந்து தட்டுவோம். என்றாவது ஒரு நாள் அது திறந்தே தீரும்.

வன்னியில் நிலங்களை ஆக்கிரமித்து வாழ்விடங்களிலிருந்து விரட்டியடித்து சொத்துக்களை சூறையாடி பெரும் மனிதப்பேர வலத்தை உருவாக்கி விட்டிருக்கிறது சிங்கள இனவாதம். தொண்டு நிறுவனங்களும் இல்லை. துயர் துடைக்க நாதி இல்லை. விச ஜந்துக்களோடு காட்டில் காலம் கழிகிறது. போதாததற்கு இயற்கையின் சீற்றம் வேறு. எறிகணைகளும் குண்டுவீச்சு விமானங்களும்தான் தினமும் துயிலெழுப்புகின்றன. போதாதற்கு 'கிளஸ்ரர்' குண்டுகளை வேறு சிங்களம் வீசத் தொடங்கியிருக்கிறது. உலகம் கண்ணைமூடிப் பாாத்துக் கொண்டிருக்கிறது. இது பயங்கரவாதம்' இல்லையாம்.

அவமானமும் பசியும் வலியும் என்னவென்று எங்களுக்கு ஆக்கிரமிப்பாளன் முன்பு கற்பித்த போது எழுந்த அழுத்தத்திற்கு சமமான சீற்றமான உணர்வை அன்று நாம் வெளிப்படுத்தினோம். எம்மை 'பயங்கரவாதிகள்' என்றீர்கள். இப்போது அதனிலும் பன்மடங்காக எதிரி எமக்கு கற்பிக்கிறான். இதை ஏன் உங்களால் கண்டு கொள்ள முடியாவில்லை. அது பயங்கரவாதம்' இல்லையா!' ஈழத்திலிருக்கும் ஒவ்வொரு ஆத்மாவிலிருந்தும் எழும் குரல் இது.

எல்லா சமன்பாடுகளையும் கலைத்துப் போட்டு எதிரியானவன் விளையாடிக்கொண்டிருக்கிறான்.

அமெரிக்காவில் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்டு இரண்டு வாரங்கள் கழித்து அத்தாக்குதலை முன்னிறுத்தி பிரபல பிரெஞ்சு தத்துவமேதை ழான் போத்திரியா "le monde" பத்திரிகையில் ஒரு சிறப்புக் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அதில் 'ஒரு அதிகார அரசும் ஒரு அமைப்பும் நடத்திய விளையாட்டில் மறுதரப்புக்கு சீட்டுக்களை சரியாகப் பகிர்ந் தளிக்காமல் அதிகார அரசு விளையாட்டை ஆரம்பித் தது. வளைவு மறு தரப்பு விளையாட்டின் விதிகளை மாற்ற வேண்டிய புற நிலைக்கு தள்ளப்பட்டது. விளைவு இரட்டைக் கோபுரம் தகர்ந்தது. அவ் விதிகள் கொடூரமானவை. ஏனெனில் அவை இறுதியா னவை என்பதால்' என்று குறிப்பிட்டார். இன்றும் சிங்களம் இதைத்தான் நமக்கு எதிராகச் செய்கிறது.

இப்போது தமிழீழத்திலும் விளையாட்டின் விதிகள் மாறறப்படவேண்டிய புறநிலை உருவகியிருககிறது. அன்ரன் பாலசிங்கம் இருந்திருந்தால் தெளிவாகச் சொல லியிருப்பார். இது வன்முறையின் மூன்றாம் கட்டம்.

இது சிங்கள ஏகாதிபத்தியயம் வீசிய வளைதடி. அதை நோக்கி திரும்பும் காலம் நெருங்குகிறது. அன்ரன் பாலசிங்கத்தின் இன்றைய நினைவு நாளில் நாம் எல்லோரும் ஒன்றிணைந்து அதைச் சாத்தியமாக குவோம. இதுதான் அவருக்கான அஞ்சலி மட்டுமல்ல ஒவ்வொரு தமிழனின் வரலாற்றுக் கடமையும் கூட.

★★★★★★★★★★★★★★★★


## தேவை

Printing Press இல் வேலை செய்த முன் அனுபவமுள்ள Type Setter தேவை. கொடுப்பனவுகள் அவர்களின் திறமை, முன்அனுபவ அடிப்படையில் மேலதிகமாகக் கொடுக்கப்படும்.

O.P.D க்கு முன்பாக
464, Hospital Road, Jaffna.
T.P.9102

(80733)

## வீடு விற்பனைக்கு

இல.13/2, தலையாழி லேனில் (Off இராமநாதன் வீதி) யாழ்ப்பாணத்தில் ஒரு பரப்புக் காணியிலமைந்த மேல் வீட்டு வரை படத்துடன் கூடிய தட்டைக் கூரை வீடு உடனடியாக விற்பனைக்குண்டு.

*தொடர்புக்கு:* MR.S.KOGULAN
T.P.: 0777 246723
*OR* MR.S.VIMALAKANTHAN
021 2264483

(சி/555981)


## பருத்தித்துறை நகராட்சி மன்றம்
## வரவுசெலவுத் திட்டம் - 2009


255ஆம் அதிகாரமான நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 178 (3)ஆம் பிரிவிற்கமைவாக பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் 2009ஆம் வருடத்திற்கான வரவுசெலவுத் திட்டம் 15.12.2008ஆம் திகதியிலிருந்து பொதுமக்கள் பார்வைக்காக நகரசபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

அ.அ.நடராசா
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

*நகராட்சிமன்றம், பருத்தித்துறை.* (சி/555987)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை குணாதீதன்



ஓடக்கரை வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை குணாதீதன் 12.12.2008 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை நல்லம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - சற்குணம் தம்பதியரின் மருமகனும் புனிதகுமாரியின் அன்புக் கணவரும் மீராயினி (கனடா), கிருத்திகன் (பிரான்ஸ்), மதுராயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாஸ்கரன் (கனடா) அவர்களின் அன்பு மாமனும் ஹரிஸின் (கனடா) அன்புப் பேரனும் விஜயகுமாரன் (பிரான்ஸ்), ராதாகிருஷ் ணன் (மலேசியா), விசாரதா (பிரான்ஸ்), சாருகேஸி (டென் மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (14.12.2008) ஞாயிற்றுகிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*ஓடக்கரை வீதி, சங்கானை.*

*தகவல்:* இ.புஷ்பநாதன் *(மைத்துனர்).* (80730)

### திருமதி ராஜன் ரஜனி



ஆனைக்கோட்டை, பொன்னையா வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராஜன் ரஜனி (விஜி) (12.12.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ராஜனின் அன்பு மனைவியும் ரொசானின் பாசமிகு தாயும் திருச்சிற்றம்பலம் - சந்தானலட் சுமி தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும் துரைராசா - பூரணம் தம்பதியரின் மருமகளும் திருசாந்தினி காலஞ்சென்ற சபேசன் மற்றும் கேதீசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை.* (80728)

*தகவல்:* சி.திருச்சிற்றம்பலம் *(தந்தை).* தொ.பே.இ. 060 221 9469


## புதிய வருடத்திற்கான அனுமதிகள்

6th Anniversary

சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும்

**பாலர் பாடசாலை**

விசேட நிகழ்ச்சிகள்
English Concert, முத்தமிழ் விழா
ஒளி விழா, பட்டமளிப்பு விழா
மாணவர் சித்திரம்/ கைவேலை
கண்காட்சி, Sports Meet

கற்பித்தல் முறை :

- சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr. Maria Montessori & Canadian Early Learning Method
- ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம்
- தாய்மொழி கட்டாய பாடம்.

Contact: 0773627055

Play Group - 2-3 years
Montessori - 3 -4 years
Pre-School - 4-5 years

பாடசாலைகள்

**BRITISH BUSINESS SCHOOL**

| | | |
|---|---|---|
| நல்லூர் (1) | : No : 140, Temple Road, Nallur, Jaffna. | Tel : 021 222 5796 |
| நல்லூர் (2) | : No : 34, சட்டநாதர் வீதி , Nallur, Jaffna. | Tel : 021 222 4060 |
| சுன்னாகம் | : Lakshmi Cottage ( Near the New Court), K.K.S Road, Mallakam. | |
| மானிப்பாய் | : 252, ஆலடிச் சந்தி, Jaffna Road, Manipay. | |
| புலோலி | : ஸ்ரீ பத்மநாதன் இல்லம், [illegible] | |


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இடம்மாறும் வெற்றிக்கம்பங்களும் ஏமாறும் இலங்கை - இந்திய அரசுகளும்



இன்று உலகமே ஏமாற்றுப் பிரச்சாரத்தால் வாழ்க்கை வண்டியை ஓட்டிக் கொண்டிருப்பதைக் காணலாம். பல்வேறு துறைகளிலும் இருப்பது போலவே அரசியலிலும் இன்று இது நன்றாக ஒட்டிக் கொண்டுவிட்டது. இலங்கையைப் பொறுத்த வரை சிங்கள அரசியல் கட்சிகளின் வாக்கு வேட்டை தமிழின அடக்குமுறை நோக்கியதாக மாறி, இன்று இராணுவ முகம் கொண்டுவிட்டது. சிங்களத்தின் ஆட்சி அதிகாரவெறி அதனுடைய அனைத்து அரசியல் கட்சிகளையும் இராணுவ மயச் சிந்தனைக்கு அடிமையாக்கிவிட்டது. இந்த நிர்ப்பந்தம் இலங்கையில் பொதுவுடமைக் கட்சிகளையும் மிதவாதிகள் எனப் பெயர் வாங்கிக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியையும் பிடித்துக்கொண்டுவிட்ட நிலை இன்று தெரிகிறது.

தமிழினத்துக்கு எதிரான போரில் புத்த பிக்குகள் உட்பட ஒட்டுமொத்தச் சிங்கள இனமே இன்று ஜனாதிபதியின் போரியல் அரசியலுக்கு முழுமையான ஆதரவு கொடுத்து வருவது கண்கூடு. இதனால் உலக நாடுகளின் கண்டனத்தையும்



எதிர்க்கும் அளவுக்கு மகிந்தவின் சிங்கள அரசுக்கு இந்தப் போர் மிகப்பெரும் பலத்தைக் கொடுத்துள்ளது. இந்த அசுர பலம்தான் இந்தியாவை இலங்கை அரசின் காலடியில் மண்டியிட்டு நிற்கும் அளவுக்கு வைத்துள்ளது. இலங்கையின் பிராந்திய முக்கியத்துவம்; அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் மிகமுக்கியமாக இருப்பதனால் இலங்கையால் இந்தியாவின் கண்ணுக்குள் விரலை விட்டு ஆட்டிக்கொள்ள முடிகிறது.

ஈழத் தமிழினத்துக்கு தனது இருப்பையும் விடுதலையையும் வென்றெடுக்க வேண்டிய ஒரே ஒரு மார்க்கமாக போர் மாறிவிட்டது. எனவே, ஈழத் தமிழினத்தின் தனி ஒரு பலமாக, அதனைக் காப்பாற்றும் வல்லமை கொண்ட இயக்கமாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே உள்ளனர்.

இந்த உண்மையை தமிழ் மக்கள், குறிப்பாகப் பல ஈழத் தமிழ் பேசும் மக்கள் உணரத் தவறினாலும், சிங்களமும் இந்திய மத்திய அரசுகளும் புலிகளுடன் பல ஆண்டுகள் போர்க் களங்களில் மோதத் தெரிந்து கொண்டுவிட்டது என்பதில் வேறு கருத்தில்லை. எனவே, புலிகளுக்கு எதிரான போரில் இலங்கையுடன் இந்தியா மிக இறுக்கமாகப் பிணைந்து செயல்படுவது வெளிப்படையான உண்மையாகிவிட்டது.

இன்று எடுத்ததற்கு எல்லாம் புலிகள் ஆயுதத்தைக் கீழே வைத்தால் மட்டுமே அரசியல் தீர்வு பற்றிய பேச்சு சாத்தியம் என இந்த இருநாடுகளும் பேசுவதில் உள்ள கபடத்தனம் இதனால் தெரிகிறது. இவர்களின் மனதில் உள்ள அமைதித் தீர்வு என்பது எது என எவருக்குமே தெரியாது. நடந்து முடிந்த எந்த ஒரு பேச்சுக்களிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள் செயல் வடிவம் பெறத் தவறிவிட்ட சூழலில், புலிகள் ஆயுதத்தைக் கீழே வைத்தால்தான் அமைதித் தீர்வு வரும் என்பதில் உள்ள பொய் முகம் தெரிகிறது. இவர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் துட்டகைமுனு எல்லாள மன்னனை ஏமாற்றியமை போன்று இன்றும் பிரபாகரனை ஏமாற்றித் தமிழினத்தை அழித்து விடலாம் என நினைக்கிறார்கள்.

காலத்துக்குக் காலம் எதிரிகளைக் கற்பனைக் கனவுகளில் மிதக்க வைத்து வெற்றிக் கம்பம் அதோ இதோ எனவும் அதற்கான இறுதி நாள் கெடு விதித்தும் ஏமாந்து அலைகின்றன இலங்கை அரசும் அதன் பின் னால் நிற்கும் இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளும். இன்றோ நாளையோ புலிகளின் அழிவைக் கண்டு அதன் பின்னர் தீர்வைக் கட்டிவிட அவை துடிக்கின்றன. இவர்கள் கூறும் அரசியல் தீர்வு சீதை தேடிய மாயமான் என்பது சிறு பிள்ளைக்கும் தெரியும்.

தெரிந்தோ தெரியாமலோ மஹிந்த அரசு கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவிலாற்றில் இரண்டு பகுதிகளிலும் வாழ்ந்த சிங்கள தமிழ் மக்களுக்கிடையே எழுந்த நீர்ப் பிரச்சினைக்கு இராணுவ வழியில் தீர்வு காணமுற்பட்டது. அப்போது மஹிந்த அரசுக்கு மாவிலாறுப் பிரதேசத்தைப் புலிகளின் கட்டுப் பாட்டிலிருந்து பெறுவதே நோக்கமாக இருந்தது. இதனை ஒரு சாட் டாக வைத்துப் புலிகளைத் தன் இராணுவப் பொறிக்குள் இழுத்துவிட நினைத்தது. இதில் இன்னும் ஒரு தேவை இலங்கை அரசுக்கு இருந்தது. அதுதான் கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றி விடுவது. கிழக்கில் உள்ள எண்ணைத் தாங்கிகளை இந்தியக் கம்பனிகளுக்குக் குத்தகைக்கு கொடுப்பது, இந்தியாவுடன் அனல் மின் நிலையம் உருவாக்குதல் போன்ற பொரு ளாதார முதலீடுகள் மீதான ஆசை காட்டி இந்தியாவின் ஆதரவைப் போருக்குப் பெற்று விடுவது.

இரு நாடுகளும் எதிர்பார்த்தது போல் புலிகள் மாவிலாறிலோ, மூதூர் திருகோணமலை மாவட்டத்திலோ போரைச் சந்திப்பதைத் தவிர்த்து விட்டனர். இதற்கான முக்கிய காரணம் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கருணா புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிக்கப்பட்டமை என்று கூறலாம். மற்றையது, கிழக்கு மாகாணத்தில் புலிகளின் பலம் உடைந்து விட்ட நிலையில் அங்கே ஒரு முழு அளவிலான போருக்கு முகம் கொடுப்பது ஆபத்தானது. இத்துடன் பாதுகாப்பான தரைவழிப் பின்தள வழங்கல் இல்லாத நிலையால் நிலைமை மேலும் மிக ஆபத்தாக முடிந்து விடலாம். எனவே போரில் புலிகளை வெற்றி கொள்ளும் இலங்கை இந்திய அரசுகளின் ஆசையில் மண்ணைப் போடும் வகையில் கிழக்கிலே போர் அரங்கு ஒன்றைப் புலிகள் இல்லாமல் செய்துவிட்டனர்.

மாவிலாறு சுலபத்தில் கிடைத்து விட்டதால் சிங்களத்துக்கு வெற்றி மீதான வெறி உச்சந் தலைக்கு ஏறிவிட்டது. மூதூர், சம்பூர் குரங்குபாஞ்சான், தொப்பிக்கல என்று முன்னர் அரசு கனவில் கண்ட இடங்களை எல்லாம் தனது கைக்குள் போட்டுக்கொண்டது சிங்கள அரசு. இதில் புலிகளுக்கு சர்வதேச அளவில் செய்யப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் ஒரு முக்கிய தடைக்கல்லாக அமைந்தது என்பதும் உண்மையே. உலக நாடுகளால் பயங்கரவாதிகள் எனக் கபடத்தனமாக முத்திரை குத்தப்பட்ட நிலையில் கயிற்றின் மேல் நடப்பது போன்ற அவதானம் தேவைப்பட்டது.

எனவே, சிங்களம் ஆவலுடன் தேடிய வெற்றிக் கம்பம் கிழக்கில் இருந்து எடுக்கப்பட்டு விட்டது.

கிழக்கைப் பிடித்ததோடு மஹிந்தவின் காட்டில் அடைமழை கொட்டியது. போரைக் காரணம் காட்டி அரசியல் எதிரிகளையும் தனக்கு எதிரான சக்திகளையும் ஓரங்கட்டி மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்தித் தன்னைப் பலப்படுத்திக் கொண்டார். கிழக்கின் வெற்றியால் பயனடைந்த இந்தியா இராணுவத் தளபாடங்கள், பயிற்சிகள், பண உதவிகளை அள்ளிக் கொடுத்து சிங்களத்துக்கு கொம்பு சீவும் வேலையைச் செய்து தனது பங்குக்கு உசுப்பிவிட்டுள்ளது. மன்னார், பூநகரி,

பத்ரா

அக்கராயன் எனப் புலிகளை வீழ்த்திவிட இலங்கை அரசு புலிகளுடனான இறுதிப் போர் மூலம் தனது வெற்றி விழாக் காணும் ஆசையில் ஒவ்வொரு களமுனையாகத் தேடி அலைகிறது.

இதோ கிளிநொச்சி இன்னும் இரண்டரை மைல். அதை 24 மணி நேரத்தில் பிடித்து விடுவோம் எனக் கொக்கரித்தது சிங்களம். வாரம், மாதம் என காலம்தான் போனது. ஆனால் கிளிநொச்சி என்ற வெற்றிக் கம்பமோ கண்ணுக்கே தெரியாமல் கிடக்கிறது. கார்த்திகை 27இல் கிளிநொச்சியில் மஹிந்த ராஜபக்ச சிங்கக் கொடியேற்றி கொண்டாடுவேன் என்றார், ஆனாலும் நடக்கவே இல்லை.

கார்த்திகை 27இல் கிளிநொச்சி வீழ்ந்து விடும் என்ற செய்தியைத் தொலைக் காட்சியில் தானே அறிவிக்கவேண்டும் எனக் காத்திருந்தார் மஹிந்தர். பாவம் அந்தச் செய்தி அவருக்கு இன்றுவரை

(18ஆம் பக்கம் பார்க்க...)

## கத்தோலிக்க குருமாருக்கு முதன் முதல் குருப் பட்டம் வழங்கப்பட்ட நிகழ்வு

**யாழ்ப்பாணச் சமூகத்துக்கு அவர்கள் ஆற்றிய பணிகள்**

*போத்துக்கீசரின் வருகையைத் தொடர்ந்து கத்தோலிக்க மதமும் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. போர்த்துக்கீசரின் வருகையுடன் கத்தோலிக்க மதம் யாழ்ப்பாணம் வந்திருந்தாலும் இருநூற்றைம்பது ஆண்டுகளின் பின்னர் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்கக் குருமார் குருப்பட்டம் பெற்றனர்.*

*1871ஆம் ஆண்டு யாழ்.ஆயர் பொன்ஜீன் (**Bonjean**) தலைமையில் முதலாவது குருநிலைப்படுத்தும் வைபவம் யாழ்.மரியன்னை தேவாலயத்தில் நடைபெற்றது. அருட்திரு.பிளனகன் (**Flanagan**), றூக்ஸ் (**Roux**), வெட்ரன் (**Vedrenne**) ஆகியோரே யாழ்ப்பாணத்தில் குரு நிலைப்படுத் தப்பட்ட முதலாவது கத்தோலிக்கப் பாதிரிமார். றூக்ஸ் அடிகளார் அநுராதபுரத்தில் இடம்பெற்ற பௌத்த கிறிஸ்தவ கலவரத்தின்போது ஆற்றிய சேவைக்காகக் கௌரவிக்கப்பட்டவர்.*

**இன்றும் நினைவில் கொள்ள... அன்றைய ஞாபகம்... இங்கே!**

*பிளனகன் அடிகள் 1889ஆம் ஆண்டு காலமாகும்வரை சென்.ஜோசப் அநாதை இல்ல நிர்வாகியாக விளங்கினார். அத்துடன் பாடசாலைகளின் முகாமையாளராகவும் விளங்கினார். பிரான்சிலும், பாண்டிச்சேரியிலும் கல்வி பயின்ற இவர் சம்பத்தரிசியார் கல்லூரி நிர்வாகியாகவும் பணியாற்றினார். உள்ளூர் இளைஞர்களை ஆசிரியர்களாகப் பயிற்றுவித்து அவர்கள் மூலம் மாணவர்களுக்குக் [illegible]. இந்த காலத்தில் பாடசாலைக் கட்டணமாகப் (பாடசாலைக் காலம் [illegible]) ஆறு ரூபா அல்லது மாதம் மூன்று வெள்ளி அறவிடப்பட்டது.*

- தாண்டவன்

## வாழ வைத்த விருட்சங்களுக்கு எங்கள் அஞ்சலிகள்....



வாழும் போது இயற்கைக்கு அழகு கொடுத்தாய்
வையத்தில் மழை பொழியக் கை கொடுத்தாய்
நாளும் தலை முறையை நினைவூட்டி நீயிருந்தாய்
பாழும் 'நிஷா' சுழன்றடிக்க பாதியிரவினில் நீ சரிந்தாய்
வீழும் நாள்வரை விலை போகா நிலையிருந்தாய்
விபத்துக்கள் வந்தபோது சாட்சிக்கு நீயிருந்தாய்
ஆழும் சரித்திர ஆழவேரோடி அற்புதமாய் நீயிருந்தாய்
அழியா இடமென ஊருக்குப் பெயர் கொடுத்தாய்.

காதலர் நினைவைக் கட்டிக் காத்துக் கை கொடுத்தாய்
காயத்திற்கு மாணவர் கற்களும் வாங்கிக் கொண்டாய்
ஆதரவிலா அகதிக்கு அரண்மனை வாழ்வு கொடுத்தாய்
அனைவரும் ஒன்றேயென சமத்துவம் பேணி நின்றாய்
வீதிக்குப் பெயர் கொடுத்து வீதியோரம் நின்றிருந்தாய்



வீண்வம்புச் சண்டைக்கு வீணர் முன் மௌனமானாய்
விக்கினம் தீர்க்கும் விநாயகன் வீற்றிருக்கக் குடையானாய்
விதை சிறிது விருட்சம் பெரிதென வாழ்ந்திருந்தாய்

உனை வளர்த்தெடுத்த எம் அப்பன் பாட்டனிடம் - நமது
உணர்வலையை எடுத்துச் செல் உன் போன்ற
விருட்ஷமதை நாம்காண இனி நூறாண்டு போதாதே!

ச.நடராஜா
(யாழ்.இலங்கை வங்கி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் வேலக்கைப் பிள்ளையார் கோயிலுக்கும் மிக அண்மையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 021 4591438, 077 6916929.



## நத்தார், புதுவருட விசேட விலைக்கழிவு

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க!

அதிரடி விலைக்கழிவுகளுடன்
உள்நாட்டு வெளிநாடுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express

5% தொடக்கம் 20% வரையான விசேட கழிவு

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.

கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்றிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)



## உழவு இயந்திரம் உடன் தேவை

நல்ல நிலையிலுள்ள TAFE அல்லது M.F. உழவு இயந்திரம் உடன் தேவைப்படுகின்றது. பெட்டியுடன் இருப்பது விரும்பத்தக்கது. உரிய தகவல்களுடன் 20.12.2008 இற்கு முன் கீழுள்ள முகவரியுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

பூரோவில்,
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.



## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள GE xxxx தொடரிலக்கமுடைய ஆட்டோ, கொம்பியூட்டர் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: S.திருச்செல்வம்,
39/2, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி.
T.P. 0774658068, 0776176743



## தவறவிடப்பட்ட பொருள்

பாடசாலை மாணவிகளின் நீல, மஞ்சள் நிறமான நீளப் பட்டிகள் அடங்கிய பொதி ஒன்று மானிப்பாய் சந்திக்கும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் உதயன் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தர்மகுலசிங்கம்.


## இடம்மாறும் வெற்றிக்...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி...) கிடைக்கவே இல்லை. பிரபாகரனுக்குப் பிறந்தநாள் பரிசு கொடுக்க நினைத்தோம். ஆனால், கால நிலை இடம் கொடுக்க வில்லை என்று பஸில் ராஜபக்ஷ 28ஆம் திகதி அறிக்கை விட்டார். ஆனால் 27ஆம் திகதி பிரபாகரன் தனது மாவீரர் நாள் சிறப்புரையை நிகழ்த் திய வேளையில் புலிகளின் வானொலி நிலை யத்தின் மீது விமானக் குண்டு வீசியும் அவரது பேச்சு ஒலிபரப்பானது. போன போன இடம் எல்லாம் வெற்றிக் கம்பம் கிட்டாமலே இலவு காத்த கிளிபோல் இலங்கை அரசு அலைகிறது. சிங்களம் இலவம் பழம் பழுப்பது எப்போது? இந்தியக் கிளி அதைச் சாப்பிடுவது எப்போது? இதற்குள் புலிகள் தமது தற்காப்புப் போரை நடத்தி, தனது தாக்குதல் களத்தை வெளிநாடுகளுக்கு மாற்றிவிட்டுள்ளனர். இப்போது தமிழகத்தின் உணர்வுகளுடன் சிங்களம் விளையாடிக் கொண்டிருக்கிறது. இந்திய மத்திய, மாநில அரசுகளின் பலவீனங்களை தனது தமிழின அழிப்புப் போருக்குப் பயன்படுத்தியபடியே வன்னியில் வெற்றிக் கம்பத்தைப் பிடித்துவிடத் துடிக்கிறது சிங்களம். அங்கே கூட அது தேடும் வெற்றிக் கம்பம் அதன் கைக்கு எட்டிவிடுமா?

எது எப்படியோ இந்த வாரம் இலங்கையின் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்த இந்தியத் தமிழக அரசியல்வாதிகள் பற்றிய கருத்து ஒரு புயலைத் தமிழகத்தில் கிளப்பி விட்டிருக்கிறது. இந்தப் புயல் எந்த அளவுக்கு மன்மோகன் சிங்கின் மௌனத்தைக் கலைக்கும் என்பது சந்தேகமே. ஆனால், யார் என்ன செய்தாலும் இந்திய, இலங்கை அரசுகளின் உறவில் மாற்றம் வரும் எனக் கூறமுடியாது. உண்மையான வெற்றிக் கம்பம் அடுத்த இந்தியப் பொதுத் தேர்தலில்தான் தெரியவரும். அப்போது ஆட்டத்தில் யார் வென்றார், யார் தோற்றார் என்பது தெரியும்.

*நன்றி: முரசம்*

## கொக்குவில் முன்பள்ளியின் வழியனுப்பும் விழா

கொக்குவில் வளர்மதி முன்பள்ளியின் கலைவிழாவும் பாடசாலைக்கு வழியனுப்பும் நிகழ்வும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு வளர்மதி முன்னேற்றக்கழக வேலாயுத பிள்ளை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சித் திணைக்கள யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்து கொள்வார். (1)

## வாழும் கலைப் பயிற்சி நெல்லியடியில்

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் வாழும் கலை பயிற்சி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருக்கும் ஆசிரியரால் இந்த வாரம் நெல்லியடியில் நடாத்தப்படவுள்ளது. நெல்லியடி தடங்கன் புளியடி முருகன்கோவில்மண்டபத்தில் நடைபெறவுள்ள இப்பயிற்சி வயது வந்தோருக்கும் இளவயதினருக்கும் என இரு பிரிவாக நடைபெறவுள்ளது.


நாளை திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ள இப்பயிற்சியின்கலந்து கொண்டு பலன் அடையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே பயிற்சி எடுத்தவர்களுக்கான பயிற்சி இன்று காலை 7 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறும்.


## படிவம்

மீள்குடியேற்றம் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சுக்கு பட்டதாரிகள் விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

Bharathy Pathippakam, 430 K.K.S. Road, Jaffna.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சிவசுப்பிரமணியம் மனோகரன் (மனோ)
தோற்றம்: 30.05.1952 மறைவு: 26.11.2007
திதி: துதியை (14.12.2008)

அன்பினால் எம்மை ஆண்டு, உலக
அனுபவம் எல்லாம் நல்கி நன்று
நாம் சிறக்க வைத்தீர்! என்றும்
விண்ணிலே இருந்து தாரீர்! நிறைமதி
ஆசிகள், என்றும் இறைஞ்சுவோம்
இறைவன் தாளே!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
செல்லையா மாசிலாமணி (மாமன்),
ம.சரோஜினிதேவி (மனைவி),
பிரதீபா, பிரபா, பிரதாப், பிரசாந்தி
(மருமக்கள்).

பெரிய மதவடி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(80747)


## SCHOLARSHIPS FOR TOP UP DEGREE IN SINGAPORE

- CALLING ALL HND / ABE / EDEXCEL AND DIPLOMA HOLDERS.
- TRANSFER TO UK FOR THE THIRD YEAR
- WORK AFTER STUDY & HAVE A SUCCESSES FULL CAREER

OTHER PROGRAMMES AVAILABLE

- ACCA / BUSINESS ADMINISTRATION / INTERACTIVE MEDIA
- G.C.E. O/L ACADEMIC PROGRAMME
- HOSPITALITY MANAGEMENT
- FOUNDATION DIPLOMA IN ENGLISH AS A FOREIGN LANGUAGE

ONLINE COURSES RESEARCH
BLACK BOARD * LIBRARY

Guidance International மாணவர்களின் தேவைக்கேற்ப UK, USA, Canada, Australia, New Zealand, Mayasia & Singapore போன்ற நாடுகளுக்கு மிகக்குறைந்த செலவில் STUDENT VISA பெற்றுக்கொடுப்பதில் சிறப்பு அனுபவம் கொண்டவர்கள்.

CONTACT: 0777 738119, 0773 973761

GUIDANCE INTERNATIONAL (PVT) LTD
Professional Overseas Higher Education Consultant & Training Centre
18/1, 1ST LANE, JAMBUGASMULLA ROAD, NUGEGODA.
Tel: 0112 823498, 0777 738119, 0773 973761
COUNSELING ON APPOINTMENTS ONLY.


## கண்ணீர் அஞ்சலி



எமது சக மாணவி
செல்வி கு.மதுராஜினி
அவர்களின் பாசமிகு தந்தை
**செல்லத்துரை குணாதீதன்**
அவர்களின் மறைவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

HNDIT இரண்டாம் வருட மாணவர்கள்,
யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம்.

## துயர் பகிர்கின்றோம்

எமது இசையாசிரியை
**திருமதி சர்வலோகேஸ்வரி சிவானந்தா**
அவர்களின் அன்புத் தாய் திருமதி சிவபாக்கியம் சிவானந்தன் அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு மனத்துயரடைவதுடன், அவரது ஆத்மா சாந்தி பெறவும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

யா/கல்வி வலய இசையாசிரியர் கழகம்.

(80746)

## நன்றி கூறுகின்றோம்

எமது குடும்பத் தலைவர்
**ஜோ.அரியரட்ணம்**
அவர்களின் பூதவுடலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவர அனுமதி வழங்கிய மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், அமைச்சர்கள், ஊடக அமைப்புகள், விமானப்படை மற்றும் இராணுவத்தினர் ஆகியோருக்கும் ஏனைய உதவிகளை வழங்கிய இலங்கை பெந்தெகொஸ்தே சபை ஊழியர்கள், CHA நிறுவன ஊழியர்கள், நண்பர்கள், வைற்றவுஸ் ஊழியர்கள், மலர்வளையம் வைத்தவர்கள் நேரிலும் தொலைபேசி மற்றும் தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் ஆகிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

16, சோமசுந்தரம் அவனியு,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(80736)

## மரண அறிவித்தல்

### செபஸ்தி செலஸ்ரீனுப்பிள்ளை



மண்டைதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது மன்னார், தாழ்வுப்பாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தி செலஸ்ரீனுப்பிள்ளை நேற்று (13.12.2008) சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யோவான்செபஸ்தி-வரவணிக்கம் தம்பதியரின் அன்புப் புதல்வனும் லவுறேஞ்சியாப்பிள்ளை (புஸ்பராணி) யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆசீர்வாதம்-பார்பரம்மாவின் அன்பு மருமகனும் கலிஸ்ரா, ஜொய்சி, கொன்சி, மலர்விழி, அன்பழகன், அறிவழகன் (லண்டன்), கலையழகன் (லண்டன்), பண்பழகன் (பிரான்ஸ்), பண்பரசி ஆகியோரின் அன்புத் தந்தையும் டேவிற், காலஞ்சென்ற பெஞ்சமின் மற்றும் யோகன், இப்பொலிற், டயானா (லண்டன்), சர்மிலா (லண்டன்), யூஜின் ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற அந்தோனிமுத்து (இளைப்பாறிய அதிபர்), காலஞ்சென்ற பெனடிற்றம்மா மற்றும் பேணாட் (கனடா), சிப்பிரியான் (சுவீடன்), லில்லிமாகிறேற், நீற்றம்மா, றெஜீனா, எட்மன், காலஞ்சென்ற ஜெயபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (14.12.2008) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் தாழ்வுப்பாடு புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

த.மு.: 19/2, அடப்பன் வீதி, யாழ்ப்பாணம்.
நி.மு.: 4ஆம் வட்டாரம், மண்டைதீவு.

தகவல்:
டே.கலிஸ்ரா (மகள்).

(80749)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அனைத்துக் கட்சிகளின் யோசனையா? அரசுத் தரப்புக் கட்சிகளின் யோசனையா?

'[illegible]லையைக் கெல்லி எலியைப் பிடித்த மாதிரி' இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் திட்டம் ஒன்றை பல டசின் கணக்கான அமர்வுகளின் பின்னர் தயாரித்து விட்டதாக அறிவித்திருக்கின்றார் அனைத்துக் கட்சிகள் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண.

மணப்பெண் இல்லாமல் திருமணத்தை நடத்தி முடித்துக் காட்டியவர் போன்று இருக்கின்றது அவரது செயற்பாடும் அறிவிப்பும்.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள்குழு என்பதே வெறும் கண்கட்டு வித்தை - கபட நாடகம் - என்பது உலகறிந்த பரகசியம்.

இந்தக் கட்டமைப்பு பெயரில் 'அனைத்துக் கட்சி' என்று கொண்டிருந்தாலும் ஒட்டுமொத்தமாக அரசுத் தரப்பில் இருக்கும் கட்சிகளின் கூட்டுத்தான் என்பது வெளிப்படையானது.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. அதிலிருந்து வெளியேறிவிட்டது. அடுத்த பிரதான கட்சியான ஜே.வி.பியும் கூட இந்த அனைத்துக் கட்சிக் கட்டமைப்பைப் புறக்கணித்துப் பகிஷ்கரிக்கின்றது.

ஈழத்தமிழர் தரப்பில் மொத்த நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தில் தொண்ணூறு வீதத்துக்கும் அதிகமான பங்கைக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த அனைத்துக் கட்சிக் கூட்ட செயற்பாடுகளுக்கு அழைக்கப்படவேயில்லை.

ஆக, அரசுத் தரப்பில் இருக்கும் கட்சிகளும் எதிரணியில் இருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தான் இந்த அனைத்துக் கட்சிக் கூட்ட அமர்வுகளில் பங்குபற்றி வந்தன. எதிரணியிலிருக்கும் ஜனநாயக மக்கள் முன்னணி (முன்னாள் மேலக மக்கள் முன்னணி) கூட இந்த அமர்வுகளில் ஒழுங்காகப் பங்குபற்ற முடியாத வகையிலேயே இந்தக் கட்டமைப்பின் கூட்டங்கள் இடம்பெற்றன.

இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்புகளில் ஒன்று ஈழத்தமிழினம். அத்தரப்பின் பங்குபற்றுதலின்றித் இந்தக் கட்டமைப்பினால் தயாரிக்கப்பட்ட திட்டம் எதுவும் 'இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அனைத்துக் கட்சிகளின் யோசனைகள்' என முன்னிறுத்தப்படமுடியாது என்பது கவனிக்கத்தக்கதாகும். வேண்டுமானால் 'இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தென்னிலங்கையின் யோசனைத் திட்டமாக' இதனை முன்னிறுத்த முடியும்.

ஆனால் அதில் கூட ஒரு சிக்கல் உள்ளது. தென்னிலங்கையின் பிரதான எதிர்க்கட்சிகளான ஐ.தே.கட்சி, ஜே.வி.பி. போன்றவற்றின் உடன்பாட்டுடன் இப்போதைய திட்டம் தயாராகவே இல்லை. தவிரவும் அரசுத் தரப்பில் இருக்கும் சிங்கள-பௌத்த பேரினவாதத் தரப்பான ஜாதிக ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி போன்றவை இப்போது இறுதியாக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் யோசனைத் திட்டத்தை அங்கீகரிக்கின்றனவா என்பதும் தெரியவில்லை.

ஆகவே, இப்போது முன்வைக்கப்படுவதாகக் கூறப்படும் திட்டத்தை 'அனைத்துக் கட்சிகளின் யோசனைத் திட்டமாக முன்வைப்பதற்குப் பதிலாக 'அரசுத் தரப்பில் உள்ள கட்சிகளின் யோசனைத் திட்டமாக' குறிப்பிட்டால் அது சிலசமயங்களில் பொருத்தமாக இருக்கும்.

ஏனெனில் மேற்படி பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான இந்த 'அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு' பல சந்தர்ப்பங்களில் அனைத்துக் கட்சிகளின் அமைப்பாக இயங்காமல், அரசுத் தலைமையின் 'எடுபிடி' அமைப்பாகச் செயற்பட்டது என்பது வெளிப்படையாகத் தெரிந்த விடயம்.

கிழக்கைக் கைப்பற்றிய இலங்கை அரசை அச்சமயம் அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்தும்படி இந்தியாவும் ஏனைய சர்வதேச அமைப்புகளும் வற்புறுத்தின. அவ்வேளை உலக நாடுகளின் காதில் பூச்சுற்றுவதற்காக அரசரமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் என்ற நாடகத்தை அரங்கேற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டம் வகுத்தார்.

அவரது அந்தத் திட்டப்படி-அவரது இயக்கத்தில்-கனகச்சிதமாகச் செயற்பட்டு, அவர் வழிகாட்டியபடி, அவர் எதிர்பார்த்தபடி, இடைக்காலத்திட்ட யோசனை என்ற பெயரில் ஒரு வரைவைக் கொண்டு வந்து அவரிடம் சமர்ப்பித்தது இந்த அனைத்துக் கட்சிக்குழு.

இந்த இடைக்கால யோசனைத் திட்டவரைவை கூட அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவால் சுயாதீனமாகத் தயாரிக்க முடியவில்லை என்பதும்-

இவ்விடயத்தில் அது தயாரித்த மூலப்பிரதி நான்கு தடவைகள் ஜனாதிபதியின் கவனத்துக்கு தனிப்பட்ட முறையில் கொண்டு செல்லப்பட்டு, வெட்டிக் கொத்தி, நீர்த்துப்போக வைத்த பின்னரே-ஜனாதிபதியின் இசைவுக்கு ஏற்ப வெறிதாக்கப்பட்டே-அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. என்பதும்-தெரிந்தவையே.

எனவே இலங்கை ஜனாதிபதியால், அவரது இச்சைக்கு ஏற்ப செயற்படும் வகையில் கருமமாற்றும் இந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவினால் சமர்ப்பிக்கப்படக் கூடிய யோசனைத் திட்டத்தை அனைத்துக் கட்சி யோசனை' என அழைப்பதை விட 'அரசு தரப்பின் யோசனை' என்று குறிப்பிடுவதே பொருத்தமானதாகும்.

ஈழத் தமிழர்களுக்கு நியாயமான உரிமைகளை வழங்கி, நீதியான முறையில் அதிகாரத்தைப் பகிர்வதற்கு பௌத்த-சிங்களப் பேரினவாதம் தயாரில்லாத போது, அதனால் சமர்ப்பிக்கப்படக்கூடிய எந்தத் தீர்வு யோசனையிலும் நீதி, நியாயமான அம்சங்கள் அடங்கியிருக்குமென எதிர்பார்ப்பது-நம்புவது-அபத்தமே.

# திருநெல்வேலி சந்தையின் கட்டடப்பணிகள் அடுத்த ஆண்டுக்குள் பூர்த்தி செய்யப்படும்

## நல்லூர் பிரதேச சபைச் செயலர் கூறுகின்றார்

நாவற்குழி, டிசெ.14

திருநெல்வேலி பொதுச் சந்தையின் கட்டடப் பணிகள் அடுத்த ஆண்டிற்குள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும். இதன் மூலம் தற்போதுள்ள வசதியீனங்கள் நீக்கப்பட்டு பொதுமக்களும் வியாபாரிகளும் எதிர்கொள்ளும் சிரமங்கள் முழுமையாக நீக்கப்படும்.

இவ்வாறு நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் எம்.சாந்தசீலன் தெரிவித்தார்

நல்லூர் பிரதேச சபையின் உள்ளூராட்சி விழாவில் வைத்தே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அடுத்த ஆண்டில் பல முக்கிய வேலைத் திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சபையின் கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள பொது நூலகத்திற்கென புதிய இரண்டு மாடிக் கட்டடம் கட்டப்படவுள்ளது.

தங்களது பதவி என்ற நிலைக்கும் மேலதிகமாகச் சேவை மனப்பாங்குடன் உத்தியோகத்தர்கள் கொண்ட குழு பொதுமக்களின் வாழ்வாதாரத் திட்டங்கள் குறித்த முயற்சிகளில் கூடுதல் கவனம் செலுத்தவுள்ளது.

சுற்றுச் சூழலைப் பேணும் நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவுள்ளது.

அடுத்த ஓகஸ்ட் மாதத்திற்கு முன் னதாக நந்தாவில் குளம் சீரமைக்கப்பட்டு வெள்ளப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும்- என்றார்.

பிரதேச நலனைக் கருத்தில் கொண்டு பொதுமக்களும் தமது முழு மையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (202-111)

# நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா

யாழ்ப்பாணம், டிசெ.14

இலங்கை நூலக சங்கம் நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா மட்டம்I பாடநெறிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் சித்தி அல்லது உயர் கல்வித் தகைமை அல்லது ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் சித்தியுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட நூலகம் ஒன்றில் மூன்று வருட தொழில் அனுபவம் உள்ளவர்கள் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை திருமதி ல. உமாசங்கருடன் 'ஒருங்கிணைப்பாளர், இலங்கை நூலகச் சங்கம், யாழ் நிலையம், நூலகம் யாழ்.பல்கலைக் கழகம்' என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# அரச அலுவலர்களுக்கான சீருடைக் கொடுப்பனவு இரட்டிப்பாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.14

அரச திணைக்களங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு வழங்கப்படும் சீருடைக் கொடுப்பனவு இரட்டிப்பாக் கப்பட்டுள்ளது.

தாபன விதிக்கோவைXXI பிரிவு 3 இன்படி 01.01.2009 முதல் இக் கொடுப் பனவு வழங்கப்படவுள்ளது.

இதுவரை 1100 ரூபாவாக வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவு 2200 ரூபாவாக அதிகரித்து வழங்கப்படவுள்ளது. அதற்கான அனுமதியை வடமாகாணப் பொது நிர்வாக செயலக ஆளுநர் வழங்கியுள்ளார். (202-131)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 30 | 15.12.2008 திங்கட்கிழமை |
| திதி: | திருதியை பி.ப.04.39வரை |
| நட்சத்திரம்: | புனர்பூசம் பி.ப. 12.36வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிச் செயலகத்துக்கு தொலைபேசி இணைப்புகள்

யாழ்ப்பாணம், டிசெ.14

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இயங்கும் அனைத்துப் பிரிவுகளுக்கும் உள்ளக தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

32 பிரிவுகளுக்கு நேற்று முன்தினம் உள்ளக தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளன. (202-207)

# வெள்ளம் பாதிக்காத நெல்வயல்களுக்கு இரண்டாம் கட்ட உரம் விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.14

அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெல் வயல்கள் தவிர்ந்த ஏனைய வயல்களுக்கு 2 ஆம் கட்ட உர விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கென ஆயிரத்து 120 மெற்றிக் தொன் உரம் யாழ்.மாவட்டத்துக்கு எடுத்துவரப்பட்டு விநியோகிக்கப் படுகின்றது.

ஒரு பரப்புக்கு 1.42 கிலோ யூரியாவும் 0.5 கிலோ எம்.ஓ.பி என்னும் அடிப்படையில் மாவட்டத் திலுள்ள 14 கமநல சேவை நிலையங்கள் ஊடாக விநியோகம் நடைபெறுகின்றது.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் 2008/2009 பெரும்போக நெற்செய்கைக்காக 9 ஆயிரத்து 398 ஹெக்ரேயர் விஸ்தீரணத்துக்கு 2 ஆயிரத்து 81 மெற்றிக்தொன் உரம் வழங்கப்பட்டுள் ளது. 18 ஆயிரத்து 972 பயனாளிகளுக்கு விநியோகிக் கப்பட்டுள்ளது. (202)

# புன்னாலைக்கட்டுவனில் கார் விபத்து; சிறுவன் உட்பட 7 பேர் காயமுற்றனர்

தெல்லிப்பழை, டிசெ. 14

சுன்னாகம் பகுதியிலிருந்து புத்தூர்-சுன்னாகம் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த கார் ஒன்று புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு அண்மையாகவுள்ள வைரவர் கோவிலடியில் மின்கம்பம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

சம்பவம் நடைபெற்றபோது சிறுவர் உட்பட ஏழுபேர் அந்தக்காரில் பயணித்தனர். அவர்கள் அனைவரும் கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

மேற்படி வாகன விபத்துக்கான காரணத்தை ஊர்ஜிதம் செய்ய முடியாத போதும் விபத்து எப்படி நிகழ்ந்தது என்று சாரதியை சுன்னாகம் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

இவ்விபத்தினால் மின் கம்பிகள் அறுந்துள்ளதால் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் மின் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. (202-150)


விபத்துக்குள்ளான கார்

# இலவு காப்பா......?

'நிஷா' புயல் தாக்கம் நின்ற கையோடு பண்ணை வீதியைச் சென்று பார்த்த ஒருவர் சொன்னார்; "இந்தப் பாதையால் போக்குவரத்து நடக்க இனிப் பல மாதங்கள் செல்லும்" என்று. ஆனால் சில நாள்களுக்குள்ளே போக்குவரத்து ஆரம்பித்து விட்டது. காரணம் தேவை அதிகமாக இருந்தது, ஆகவே பாதையும் விரைவாகச் சீரமைக்கப்பட்டது, போக்குவரத்தும் ஆரம்பமானது.

பாதைகள் மூடப்பட்டிருப்பதன் அவலத்தையும் பாதைகள் திறக்கப்படுவதன் அவசியத்தையும் நாளாந்தம் அனுபவிக்கும் மக்கள் நாங்கள். பாதையைச் சீர்படுத்துங்கள் என்ற குரல் ஒரு கூக்குரலாக, அவலக்குரலாக ஆனால் மௌனக்குரலாக எங்கள் மூச்சுக் காற்றோடு நாளாந்தம் வெளியாகிக் கொண்டு இருக்கின்றது.

இந்தப் பின்னணியில்தான் "ஆண்டவரின் பாதையைச் செம்மைப்படுத்துங்கள்" என்ற எசாயாவின் குரலும் எமது செவிகளுக்குக் கேட்கிறது. இறைவன் வரவேண்டும் இந்த இன்னல்களையெல்லாம் நீக்க வேண்டும் என்ற அவா எங்கள் எல்லோரிடமும் மிகுந்து காணப்படுகின்றது. குறிப்பாக இயேசு கிறிஸ்துவின் பிறப்பு விழாவை நோக்கி காத்திருக்கின்ற திருவருகைக் காலத்திலே இந்த எதிர்பார்ப்பு இன்னும் உச்சமாகின்றது.

எங்களிடம் எதிர்பார்ப்புக்கள் உச்சமடைந்திருக்கும் அளவிற்கு அவரது வரவுக்காகப் பாதை செம்மைப்படுத்துகின்ற செயற்றிறன் குன்றியிருப்பது தான் கவலைக்குரியது.




பள்ளத்தாக்குகள் நிரப்பப்டுவதும், மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படுவதும், கோணலானவை நேராக்கப்படுவதும், கரடுமுரடானவை சமதரைகளாக்கப்படுவதும் அவருடைய வரவுக்கான முன் நிபந்தனைகள்.

முதலாவதாகத் தனி மனிதர்களாகிய எங்கள் ஒவ்வொருவரதும் உள்ளங்களில் இருக்கும் மலைகளும், கோணல்களும், பள்ளத்தாக்குகளும், கரடு முரடுகளும் சீர் செய்யப்பட வேண்டும்.

அடுத்ததாக எமது சமூகத்தில் உள்ள சீரழிவுகளும், ஏற்றதாழ்வுகளும் அகற்றப்பட வேண்டும். இவ்வாறு நாங்கள் பாதை துப்பரவு செய்யும் பணியில் முழுமூச்சாக ஈடுபடும்போது தான் ஆண்டவர் இயேசுவின் வரவு எமது உள்ளங்களிலும், எமது சமூகத்திலும் இடம் பெறமுடியும்.

இல்லையேல் எவ்வளவுதான் உரத்து நாம் 'ஆண்டவரே வாரும்' என்று கூவினாலும் ஒலி பெருக்கிகளில் சத்தமிட்டாலும் எமது காத்திருப்பு இலவு காப்புதான்.

அருட்பணி.ம.வி.இ. இரவிச்சந்திரன்.

# ஆழ்கடலுக்குச் சென்ற மீனவர்கள் தொழில் செய்ய முடியாமல் திரும்பினர்

## அனுமதிப்பத்திரங்கள் கடற்படையினரால் பெறப்பட்டன

யாழ்.குடாக்கடலில் உள்ள கல்லடிக் கடற் பகுதிக்குத் தெற்கே உள்ள ஆழ்கடல் பகுதிக்கு நேற்று தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் அங்கு தொழில்செய்ய முடியாதவாறு கடற் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட கடற்பரப்பில் தொழில் செய்து கொண்டிருந்த மீனவர்களின் அனுமதிப்பத்திரங் களையும் (கடற்பாஸ்களையும்) தம்மிடமிருந்து பெற்றுச் சென்றதாக அவர்கள் தெரிவித்தனர்.

நூறுக்கும் மேற்பட்ட மீனவர்களின் கடல் அனுமதிப்பத்திரங்களை கடற்படையினர் பெற் றுக்கொண்டதை அடுத்து, அவர்கள் தொழில் செய்யாமலேயே குருநகர் இறங்கு துறைக்குத் திரும்பியதாகவும் ஏனைய மீனவர்கள் குருந கர் இறங்கு துறைக்கும் கல்லடிக் கடற்பரப் பிற்கும் இடைப்பட்ட பரவைக் கடற்பகுதியில் மட்டும் தொழில் செய்து நேற்று மாலை திரும் பியதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

கடற்படையினரால் இவ்வாறு மீனவர் களின் கடல் அனுமதிப்பத்திரங்கள் பெறப் பட்டதை கடற்றொழிலாளர் சங்க வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன.

யாழ். குடாக்கடற்பகுதியில் மீன்பிடித் தொழில் செய்து வரும் குருநகர், பாஷையூர், கொழுத்துறை, நாவாந்துறை கடற்றொழிலா ளர் சங்கங்களின் பிரதிநிதிகள் 512 ஆவது படைப்பிரிவுப் பொறுப்பதிகாரியுடன் யாழ். குடாக்கடல் மீன்பிடித் தொழில் சம்பந்தமாக அண்மையில் கலந்துரையாடிய போது, கல்ல டிக் கடல்பகுதிக்கு அப்பால் சென்று பகலில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டது. அதன் பின்னர் மீனவர்கள் கல்லடிக்கப்பால் சுமார் 15 கடல் மைல் தொலைவில் உள்ள பாலைதீவுக் கடல் பகுதிவரை சென்று நாளாந்தம் பகலில் மீன்பிடித்து வந்தனர்.

மீனவர்களின் கடல் அனுமதிப்பத்திரங்கள் நேற் றுப் பறிமுதல் செய்யப்பட்டதனால் கல்லடி தொடக் கம் பாலைதீவு வரை உள்ள ஆழ்கடல் பகுதி யில் மீன்பிடிக்க முடியாத நிலை ஏற்படலாம் என மீனவர்கள் அச்சம் தெரிவித்ததுடன் இக் கடற் பரப்பில் விதைக்கப்பட்டுள்ள தமது வலைகள், கம்புகளை மீட்கமுடியாத நிலை உருவாகுமோ என்ற கவலையையும் வெளியிட்டனர். (அ-51)

## மாகாண சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அ.க.பிரதிநிதிகள் குழுவின் புதிய யோசனை யில் - உத்தேச அதிகாரப் பரவல் முறையில் - மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் பொதுவான ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட அதி காரப் பட்டியல் முறை இருக்கமாட்டாது என் றும் அவர் விவரித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

* மாகாண சபைகளின் நிர்வாகத்தில் மத் திய அரசு தலையிடாத முறையில் மாகாண சபையின் தலா 8 பிரதிநிதிகளைக் கொண்ட மேல் சபை ஒன்று உருவாக்கப்படும்.
* மாகாண சபைகளுக்கு பரவல் செய்யப் பட்ட அதிகாரங்களை வாபஸ் பெறும் அல் லது ரத்துச்செய்யும் சட்டவிதிகள் எதனை யும் நாடாளுமன்றம் நடைமுறைப்படுத்து வதனை மேல்சபை தடுக்கும்.
* மாகாண சபைகளின் அதிகாரங்களை ரத்துச் செய்வது அல்லது மாற்றம் செய்வதாயின் நாடாளுமன்றம் மற்றும் மேல் சபைகளின் கூட் டத்தில் மட்டுமே நிறைவேற்றப்பட முடியும்.
* புதிய நகல் வரைவு ஒன்று விரைவில் இயற்றப்படும். ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப் படுவதற்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி யின் கருத்துக்கள், சேர்க்கைகள் கேட்டறிந்து ஆவன செய்யப்படும்.
* தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை களை பூர்த்தி செய்யும் அரசியல் தீர்வு ஒன் றைக் கொண்டு வருவதற்கு ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தமது பங்களிப்பை, திட்டங்களை எவ்வாறு நல்கு கிறார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது. (அ)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

57 ஆவது படையணியினருக்கும் விசேட அதிரடிப் படையினருக்கும் உதவியாக வெற்றி கரமாக இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட் டன என விமானப் படைப் பேச்சாளர் விங்கொமாண் டர் ஜானக நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கணனி கருத்தரங்கு GIT A/L 2009
Mr.S.S.SELVA
(கணனி ஆசிரியர்)
நிறுவனத்தில் தொடர்பு கொண்டு நேர அட்டவணையை பெற்றுக் கொள்ளவும்
The Science Corner
Clock Tower Lane, Jaffna.

Group Classes (Gr-10,11)
விஞ்ஞானம் (ஆங்கில மொழி மூலம்)
By.P.RAGUMAR
ஆரம்பம்:- 15.12.2008
(திங்கள்) 6.30 A.M.
75, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

## அடம்பனிலும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் அக்கராயன் குளத்துக்கு வடக்கே கேயும் இந்த மோதல்கள் இடம்பெற்றன என்றும்-

இந்த மோதல்களில் விடுதலைப்புலி களுக்கு பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளது. விடுத லைப்புலிகளின் மோட்டார் தாக்குதலில் சில படையினர் காயமடைந்துள்ளனர் - என்றும் - படைத்தரப்பு மேலும் தெரிவித்துள்ளது.

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக முல்லைத்தீவு நகரை படை யினர் அண்மித்துள்ளனர் என்று படைத்தரப்பு விவரித்திருக்கிறது.

மேற்கூறப்பட்ட படை நடவடிக்கைகளின் போது விடுதலைப்புலிகளுடன் இடம் பெற்ற மோதல்களில் புலிகளுக்கு பலத்த சேதம் விளைவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

## முன்னேஸ்வரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸார் வீடுவீடாகச் சோதனை நடவடிக் கையில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் காலை 6 மணிமுதல் 10 மணிவரை இடம்பெற்ற இந்தச் சோதனை நட வடிக்கையில் இரு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## பிரணாப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுடன் பேச்சுக்களை நடத்தவிருக் கின்றார் என்று கப்பல்துறை அமைச்சர் ரி.ஆர் பாலு தெரி வித்திருந்தார்.

ஆனால் நாடாளுமன்றத்தின் மாரிகாலக் கூட்டத் தொடரில், மும்பைத் தாக்குதலில் பாகிஸ்தானின் பங்கு மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தல் ஆகியன முக்கியமாக ஆராயப்பட வுள்ளதால், வெளிவிவகார அமைச்சர் அப்போது பிரசன்னமாக இருக்க வேண்டியுள்ளது என்றும் இதன்காரண மாக உத்தேச இலங்கை விஜயத்தை அவர் பிற்போட வேண்டி உள்ளது என்றும் - ராஜ தந்திர வட்டாரங்கள் இங்கு தெரிவித்துள்ளன. எனினும் அவரது இலங்கை விஜயம் இயன்றளவு விரைவில் நடைபெறும் என்றும் அந்த வட்டாரங் கள் மேலும் தெரிவித்தன. (அ-1)

## வன்னி மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னி சென்ற ஆயர் முல்லைத்தீவு, கிளிநொச் சிப் பகுதி மக்களுடன் கலந்துரையாடி அவர் களின் அவலங்களை, இன்னல்களைக் கேட் டறிந்தார். அங்கு பணிபுரியும் குருமார்களுட னும் அவர் கலந்துரையாடினார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு சூசை யப்பர் ஆலயத்தில் தங்கியிருந்து, மக்களுக்கு இறை ஆசி வேண்டி விசேட திருப்பலியை ஆயர் ஒப்புக்கொடுத்துள்ளார் என யாழ்.ஆயர் அலுவலக செயலாளர் றொசான் அடிகளார் தெரிவித்தார். (அ-1)

## வட்டக்கச்சி, கனகபுரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டக்கச்சியில் இடம்பெயர்ந்த மக்கள் வாழும் கட்சன் வீதி, தகரப் பிள்ளையார் கோயிலடி மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து நேற்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு படையினர் செறிவான எறிகணைத் தாக்கு தலை நடத்தினர்.

கட்சன் வீதி மற்றும் குடிமத்தி மக்கள் குடி யிருப்புக்களில் சரமாரியாக எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன.

இதன் போது, வீட்டில் துணி ஏணையில் உறங்கிக் கொண்டிருந்த ஐந்துமாதக் குழந்தை யான ஜெயரூபன் அஜந்தா கொல்லப்பட்டுள் ளதுடன் குழந்தையின் தாயார் ஜெயரூபன் ஜேம்ஸ்ராணி (வயது-26) படுகாயம் அடைந்த நிலை யில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

இப் பகுதி ஏற்கனவே சிறிலங்காப் படை யின் எறிகணைத் தாக்குதலில் ஆறு வயதுச் சிறுமி பாடசாலைச் சீருடையில் படு கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை-

கனகபுரம் பகுதியில் உள்ள தமது வீடு களை பார்வையிடச் சென்றவர்கள் மீது நேற்று சனிக்கிழமை சிறிலங்காப் படையி னர் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

அதில் கொல்லப்பட்ட இருவரின் சடலங் கள் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டன.

விசுவமடு புத்தடியில்இடம்பெயர்ந்து வசித்து வரும் இராமையா பாலேந்திரன் என்பவரே கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப் பட்டுள்ளார். மற்றவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இத் தாக்குதலில் காயமடைந்தவர் பெரிய குளம், புளியம்பொக்கணையில் வசித்து வந்த தம்பிஜயா யசீகரன் (வயது-17) என அடையாளம் காணப்பட்டுள்ளார். (அ-1)

## கிளிநொச்சியை கைப்பற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்புத் தளபதி வேலவன்.

கிளிநொச்சியில் இராணுவத்துக்கு எதி ராக தாக்குதலை நடத்தி பேரிழப்பைக் கொடுத்த போராளிகளுக்கு கண்டாவளை, விசுவமடுக் கோட்ட மக்களால் உலர் உணவு வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி களமுனையில் இடம்பெற் றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே தளபதி வேலவன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது: ஏற் றத் தாழ்வாக மாறி மாறி நடக்கின்ற ஒரு நிலைமைதான் இந்தப் போரியல் என்பது. இந்தப் போரையும் அப்படித்தான் பார்க்கி றோம். இன்றைக்கு எங்கள் குறிக்கப்பட்ட இடங்கள் விடுபட்டிருக்கின்றன. அது யதார்த் தமான உண்மை. ஆனால், இன்றைக்கு நாங் கள் முன்னணிப் படைகளை அழித்தும் வரு கின்றோம். செவ்வாய்க்கிழமை நடந்த சண் டையில் ஸ்ரீலங்காப் படையினரின் 57 ஆவது டிவிஷனில் இரண்டு பிரி கேட்டுகள் முற்று முழுதாக பங்குபற்றின. இவர்கள் இரண்டு பிரதான உடைப்புக்களை ஏற்படுத்தி கிளி நொச்சியின் குறிக்கப்பட்ட பிரதேசங்களைப் பிடிப்பதற்கு பெரியளவில் நகர்வைச்செய் தனர்.

### அதி உச்சமான சண்டை

அப்பிரதேசங் களைப்பிடித்து வைத் திருக்க முடியாத அள வுக்கு முறியடிப்புச் சமரை நாம் செய்துள் ளோம். இதில் படை யினரின் சடலங்கள், ஆயுதங்கள் என்பன கைப் பற்றப்பட்டுள் ளன. அதனால் சண்டை மாற்றம் அடைந்துள் ளது. முற்று முழுதாக கிளிநொச்சியைப் பாதுகாப்பதற்கு அதி யுச்சமான சண்டை நடந்து கொண்டி ருக்கிறது.

கிளிநொச்சியைப் பொறுத்தவரையில் அறிவியல் நகர், புது முறிப்புக் குளம் ஊடாக எடுத்தமுன் நகர்வும் குஞ்சுப் பரந்தன் ஊடாக எடுத்த நகர்வும் தான் பெரிய முன் நகர்வுகள். அவற்றை முற்று முழுதாக முறி யடித்து விட்டோம்.

இன்றைக்கு சண்டைபிடிக்கின்ற படை யினர் தாங்கள் கேட்கின்ற எறிகணைகளை அடித்துக் கொடுக்கக்கூடிய அளவில் படையின ரின் பீரங்கிப் படைகள் இல்லை. அவர்களும் கடைசிக் கட்டத்தில் தான் இருக்கிறார்கள். மக் களைப் பொறுத்த வரையில் நீங்கள் தெளி வாக இருக்க வேண்டும். இனி எப்படி மாற்றங் களை உருவாக்கலாம் என்பதைப் புரிந்திருக்க வேண்டும் - என்றார் சிறப்புத் தளபதி. (அ-2)

ICT மாணவர்களுக்கு ஓர் அறிவித்தல்
எனது வகுப்புக்கள் யாவும் புதிய இடத்தில் இன்று தொடக்கம் (14/12/2008) நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன்
Grade 10 / Grade 11 புதிய பிரிவுகள் ஆரம்பம்
R.Kumaran-B.Sc. (Computing & IS)
74, சபாபதி வீதி, தலையாழி, யாழ்ப்பாணம்.
T.P. No: 0776577359, 060 221 6083

தகவல் தொழிநுட்ப கருத்தரங்கு - A/L 2009
GIT
விரிவுரையாளர் குழு
Mr.N.Sujeevan, Mr.S.Mayurathas, Mr.S.S.Selva
கருத்தரங்கு நடைபெறும் நிறுவனங்கள்

| இல | நிறுவனம் | அமைவிடம் | நேர அட்டவணை |
|---|---|---|---|
| 01 | யூனிவேர்சல் | யா/இந்து மகளிர் அருகாமை | 16.12.2008 செவ்வாய் 7.00 am |
| 02 | DMI | நாவலர் வீதி, யாழ் நகர் | 17.12.2008 புதன் 10.00 am |
| 03 | நிஷ் கல்வி நிலையம் | இறுதியில் | 18.12.2008 வியாழன் 4.30 pm |

குறிப்புகள்: * துறைசார் அனுபவம் பெற்ற கணனி விரிவுரையாளர் குழு.
* தமிழ், ஆங்கில பாடக்குறிப்புகள் வழங்கப்படும்.
* முற்றிலும் எதிர்பார்க்கப்படுகின்ற மாதிரி வினா விடை வகுப்பு

மீண்டும் யாழ் நகரில்
பொருளியல்
S.ஜெயக்குமார் (B.A.HONS, ECO. Spl)
ஆரம்பம்:- இன்று (14.12.2008) ஞாயிறு 1.00 pm, 3.00 pm

| A/L 2009 | A/L 2010 |
|---|---|
| பகுதி II சர்வதேச வர்த்தகமும் நிதியும் | பகுதி I சந்தைப் பொருளாதாரம் |

★ A/L 2010 மாணவர்களுக்கு வழமையான கட்டணத்தில் "பொருளியல் அறிமுகம்" கற்பிக்கப்படும்
★ வாரத்தில் 10 மணித்தியாலங்கள்
ஐடியல் அக்கடமி
திராவியடி, யாழ் நகர். யாழ் வீதி, மானிப்பாய்.

CHEMISTRY
(Group Class)
2010 A/L
INORGANIC
DIAS B.Sc (Hons) Sp
M,T,W- 4.30- 6.00
College of Chemistry
32, பழம் றோட், கந்தர்மடம்.

பொருளியல்
N.B.கஜிதரன்
A/L 2010
பேரினப் பொருளாதாரம்
Sat- Sun-3 - 4 pm
சந்தைச் சமநிலை
Mon - Fri - 4 - 5 pm
A/L 2009
பணம், வங்கி, விலைமட்டம்
Mon - Fri - 8 - 9 am
SHAMROCK
ஏச்சமோட்டை.

மகளிருக்கு ஓர் அரிய வாய்ப்பு
கட்டணச் சலுகையுடன்
அட்சயா
அழகுக் கலை பயிலகம்
மேக்கப் பயிற்சி நெறி ஆரம்பம்
★ கிறிஸ்தவ மணப் பெண் அலங்காரம்- 16.12.2008
★ குஜராத் மணப் பெண் அலங்காரம் - 18.12.2008
★ குப்தாள் (சிங்கப்பூர்) மணப் பெண் அலங்காரம் - 20.12.2008
★ மொடேன் அலங்காரம் - 22.12.2008
★ சிங்கள மணப்பெண் அலங்காரம் - 24.12.2008
★ இந்து மணப்பெண் அலங்காரம் - 27.12.2008
மேற்படி வகுப்புக்களில் கலந்து கொள்பவர்களுக்கு அடிப்படை மேக்கப் கலை பற்றிய விளக்கவுரை
கறுப்பு, பொதுநிற, வெள்ளை நிறமான பெண்களிற்கு எவ்வாறான பொருத்தமாக மேக்கப் செய்வது பற்றிய அனைத்து முறைகளி லும் பயிற்சி அளிக்கப்படும்.
* உடன் பதிவு செய்பவர்களுக்கு கட்டணச் சலுகை வழங்கப்படும்.
* றிச் கேக் ஒடருக்கு செய்து தரப்படும் (ஒன்று ரூ. 25/= மட்டுமே)
அட்சயா அழகுக் கலையகம்,
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

மலிவு விலையில்......
திருமண அழைப்பிதழ்கள்
ADORNA CARDS
www.andradesigns.com
விசேட விலைக்கழிவு 10%



புதிய வடிவமைப்பில் உருவாக்கம் பெற்ற அழகிய
திருமண அழைப்பிதழ்களை
எமது இணையத்தளத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ பார்வையிட்டு பிறிண்ட் வசதியுடன் பெற்றுக்கொள்ள முடியும்
நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்
ANDRA DIGITAL IMAGE
# 356A, கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகாமை)
# 6B, உப்புமடம் சந்தி,கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.
இணையத்தள முகவரி : www.andradesigns.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org